ஆரசியல் விளக்க வெளியீடு

கி. பிரகோவ்

# உலக சோஷலிஸ்ட் அமைப்பு

முன்னேற்றப் பதிப்பகம்

அரசியல் விளக்க வெளியீடு

கி. பிரகோவ்

# உலக சோஷலிஸ்ட் அமைப்பு

1568

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

**Пирогов Г.**

“МИРОВАЯ СОЦИАЛИСТИЧЕСКАЯ СИСТЕМА”

*на тамильском языке*

**G. Pirogov**

WORLD SOCIALIST SYSTEM

*in Tamil*

**விற்பனையாளர்கள்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்**
**பிரைவேட் லிமிடெட்**
**தலைமை அலுவலகம்**
*41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,*
*சென்னை—600098.*

© Progress Publishers, 1982

© தமிழ் மொழிபெயர்ப்பு

முன்னேற்றப் பதிப்பகம், 1986

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

П $\frac{0302030101-327}{014(01)-86}$ 346-86

# பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . 5

1. உலக சோஷலிஸ்ட் அமைப்பின் உருவாக்கம் . . . . . . . 8

2. சகோதர மக்களினங்களின் குடும்பம் . . . . . . . . . . 74

பொருளாதார ஒத்துழைப்பு . . . 76

அரசியல் மற்றும் இராணுவக் கூட்டணி . . . . . . . . . 102

சித்தாந்தத் துறையில் ஒத்துழைப்பு . 111

கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டணி . . 116

3. சர்வதேச அரங்கத்தில் கூட்டு நடவடிக்கை . . . . . . . 126

4. சோஷலிஸ்ட் நாடுகளும் விடுதலை இயக்கமும் . . . . . 159

# முன்னுரை

உலக சோஷலிஸ்ட் அமைப்பு எனப்படுவது சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிக்கின்ற, பொது இலட்சியங்கள், அக்கறைகள் மற்றும் சர்வதேச ஒருமைப்பாட்டினால் ஒன்று சேர்ந்திருக்கின்ற சுதந்திரமான, அரசுரிமை கொண்ட மக்களினங்களின் கூட்டணியாகும். இக்கூட்டணியின் சுற்றெல்லைக்குள் சர்வதேச சோஷலிஸ்ட் உழைப்புப் பிரிவினை தோன்றி யிருக்கிறது, அது எல்லாத் திசைகளிலும் விரிவு படுத்தப்பட்டு வருகிறது, சுயேச்சையான சந்தை உருவாக்கமடைந்து வருகிறது, நெருக்க மான பொருளாதார, அரசியல் மற்றும் கலா சார ஒத்துழைப்பு விரிவடைந்து கொண்டிருக் கிறது.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக் கும் சோவியத் யூனியனில் சோஷலிசத்தின் வெற்றிக்கும் பிறகு நடைபெற்றிருக்கும் மிகவும் முக்கியமான வரலாற்றுச் சம்பவம் உலக சோஷ லிஸ்ட் அமைப்பின் உருவாக்கமே. சமூக முன்

னேற்றத் துறையில் புதிய சாதனைகளை அடைந்த சோஷலிஸ்ட் குடும்பம் தொடர்ச்சியாகத் தன்னுடைய பலத்தை அதிகரித்துக் கொண்டிருக்கிறது; அதுவே நம் காலத்தின் முக்கியமான புரட்சிகர சக்தியாகவும் எல்லா விடுதலை இயக்கங்களுக்கும் மிகப்பெரும் ஆதரவுக்குரிய தோற்றுவாயாகவும் இருக்கிறது. எல்லா இடங்களிலும் பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாசார நிகழ்வுப் போக்குகள் அனைத்துமே ஓரளவுக்கு உலகத்தின் இரண்டு சமூக-பொருளாதார அமைப்புக்களுக்கு — சோஷலிச அமைப்புக்கும் முதலாளித்துவ அமைப்புக்கும் — இடையிலுள்ள உறவுகளைப் பொறுத்திருக்கின்றன. ஒரு புதிய சமூகத்தை நிர்மாணிப்பதில் சோஷலிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த மக்களினங்களின் சாதனைகள் தொழிலாளி வர்க்க மற்றும் தேசிய விடுதலை இயக்கங்கள் ஓங்கி வளர்வதை, உலக சமாதானம், ஜனநாயகம் மற்றும் தேசிய சுதந்திரம் பலமடைவதை, உலக முழுவதிலும் சோஷலிசத்துக்கான போராட்டத்தை ஊக்குவித்திருக்கின்றன.

சோஷலிசம் பலமடைவதும் ஏகாதிபத்தியம் மற்றும் பிற்போக்குவாதத்தின் அடாச் செயல்களுக்கு எதிராக அது தன்னுடைய நிலைகளை பலப்படுத்திக் கொள்வதும் முற்போக்கு சக்திகளுக்கும் ஜனநாயக சக்திகளுக்கும் கேந்திரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவின் பரந்த பிரதேசங்களில்

சுதந்திரமான மக்களினங்கள் நிர்மாணித்துக் கொண்டிருக்கின்ற புதிய உலகத்துக்கு, சமூக நீதி நிலவுகின்ற உலகத்துக்கு உழைக்கும் மக்களின் ஆதரவு எங்கும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அது எதிர்கால சமூகத்தின் மாதிரிப் படிவமாகும்.

# 1. உலக சோஷலிஸ்ட் அமைப்பின் உருவாக்கம்

உலக சோஷலிஸ்ட் அமைப்பு சமூக வளர்ச்சியின் இயற்கையான விளைவு. நாகரிகம் கீழ் வடிவங்களிலிருந்து உயர் நிலையான வடிவங்களுக்கு வளர்ச்சியடைவதில் சோஷலிசம் ஒரு தவிர்க்க முடியாத கட்டம் என்று கருதிய, புரட்சிகரத் தத்துவத்தின் மாபெரும் மூலவர்களான கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் அதன் உருவாக்கத்தை முன்னறிவித்தார்கள். நிலப்பிரபுத்துவம் அடிமை முறையை அகற்றியதைப் போல, அதற்குப் பிறகு முதலாளித்துவம் நிலப்பிரப்புத்துவத்தைப் படிப்படியாக அகற்றியதைப் போல சோஷலிசம் தவிர்க்க முடியாத வகையில் முதலாளித்துவ அமைப்புக்குப் பதிலாக இடம் பெறும், சுரண்டலை ஒழிக்கும். முதலாளித்துவம் உலக ரீதியில் ஒரே சீராக வளர்ச்சியடைந்து கொண்டிருந்ததால் எல்லா நாடுகளிலும் அநேகமாக ஒரே சமயத்தில் சோஷலிஸ்ட் மாற்றங்களைக் கொண்டுவர முடியும் என்று மார்க்சும் எங்கெல்சும் கருதினார்கள்.

ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் மாபெருந்

தலைவரான வி. இ. லெனின் மார்க்ஸ், எங்கெல்சி னுடைய தத்துவத்தை மேலும் வளர்த்துக் கூறினார். முதலாளித்துவத்தின் புதிய கட்ட மாகிய ஏகாதிபத்தியக் கட்டத்தின் நிலைமை களுக்கு அதைக் கையாண்டார். சோஷலிஸ்ட் புரட்சி ஒரு நாட்டில் அல்லது சில நாடுகளில் நடைபெற முடியும், சமூக வ்ளர்ச்சியின் புதிய கட்டத்துக்கான மாற்றம் முழு வரலாற்றுச் சகாப்தமாகவும் இருக்க முடியும் என்று அவர் எடுத்துக்காட்டினார்.

அதுவே உண்மையில் நடைபெற்றது.

முதலாளித்துவ அமைப்பின் முரண்பாடு களின் வளர்ச்சியினாலும் புரட்சிகர இயக்கங் களின் தாக்குதலினாலும் ஏகாதிபத்தியச் சங்கிலி யில் நொறுங்கிய முதல் கண்ணி ஜாரிஸ்ட் ருஷ்யா வாகும். அது நடுத்தரமான வளர்ச்சியடைந்த முதலாளித்துவ அரசு; அங்கே விவசாய உற்பத்தி மேலோங்கியிருந்தது; ஆழமாக வேரூன்றிய நிலப்பிரபுத்துவத்தின் எச்சமிச்சங்கள் இருந்தன; பலம்பொருந்திய எதேச்சாதிகார ஆட்சி நடை பெற்றுக் கொண்டிருந்தது. நாட்டின் பொருளா தார மற்றும் சமூக வாழ்க்கையில் கேந்திரமான நிலைகளைப் பெற்றிருந்த தொழிலாளி வர்க்கம் பெருந்திரளான ம்க்களுக்குத் தலைமை வகித் தது. அது விவசாய வர்க்கத்தைப் போன்று பெரிய அளவில் இல்லாவிட்டாலும் சிறப்பான அமைப்பைக் கொண்டிருந்தது, கல்வி பெற்றிருந் தது, வளமான புரட்சிகர அனுபவத்தைக் கொண் டிருந்தது; லெனின் தலைமை தாங்கிய, வர்க்கப்

போராட்டங்களில் உருக்குப் பெற்று, உறுதி யடைந்த போல்ஷிவிக் கட்சி அதற்கு வழிகாட்டியது.

ருஷ்யாவில் 1917 அக்டோபரில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி உலக முதலாளித்துவ அமைப்புக்கு முதல் அடியைக் கொடுத்தது. பூமியின் நிலப்பரப்பில் ஆறிலொரு பகுதியையும், உலக மக்கள் தொகையில் பத்திலொரு பகுதியையும் கொண்டிருந்த மாபெரும் நாட்டை அது இழந்தது. இப்புரட்சி ஒரு புதிய வரலாற்றுச் சகாப்தத்தை, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாற்றமடைகின்ற சகாப்தத்தைத் தொடங்கி வைத்தது. முதலாளித்துவ நாடுகள் மற்றும் முதலாளித்துவத்துக்கு முந்திய அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சேர்ந்து வாழ்ந்த சோஷலிஸ்ட் அமைப்பு தன்னை வலியுறுத்திக் கொள்ளத் தொடங்கியது.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி பல நாடுகளில் புரட்சிகர எழுச்சியைத் தூண்டியது; சில ஐரோப்பிய நாடுகளில் பாட்டாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது. ஆனால் இப்புரட்சிகரக் குடியரசுகள் தம்மைக் காட்டிலும் அதிகமான பலத்தைக் கொண்ட ஸ்தல மற்றும் சர்வதேச முதலாளி வர்க்கத்துடன் சண்டையில் வெற்றிபெறுகின்ற அளவுக்கு வலிமையைக் கொண்டிருக்கவில்லை. ஆசியாவைச் சேர்ந்த இரண்டு நாடுகளில் மட்டுமே புரட்சிகள் வெற்றி பெற்றன. மங்கோலியாவில்

நடைபெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப் பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சியின் விளைவாக 1921இல் அங்கே மக்கள் ஜனநாயகக் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது. அடுத்தபடியாகத் துவாவில் தேசிய விடுதலைப் புரட்சி வெற்றி யடைந்தது, அதே வருடத்தில் மக்கள் குடியரசு நிறுவப்பட்டது. ஆனால் இந்த இரண்டு நாடு களில் ஏதாவதொன்றில் கூட சோஷலிசத்தை நிர்மாணிக்கின்ற பிரச்சினை எழுவேயில்லை.

அக்டோபர் புரட்சி வெற்றியடைந்து முப்ப தாண்டுகள் வரையிலும் சோஷலிஸ்ட் அமைப்பை சோவியத் யூனியன் என்ற ஒரேயொரு நாடு தான் பிரதிநிதித்துவம் செய்தது. அந்த நாடு பல வருடங்கள் புரட்சிகர மாற்றப் பாதையில் தன்னந்தனியாகச் சென்றது, பழைய உலகத்தின் தாக்குதல்களை முறியடித்தது. ஆனால் சோவியத் மக்கள் தமக்கேற்பட்ட கடுமையான சோதனை களைத் தாங்கிக் கொண்டார்கள்; உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு எதிரிகளின் சூழ்ச்சி களை முறியடித்தார்கள். அவர்கள் உலக முழு வதிலுமுள்ள உழைக்கும் மக்களின் ஆதரவைப் பெற்று புதிய சமூகத்தைப் படைத்துத் தங்களுடைய நாட்டை உலகப் புரட்சிகர இயக்கத்தின் அரணாக மாற்றினார்கள்.

இனி ருஷ்யாவைப் பின்பற்றப் போகின்ற முதல் நாடு எது? இதற்கு பதில் பல வரலாற்று சந்தர்ப்பங்களையும் முதலாளித்துவத்துக்கு எதி ரான உலகப் போராட்டத்தின் குறிப்பிட்ட நிலைமையையும் பொறுத்திருந்தது. இதற்கு

பதில் இப்பொழுது தெரிந்து விட்டதென்பது உண்மையே. இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவிலும் அதற்குப் பின்னரும் ஐரோப்பா விலும் ஆசியாவிலும் உள்ள சில நாடுகளில் புரட்சிகள் ஏற்பட்டன. அவை ஏன் ஏற்பட் டன?

புரட்சிகள் வெற்றியடைந்த நாடுகளை நுணுக் கமாக ஆராய்கின்ற பொழுது அவற்றுக்கிடை யில் பல பொதுவான கூறுகள் வெளிப்படு கின்றன.

எல்லாவற்றுக்கும் முதலாவதாக, ஜெர்மனி யையும் செக்கோஸ்லோவாக்கியாவையும் தவிர அநேகமாக எல்லா நாடுகளுமே பிரதானமாக விவசாய நாடுகள்; அங்கே நடுத்தர அல்லது கீழ்மட்ட வளர்ச்சி நிலவியது, நிலப்பிரபுத்துவ எச்சமிச்சங்கள் ஆழமாக வேரூன்றியிருந்தன. அல்பேனியா அரைக்காலனி நாடாக இருந்தது; அங்கே முதலாளித்துவ உறவுகள் அப்பொழுது தான் உருவாகத் தொடங்கியிருந்தன, தொழி லாளி வர்க்கத்தின் எண்ணிக்கை மிகவும் சிறிய அளவில் இருந்தது. உலகத்திலேயே மிகவும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட சீனா பொருளாதார ரீதியில் பின்தங்கிய நாடாக இருந்தது.

இந்த நாடுகள் எல்லாவற்றிலும் அந்நிய மூலதனம் பலமான நிலைகளைக் கொண்டிருந் தது. அதன் விளைவாக உழைக்கும் மக்கள் மிகப்பெரிய அளவுக்குச் சுரண்டப்பட்டது மட்டு மல்லாமல், ஸ்தல மற்றும் அந்நிய முதலாளி

வர்க்கத்துக்கு இடையில் முரண்பாடுகளும் ஏற்பட்டன. மொத்தத்தில் ஏகாதிபத்திய அரசுகள் சார்பு நாடுகளின் வளர்ச்சியைப் பின்னுக்குத் தள்ளுவதற்கு முயற்சி செய்தன, மூலப் பொருள்கள் மற்றும் விவசாய உற்பத்திப் பொருள்களின் தோற்றுவாயாக மட்டுமே அவற்றைப் பயன்படுத்தின.

இந்த நாடுகளில் விவசாயம் வளர்ச்சி குன்றியிருந்தது; நாட்டுப்புறப் பகுதிகளில் ஈவிரக்கமில்லாத சுரண்டல்முறை நிலவியது. இது விவசாயிகளைப் புரட்சிகரமாக்கி, அவர்கள் தொழிலாளி வர்க்க நடவடிக்கையில் ஒன்றுசேரக் கூடிய நிலைமைகளை ஏற்படுத்தியது.

மேலும் இந்த நாடுகளில் பிற்போக்குவாத ஆட்சிகளின் ஆதிக்கத்தினால் ஏற்பட்ட நெருக்கடியான அரசியல் நிலைமை மற்றொரு பொதுவான அம்சமாகும். இந்த நாடுகளில் பல ஜெர்மானியப் பாசிசத்தின் நுகத்தடியின் கீழ் இருந்தபடியால் இவற்றில் பாசிச எதிர்ப்புப் போராட்டம் வளர்ச்சியடைந்திருந்தது. இந்த நாடுகளின் உள்நாட்டு வாழ்க்கையில் மிகவும் முக்கியமான கூறாக இருந்த பாசிச எதிர்ப்புப் போராட்டம் மாபெரும் தேசபக்த யுத்தத்தின் (1941—1945) போது பாசிச ஆக்கிரமிப்பை எதிர்த்து சோவியத் மக்கள் நடத்திய போராட்டத்துடன் இணைந்து நடைபெற்றது.

பாசிச எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது பெருந்திரளான மக்களின் புரட்சிகர நடவடிக்கை வளர்ச்சியடைந்தபடியால்

மத்திய மற்றும் தென் கிழக்கு ஐரோப்பாவின் முதலாளி வர்க்க-நிலப்பிரபுத்துவத் தலைமையும் அரசியல் கட்சிகளும் அரசியல் வாழ்க்கையின் மீது தம்முடைய ஆதிக்கத்தை இழந்தன. அங்கே புரட்சிகரமான நிலைமை தோன்றியது. இந்த நாடுகளில் கம்யூனிஸ்டுகள் சரியான செயல் திட்டத்தையும் செயல்முறையையும் கடைப் பிடித்ததன் விளைவாக இது புரட்சியாகப் பரிணமித்தது.

இதன் தொடர்பாக இந்த நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டும். 1919இல் நிறுவப்பட்ட கம்யூனிஸ்ட் அகிலம் ஐரோப்பா, ஆசியா மற்றும் இதர கண்டங்களைச் சேர்ந்த பல நாடுகளில் போர்க்குணம் மிகுந்த கம்யூனிஸ்ட் கட்சிகளை நிறுவுவதற்கும் மக்களுடன் அவற்றின் உறவுகளை பலப்படுத்துவதற்கும் உதவியளித்தது. ஜனநாயகம், சோஷலிசம், தேசிய விடுதலை மற்றும் சுதந்திரப் போராட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகள் பெரும்பங்கு வகித்தன.

இரண்டாவது உலக யுத்தத்தில் (1939—1945) பாசிசத்தை எதிர்த்து சோவியத் யூனியன் நடத்திய வெற்றிகரமான போராட்டமும், அதன் விளைவாக சக்திகளின் சமநிலையில் ஜனநாயகத்துக்கும் சோஷலிசத்துக்கும் ஆதரவாக ஏற்பட்ட மாற்றமும் புரட்சிகர இயக்கத்தின் வெற்றிக்குப் பெரும் பங்களித்தன.

மத்திய ஐரோப்பா மற்றும் தென் கிழக்கு

ஐரோப்பாவைச் சேர்ந்த நாடுகளில் யுத்த நடவடிக்கைகளின் போது சுரண்டும் வர்க்கங்களுக்கு ஆதரவு கொடுத்த இராணுவ மற்றும் அரசியல் இயந்திரம் அழிக்கப்பட்டதனால் புரட்சிகர சக்திகளின் பணி சுலபமாயிற்று. சோவியத் இராணுவம் பாசிசப் படைகளின் பெரும்பகுதியை முறியடித்ததும் பல ஐரோப்பிய நாடுகளை விடுதலை செய்ததும் புரட்சிகர சக்திகளுக்கு உதவியாக இருந்தன.

ஆனால் உள்நாட்டில் புரட்சிகர சக்திகளின் நடவடிக்கைகளே புரட்சிகளின் வெற்றியை நிர்ணயித்தன. 1944க்கும் 1949க்கும் இடையில் போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, பல்கேரியா, ஹங்கேரி, ருமேனியா, யூகோஸ்லாவியா, அல்பேனியா, வட வியத்நாம், வட கொரியா, சீனா ஆகிய நாடுகளில் ஏகாதிபத்தியக் கூட்டணி நொறுங்கியதைச் சுட்டிக் காட்டுகின்ற புரட்சிகர மாற்றங்கள் ஏற்பட்டன.

இந்த நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றங்களின் முக்கியமான கட்டங்களை இங்கே எடுத்துரைப்போம்; இவை உலக சோஷலிஸ்ட் அமைப்பு கணிசமாக விரிவடைவதற்கு வழி வகுத்தன.

1944—1945இல் சோவியத் துருப்புகளும் போலிஷ் இராணுவமும் போலந்திலிருந்து பாசிச ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடித்தன. விடுதலையடைந்த பிரதேசத்தில் பொது மக்களது அரசாங்கம்—தேசிய விடுதலைக்கான போலந்து

கமிட்டி — நிறுவப்பட்டது. தொழிலாளர்கள் கட்சிகள், தொழிற்சங்கங்கள், விவசாயிகள் கட்சி மற்றும் இதர முற்போக்கு ஸ்தாபனங்கள் ஏற்படுத்திய தேசிய முன்னணி புதிய அரசு அதிகார அமைப்புகளை அமைத்தது. அவை மக்கள் இராணுவத்தையும் அரசுப் பாதுகாப்புக்குரிய உறுப்புகளையும் மிலிஷியாவையும் அமைத்தன. தொழில்துறையில் பொதுத்துறை ஏற்படுத்தப் பட்டது. மேலும் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாக்டரி கமிட்டிகள் எல்லா தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தையும் மேற்கொண்டன. 1946ம் வருட ஆரம்பத்தில் பெரிய தொழில் நிறுவனங்களும் நடுத்தர தொழில் நிறுவனங்களும் தேசவுடைமையாக்கப்பட்டது முதலாளி வர்க்கத்தின் பொருளாதார நிலைகளை அரித்தழித்தது. இதற்கு முன்னர், 1944ம் வருடத்தின் இலையுதிர் காலத்தின் போது துவக்கப்பட்ட விவசாய சீர்திருத்தம் நிலப்பிரபுக்கள் என்ற வர்க்கத்தை முற்றிலும் ஒழித்து ஒரு மில்லியனுக்கும் அதிகமான விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் கொடுத்தது. தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் முர்க்கமான எதிர்ப்பை முறியடித்துத் தன்னை பலப்படுத்திக் கொண்டு விவசாயிகளுடன் தன்னுடைய கூட்டணியை வலுப்படுத்தி, சமூகத்தின் உண்மையான தலைவன் என்ற அங்கீகாரத்தைப் பெற்றது. 1949இல் போலந்து சோஷலிச நிர்மாணத்தைத் தொடங்கியது.

1944 செப்டெம்பரில் பல்கேரியாவில் மக்கள்

எழுச்சி பாசிச அரசாங்கத்தைத் தூக்கியெறிந்தது. அந்த எழுச்சியில் தொழிலாளி வர்க்கம் முக்கியமான சக்தியாக இருந்தது; கொரில்லாப் பிரிவுகளும் இராணுவ யூனிட்டுகளும் அதற்கு உதவியளித்தன. ஆரம்ப முதல் இப்புரட்சி சாராம்சத்தில் சோஷலிஸ்ட் புரட்சியாக இருந்தது. தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை, தேசபக்த முன்னணியில் அதன் தலைமை, உழைக்கும் மக்களின் எல்லாப் பிரிவினரும் புரட்சிக்கு அளித்த ஆதரவும் புரட்சியின் சோஷலிசத் தன்மையை உறுதிப்படுத்தின. பொருளாதாரத் துறையில் அரசுத் துறை நிறுவப்பட்டது; 1947 இறுதியில் பெரிய நிறுவனங்களும் நடுத்தர நிறுவனங்களும் தேசவுடைமை ஆக்கப்பட்ட பிறகு அரசுத் துறை தலைமையான ஆதிக்கத்தைப் பெற்றது. அதே சமயத்தில் விவசாயத்தில் சோஷலிச மாற்றங்கள் அமுலாக்கப்பட்டன, விவசாயிகள் படிப்படியாகக் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குள் கொண்டுவரப்பட்டார்கள். 1950ஆம் ஆண்டுகளின் இறுதியில் இது பூர்த்தி செய்யப்பட்டது.

சோவியத் இராணுவம் பாசிச-ஜெர்மானிய இராணுவத்தை முறியடித்தது 1943 ஜூலையில் அமைக்கப்பட்ட **அல்பேனிய** மக்கள் சுதந்திர இராணுவம் ஆக்கிரமிப்பாளர்களை 1944 நவம்பர் இறுதியில் நாட்டிலிருந்து விரட்டியடிப்பதற்கு உதவியது. தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தேசிய

விடுதலை முன்னணி அரசாங்கம் அமைக்கப் பட்டது. புதிய ஆட்சியதிகாரம் எதிர்ப்புரட்சி சக்திகளின் எதிர்ப்பை முறியடித்து, பெரிய பண்ணைகளையும் பணக்கார விவசாயிகளுக்குச் சொந்தமான நிலங்களில் ஒரு பகுதியையும் பறிமுதலாக்கியது. 1946 ஜனவரியில் அரசியல் நிர்ணய சபை அல்பேனிய மக்கள் குடியரசைப் பிரகடனம் செய்தது. மக்கள் ஜனநாயகப் புரட்சி யினால் நிறைவேற்றப்பட்ட அடிப்படையான அரசியல் மற்றும் சமூக மாற்றங்களை நாட்டின் சட்டமாக்கிய அரசியலமைப்புச் சட்டம் நிறை வேற்றப்பட்டது.

**ருமேனியாவில்** புரட்சி 1944 ஆகஸ்ட் 23இல் தொடங்கியது. ருமேனியாவின் உழைக்கும் மக்கள் சோவியத் இராணுவத்தின் வெற்றி களினால் ஏற்பட்ட சாதகமான நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு ஆயுதந்தாங்கிய எழுச் சியைத் தொடங்கி பாசிச இராணுவ சர்வாதி காரத்தைத் தூக்கியெறிந்தார்கள். தொழிலாளர் களின் ஐக்கிய முன்னணிக் கமிட்டிகள் ஸ்தல சட்ட உறுப்புகளிலிருந்து பாசிஸ்டுகளை வெளி யேற்றின; உற்பத்தி மீது தொழிலாளர்களின் நிர்வாகத்தை ஏற்படுத்தின, விவசாய சீர் திருத்தத்தை அமுல்படுத்த உதவின. 1945 மார்ச்சில் நிறுவப்பட்ட ஜனநாயக அரசாங்கம் தொழில்துறையில் கட்டுப்பாடுகளை அமுலாக் கியது, உழைக்கும் மக்களின் உரிமைகளை விஸ்தரித்தது. 1947 நவம்பரில் முதலாளி வர்க்கத் தின் எதிர்ப்புரட்சிச் சதி அம்பலப்படுத்தப்

பட்ட பிறகு, அரசாங்கத்தில் எஞ்சியிருந்த முதலாளி வர்க்கப் பிரதிநிதிகள் வெளியேற்றப் பட்டனர். டிசம்பர் 30ந் தேதியன்று முடியாட்சி ஒழிக்கப்பட்டு ருமேனிய மக்கள் குடியரசு பிர கடனம் செய்யப்பட்டது. இது தொழிலாளி வர்க்கமும் அதன் நேச சக்திகளும் சோஷலிசத்தை நிர்மாணிக்கத் தொடங்குவதற்கு உதவியாக இருந்தது.

**ஹங்கேரியில்** தற்காலிக தேசிய அரசாங்கம் 1944 டிசம்பரில் நிறுவப்பட்டது. அது பாசிச அமைப்புகளைக் கலைத்தது, மக்கள் போலீசையும் புதிய இராணுவத்தையும் தொழில்துறையைக் கட்டுப்படுத்துவதற்கு பாக்டரி கமிட்டிகளையும் அமைத்தது. பெரிய பண்ணைகளை ஒழித்து விவசாயிகளுக்கு நிலத்தைக் கொடுக்கின்ற விவ சாய சீர்திருத்தம் அறிவிக்கப்பட்டது. 1946 ஜனவரி 31ந் தேதியன்று நாட்டில் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது. கம்யூனிஸ்டுகளுக்கு சமூக-ஜனநாயகவாதிகள் மற்றும் தொழிற் சங்கங்களின் பெரும்பான்மையினரின் ஆதரவு இருந்தபடியால் கனரகத் தொழில்துறையை தேச வுடைமையாக்குவதும், அதன் பிறகு பொருளா தாரப் புனர் நிர்மாணத்திற்குரிய மூன்றாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதும் சாத்தியமா யின. இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பொழுது மக்கள் ஜனநாயக அமைப்பு வலிமை யடைந்தது. 1949 ஆகஸ்டில் ஹங்கேரிய மக்கள் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது. நாட்டில் ஏற்பட்டிருந்த அடிப்படையான சமூக, பொருளா

தார மாற்றங்களுக்குச் சட்ட ரீதியான அந்தஸ்தைக் கொடுத்த புதிய அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

சோவியத் இராணுவத்தின் வெற்றிகரமான முன்னேற்றம் செக்கோஸ்லோவாக்கியாவிலும் ஜனநாயக சக்திகளுக்குச் சாதகமான நிலைமைகளைப் படைத்தது. 1945 ஏப்ரலில் முதல் தேசிய முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டது. அதில் கம்யூனிஸ்டுகள், சமூக-ஜனநாயகவாதிகள் மற்றும் முதலாளி வர்க்கக் கட்சிகளின் பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர். நாடு முழுவதும் ஆட்சியதிகாரத்தின் புரட்சிகர உறுப்புகளான தேசியக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. 1946 மே மாதத்தில் நடைபெற்ற தேர்தல்கள் நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்டுகளுக்குப் பெரும்பான்மையைக் கொடுத்தன. மக்கள் ஜனநாயக அமைப்பு நிறுவப்பட்டது. அந்த அமைப்பு உழைக்கும் மக்களுக்குப் பரந்த பொருளாதார மற்றும் சமூக உரிமைகளைப் பெற்றுத் தந்ததுடன் அரசு நிர்வாகத்தில் பங்கெடுப்பதில் அவர்களை ஈடுபடுத்தியது. தேசிய-ஜனநாயகப் புரட்சியை சோஷலிஸ்ட் புரட்சியாக மாற்றுவதற்குத் தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டத்தை செக்கோஸ்லோவாக்கிய முதலாளி வர்க்கம்—கிழக்கு ஐரோப்பாவில் பெரும்பான்மையான நாடுகளில் இருந்த முதலாளி வர்க்கத்தின் நிலைகளைக் காட்டிலும் அது மிகவும் பலமான நிலைகளைக் கொண்டிருந்தது—உக்கிரமாக எதிர்த்தது. 1948 பிப்ரவரி

மாதத்தில் முதலாளி வர்க்கம் எதிர்ப்புரட்சி யின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி செய்தது; ஆனால் அதன் சதித்திட்டங்களை மக்கள் முறியடித்தார்கள். தொழிலாளி வர்க்கம் உழைக்கும் விவசாயிகளுடன் ஒன்றுசேர்ந்து தன் சர்வாதிகாரத்தை ஏற்படுத்தியது; தொழில் துறை, விவசாயம் மற்றும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தீவிரமான மாற்றங்களை அமு லாக்குவது உள்பட சோஷலிச நிர்மாணத்தைத் தொடங்கியது.

**யூகோஸ்லாவியாவில்** மக்கள் விடுதலை இராணுவம் நாட்டின் அதிகமான பகுதிகளி லிருந்து ஆக்கிரமிப்பாளர்களை விரட்டிய பிறகு 1944 அக்டோபரில் சோவியத் இராணுவத்தின் உதவியுடன் தலைநகரமான பெல்கிரேடையும் வடக்குப் பிரதேசங்களையும் விடுதலை செய்தது. 1945 மார்ச் மாதத்தில் ஜனநாயக அரசாங் கம் அமைக்கப்பட்டது. நவம்பர் மாதத்தில் பொது மக்கள் அரசியல் நிர்ணய சபையைத் தேர்ந்தெடுத்தனர். அது முடியாட்சியை ஒழித்தது; யூகோஸ்லாவியா ஒரு கூட்டாட்சி மக்கள் குடியரசு என்று பிரகடனம் செய்தது. ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் உள்நாட்டில் அவர் களுடன் ஒத்துழைத்தவர்களுக்கு எதிராக நடை பெற்ற போராட்டத்தின் போது நிறைவேற்றப் பட்ட ஜனநாயக மாற்றங்கள் ஆரம்பமுதலே தீவிரமானவையாக, சோஷலிஸ்ட் தன்மை கொண்டவையாக இருந்தன.

தோல்வியடைந்த ஜெர்மனியில் புரட்சிகர

நிகழ்வுப் போக்கில் பிரத்யேகக் கூறுகள் இருந்தன. நாஜித் துருப்புகளை முறியடித்த பிறகு அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சுத் துருப்புகள் வைக்கப்பட்டிருந்த மேற்குப் பிரதேசத்தில் இராணுவ நிர்வாகம் ஜனநாயக இயக்கத்தின் வளர்ச்சியை எதிர்த்துத் தடைசெய்தது; சோவியத் துருப்புகள் வைக்கப்பட்டிருந்த கிழக்கு ஜெர்மனியில் வெற்றிபெற்ற நாடுகளின் பாட்ஸ்டாம் மாநாட்டின் (1945 ஜூலை—ஆகஸ்ட்) முடிவுகளின் அடிப்படையில் ஆழமான ஜனநாயக மாற்றங்கள் தொடக்கி வைக்கப்பட்டன; தொழிலாளர் அமைப்புகள் மறுபடியும் ஏற்படுத்தப்பட்டன, தொழிலாளி வர்க்கத்தின் கட்சியான ஜெர்மன் சோஷலிஸ்ட் ஐக்கியக் கட்சி அமைக்கப்பட்டது. இக்கட்சியும் இதர முற்போக்கான அமைப்புகளும் பெரும் பண்ணைகளை ஒழிக்கின்ற நிலச் சீர்திருத்தத்தை அமுலாக்கின, தொழில்துறையில் பொதுத்துறையை ஏற்படுத்தியதுடன் கல்வி முறையை ஜனநாயகப்படுத்தின.

இந்தோ-சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினால் வழிகாட்டப்பட்ட **வியத்நாமிய** ம்க்கள் பிரெஞ்சுக் காலனியாதிக்கத்தையும் ஜப்பானிய ஆக்கிரமிப்பையும் எதிர்த்துப் பதினைந்து வருடங்கள் (1930—1945) நடத்திய நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் வெற்றியடைந்தது. 1945 ஆகஸ்ட் மாதத்தின் மத்தியில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் புரட்சிகர எழுச்சி

தொடங்கியது. பொம்மை அரசாங்கத்தை விட்டு ஓடிவந்த துருப்புகள் மக்கள் விடுதலைப் படையில் சேர்ந்து கொண்டனர். இப்படையும் தொழிற்சங்கங்களும் தற்காப்புப் படையணி களும் விவசாயிகளும் நகர மத்தியப் பகுதியின ரும் இப்புரட்சிகர எழுச்சியில் பங்கெடுத்தனர். ஆகஸ்ட் புரட்சி வெற்றியடைந்தது. 1945 செப்டெம்பர் 2ந் தேதியன்று வியத்நாம் ஜன நாயகக் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது. பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய சபை அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றி யது, அது நாட்டின் பரிபூரண சுதந்திரத்தை யும் ஜனநாயக அடிப்படையில் நாட்டின் சீரமைப்பையும் பிரகடனம் செய்தது.

அந்த வெற்றி குறுகிய காலமே நீடித்தது. பிரெஞ்சு இராணுவம் 1946இல் நாட்டுக்குள் நுழைந்தது. வியத்நாமியர்களின் வீரமிக்க எதிர்ப்பு 1954இல் வெற்றியடைந்தது. எனினும் 17ம் அட்சரேகைக் கோட்டுக்குக் கீழே இருந்த பிரதேசம் அந்நிய மூலதனத்துடன் இணைந்த முதலாளி வர்க்கம் மற்றும் பெரிய நிலப்பிரபுக்கள் வசம் நீடித்தது. வடக்கு வியத்நாமில் தீவிரமான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன, 1960க்களின் தொடக்கத்தில் சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சோஷலிஸ்ட் உறவுகள் வேரூன்றி விட்டன.

வியத்நாமியக் குடியரசு சீக்கிரத்திலேயே மற்றொரு சோதனையைச் சந்திக்க வேண்டி யிருந்தது. 1965இல் அமெரிக்க ஏகாதிபத்தியம்

வியத்நாமை ஆக்கிரமித்தது. சோவியத் யூனியன் மற்றும் இதர சகோதர நாடுகளின் உதவியுடன் வியத்நாமிய மக்கள் ஆக்கிரமிப்பாளர்களை முறியடித்து 1975இல் நாட்டை விடுவித்து ஒன்றுபடுத்தினார்கள். ஐம்பது மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட வியத்நாம் சோஷலிசக் குடியரசு முழுப் பிரதேசத்திலும் சோஷலிசத்தை நிர்மாணிக்கத் தொடங்கியது.

இரண்டாவது உலக யுத்தத்தில் நேச நாடுகளின் (சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் கிரேட் பிரிட்டன்) வெற்றியினால் கொரிய மக்கள் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் நுகத்தடியிலிருந்து விடுதலையடைந்தார்கள்; ஆனால் 38வது அட்சரேகைக் கோட்டுக்குத் தெற்கேயுள்ள பகுதியை அமெரிக்கத் துருப்புகள் வைத்திருந்தன. 1946 ஆகஸ்டில் கம்யூனிஸ்ட் கட்சியும் மக்கள் கட்சியும் இணைந்து கொரியத் தொழிலாளர்கள் கட்சியை அமைத்தன. நாட்டின் விடுதலை பெற்ற பகுதியின் பொதுஜன அமைப்புகள் மற்றும் அரசு உறுப்புகளில் இக்கட்சி தலைமை இடத்தைப் பெற்றது. வடக்குப் பிரதேசத்தில் ஒரு ஜனநாயக அரசை நிறுவுவதற்கு இட்டுச் சென்ற முக்கியமான அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களுக்கு இக்கட்சி தலைமை தாங்கியது. 1948 செப்டெம்பரில் கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது. அக்குடியரசு சோஷலிசத்தை நிர்மாணிக்கத் தொடங்கியது.

சீன மக்கள் பல பத்தாண்டுகளாக நடத்திய

புரட்சிகரப் போராட்டமும் வெற்றியடைந்தது. அவர்கள் 1927 முதல் 1937 வரை ஒரு புரட்சிகரமான விவசாயப் போரையும், 1937 முதல் 1945 வரை ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போரையும், அதற்குப் பிறகு பிற்போக்கான குவோமின்டாங் ஆட்சியை எதிர்த்து தேச விடுதலைப் போர்களையும் நடத்தினார்கள். இப்போர்கள் அனைத்தும் 1919இல் தொடங்கிய ஜனநாயகப் புரட்சியின் நிகழ்வுப் போக்குடன் பின்னிப் பிணைந்திருந்தன. கம்யூனிஸ்டுகள் தலைமை தாங்கிய மக்கள் விடுதலைப் படையின் வெற்றிகள் புரட்சி வெற்றியடைய வழிவகுத்தன. தொழிலாளர்கள், விவசாயிகள், நகர மத்தியதரப் பகுதியினர் மற்றும் முதலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியின் எல்லா ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் பங்கெடுத்த மக்களின் அரசியல் ஆலோசனை கவுன்சில் 1949 அக்டோபர் 1ம் தேதியன்று சீன மக்கள் குடியரசைப் பிரகடனம் செய்தது. புரட்சி நாட்டில் மக்களின் ஆட்சியதிகாரத்தை நிறுவியது. இது சீனாவில் சோஷலிசத்தை நிர்மாணிப்பதற்குரிய அரசியல் நிலைமைகளைத் தோற்றுவித்தது.

இதனை அடுத்து வந்த வருடங்களில் இன்னும் புரட்சிகரமான சம்பவங்கள் நடைபெற்றன. 1959இல் கியூபாவில் புரட்சி வெற்றி பெற்றது. கியூபாவில் உள்நாட்டு வர்க்க முரண்பாடுகளும் நாட்டைக் கொள்ளையடித்து வந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் கியூபா மக்களுக்கும் இடையிலுள்ள முரண்பாடும் மிகவும்

தீவிரமடைந்ததன் விளைவாக இப்புரட்சி வெடித்தது. 1950க்களின் பிற்பாதியில் புரட்சிகரமான நிலைமை படிப்படியாக வளர்ச்சியடைந்திருந்தது, பிடெல் காஸ்ட்ரோ தலைமை வகித்த புரட்சிக்காரர்களின் குழு புரட்சிப் படையை அமைத்திருந்தது. இப்படை மக்களின் பல்வேறு பகுதியினருடைய ஆதரவுடன் சர்வாதிகாரி படீஸ்தாவைத் தூக்கியெறிந்தது. தொழிலாளர்கள், விவசாயிகள், மத்தியதரப் பகுதியினர் மற்றும் தேசிய முதலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியை இயக்கு சக்தியாகக் கொண்டிருந்த தேசிய விடுதலை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, பெருநிலவுடைமை எதிர்ப்புப் புரட்சி வெற்றியடைந்தது. நாட்டுப்புற மற்றும் நகர உழைக்கும் மக்கள் இப்புரட்சிகரப் போராட்டத்தில் தலைமையான பாத்திரத்தை வகித்தார்கள். புரட்சியின் ஜனநாயகக் கட்டத்திற்கும் (1959 — 1961) சோஷலிசக் கட்டத்துக்கு மாற்றத்திற்கும் புரட்சிகர ஜனநாயகவாதிகள் தலைமை தாங்கினார்கள். பிடெல் காஸ்ட்ரோ தலைமையிலிருந்த புரட்சிப் படையும் அதன் அரசியல் அமைப்பாகிய ''ஜூலை 26 இயக்கமும்'' இவர்களைப் பிரதிநிதித்துவம் செய்தன. கியூபாவின் கம்யூனிஸ்டுகள் இவர்களுடன் தீவிரமாக ஒத்துழைத்தார்கள்.

1976இல் லாவோசும் சோஷலிஸ்ட் நாடுகளின் குடும்பத்தில் சேர்ந்தது. லாவோஸ் மக்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சுமார் ஒரு நூற்றாண்டுக் காலம் முடிவில்லாத போராட்

டத்தை நடத்தி வந்தார்கள். வியத்நாமிலும் கம்பூச்சியாவிலும் சகோதர மக்களின் வெற்றி களினால் உத்வேகமடைந்த லாவோஸ் மக்கள் 1973-75இல் தேசிய விடுதலைப் புரட்சியைத் தொடங்கினார்கள். 1975இல் லாவோஸ் மக்கள் புரட்சிக் கட்சியின் தலைமையில் நாடு தழுவிய அளவில் புரட்சிகர எழுச்சி நடைபெற்றது. இதன் விளைவாக தரகு முதலாளி வர்க்கம், இராணுவ அதிகார வர்க்கம், முதலில் பிரெஞ்சுக் காலனி யாதிக்கவாதிகளுக்கும் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் சேவை செய்த ஸ்தல பிற்போக்கு நிலப்பிரபுக்கள் ஆகியோருடைய இராணுவ மற்றும் அரசியல் சக்திகள் முறி யடிக்கப்பட்டன. வெற்றியடைந்த எழுச்சி புரட்சி யின் தேசிய ஜனநாயகக் கட்டத்தின் முடிவை யும் முதலாளித்துவக் கட்டத்துக்குள் நுழை யாமல் சோஷலிசக் கட்டத்துக்கு மாறுவதன் தொடக்கத்தையும் அறிவித்தது.

பெரும்பான்மையான சோஷலிஸ்ட் நாடு களில் புரட்சிகர நிகழ்வுப் போக்கு ஜனநாயகக் கட்டம், சோஷலிஸ்ட் கட்டம் என்ற இரண்டு கட்டங்களில் நடைபெற்றது. முதல் கட்டத்தின் போது பெரிய முதலாளி வர்க்கத்தினரும் நிலப் பிரபுக்களும் அவர்களுடைய பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளிலிருந்து அகற்றப்பட் டார்கள், அந்நிய மூலதனத்தின் செல்வாக்கு ஒழிக்கப்பட்டது, நாட்டின் முக்கியமான அரசி யல் ஸ்தாபனங்கள் ஜனநாயகப்படுத்தப்பட்டன. அதே சமயத்தில் முதலாளி வர்க்கம் பொருளா

**சோஷலிஸ்ட் அமைப்பைச் சேர்ந்த நாடுகள் (1982)**

| நாடு | பிரதேசம் (ஆயிரம் சதுர கிலோமீட்டர் களில்) | மக்கள் தொகை (மில்லியன்களில்) |
|---|---|---|
| அல்பேனியா | 28.7 | 2.8 (1981) |
| கியூபா | 111 | 9.8 (1982) |
| கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு | 121.2 | 18.3 (1981) |
| சீனா | 9,600 | 1,015.4 (1982) |
| செக்கோஸ்லோவாக்கியா | 127.9 | 15.4 (1982) |
| சோவியத் யூனியன் | 22,400 | 272.5 (1983) |
| பல்கேரியா | 111 | 8.9 (1982) |
| போலந்து | 313 | 36.4 (1982) |
| மங்கோலியா | 1,567 | 1.8 (1982) |
| யூகோஸ்லாவியா | 255.8 | 22.7 (1982) |
| ருமேனியா | 238 | 22.5 (1982) |
| லாவோஸ் | 237 | 3.8 (1981) |
| வியத்நாம் | 332 | 56.7 (1982) |
| ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு | 108 | 16.7 (1982) |
| ஹங்கேரி | 93 | 10.7 (1982) |

தாரத்திலும் அரசியல் வாழ்க்கையிலும் ஓரளவுக்கு செல்வாக்கைக் கொண்டிருந்தது, கூட்டணி அரசாங்கங்களில் பங்கெடுத்தது, அதன் சித்தாந்தம் ஓரளவுக்குப் பரவியிருந்தது.

ஆட்சியதிகாரத்தைப் பிடிப்பதில் வெற்றி

யடைந்த உழைக்கும் மக்கள் தங்களுடைய நிலைகளை பலப்படுத்திக் கொண்டதும் வர்க்கப் போராட்டம் தீவிரமடைந்ததும், இன்னும் அடிப்படையான மாற்றங்களைக் கோரியும் சுரண்டலின் எல்லா வடிவங்களும் ஒழிக்கப்பட வேண்டும் என்று மக்கள் தொகையின் எல்லாப் பகுதியினருடைய விருப்பமும் வளர்ச்சியடைந்த வுடன் புரட்சிகர நிகழ்வுப் போக்கு இரண்டாவது கட்டத்தை, சோஷலிஸ்ட் கட்டத்தை அடைந்தது. அதன் கூறுகள் ஏதாவதொரு அளவில் முதல் கட்டத்தில் ஏற்கெனவே இருந்தன. அதே சமயத்தில் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், மத்தியப் பகுதியினர், தேசபக்த உணர்ச்சிகளைக் கொண்ட மத்திய தர முதலாளி வர்க்கத்தின் ஒரு பகுதி முதலிய சமூகத்தின் பல்வேறு பகுதியினரும் முன்னைக் காட்டிலும் அதிகமாக ஒன்றுபட்டனர். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், புரட்சியின் சமூக அடிப்படை விரிவடைந்தது. தொழிலாளி வர்க்கம் மட்டுமல்லாமல் பெருந்திரளான மக்களும் சோஷலிசம் அவசியம் என்பதை மென்மேலும் அதிகமாக உணர்ந்தார்கள்.

சில நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சி தொடக்கத்திலிருந்தே வெற்றிகரமாக முன்னேறியது.

புதிய சோஷலிஸ்ட் அரசுகளின் தோற்றத்திலும் சோஷலிஸ்ட் அமைப்பின் வளர்ச்சியிலும் பலமடைவதிலும் ஒரு காரணி முதல் சோஷலிச நாடாகிய சோவியத் யூனியனுடன் அவற்றின் நெருக்கமான ஒத்துழைப்பாகும். பலமிகுந்த

### சோஷலிஸ்ட் நாடுகளின் புரட்சிகர வளர்ச்சிக் கட்டங்கள்

| நாடு | ஜனநாயகக் கட்டம் | சோஷலிஸ்ட் புரட்சியின் ஆரம்பமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்படுதலும் |
|---|---|---|
| அல்பேனியா | 1939—1945 | 1946 |
| கியூபா | 1959—1961 | 1961 |
| கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு | 1945—1946 | 1946 |
| சீனா | 1919—1949 | 1949 |
| செக்கோஸ்லோவாக்கியா | 1944—1947 | 1948 |
| சோவியத் யூனியன் | 1905—1907 | |
| | 1917 மார்ச்—அக்டோபர் | 1917 நவம்பர் |
| பல்கேரியா | — | 1944 |
| போலந்து | 1944—1947 | 1947 |
| மங்கோலியா | 1921—1940 | 1940 |
| யூகோஸ்லாவியா | 1941—1945 | 1945 |
| ருமேனியா | 1944—1947 | 1948 |
| லாவோஸ் | 1973—1975 | 1976 |
| வியத்நாம் | 1930—1954 | 1954 |
| ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு | 1945—1949 | 1949 |
| ஹங்கேரி | 1944—1947 | 1948 |

நாடாகவும் சோஷலிச நிர்மாணத்தில் அதிக மான அனுபவமுள்ள நாடாகவும் இருக்கும்

சோவியத் யூனியன் உலக சோஷலிஸ்ட் அமைப்பின் உருவாக்கத்தில் மாபெரும் தாக்கத்தைக் கொண்டிருந்தது.

சோவியத் யூனியன் இருந்ததும் அதன் வளர்ச்சியும் புரட்சிகரமான நிகழ்வுப் போக்கிற்குச் சாதகமான வரலாற்றுச் சூழ்நிலையை ஏற்படுத்தி முதலாளித்துவம் மேலும் பலவீனமடைந்திருப்பதை சாத்தியமாக்கின. மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்கு சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்திடமிருந்து பிரதானமாக தார்மிக மற்றும் அரசியல் ஆதரவு கிடைத்தது என்றால் மக்கள் ஜனநாயக அரசுகளுக்கு உலகத்தின் முதல் சோஷலிஸ்ட் அரசிடமிருந்து மாபெரும் பொருளாதார, இராணுவ, அரசியல் மற்றும் சித்தாந்த ஆதரவு கிடைத்தது. சோவியத் யூனியன் இருந்த காரணத்தால் அந்நியத் தலையீடு இயலாததாகி விட்டது. மக்கள் ஜனநாயக அரசுகளைப் பொருளாதார அடிப்படையில் முற்றுகை செய்கின்ற முயற்சிகளும் தோல்வியடைந்தன. சோவியத் யூனியனின் சர்வதேசியக் கொள்கை அந்த நாடுகளிலுள்ள புரட்சிகர சக்திகள் ஆழமான ஜனநாயக மாற்றங்களையும், அதற்குப் பின்னர் சோஷலிஸ்ட் மாற்றங்களையும் நிறைவேற்றுவதற்குப் பேருதவியளித்தது. சோவியத் யூனியன் மக்கள் ஜனநாயக அரசுகளுக்கு மிக அதிகமான சர்வாம்ச உதவியளித்து அவை சர்வதேச ரீதியில் தம்முடைய நிலைகளை பலப்படுத்திக் கொள்ளும்படி செய்தது.

முதல் கட்டத்தின் போது புரட்சிகரப் போராட்டத்தின் மிகக் கூர்மையான வடிவங்கள் வெளிப்பட்டன. இந்நாடுகளில் சிலவற்றில் புரட்சிகர சக்திகள் பாசிசம், பிற்போக்குவாதம், அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் அவர்களுடைய கூட்டாளிகளான முதலாளி வர்க்கத்தினர், நிலக்கிழார்களிடமிருந்து விடுதலை பெறுவதற்கு ஆயுதந்தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டன; எனினும் அடுத்தபடியான ஜனநாயக மாற்றங்களும் சோஷலிஸ்ட் கட்டத்துக்கான மாற்றமும் ஒப்பீட்டளவில் சமாதான பூர்வமான முறையில் நடைபெற்றன. ஆயுதமேந்திய போராட்டமோ அல்லது உள்நாட்டுப் போரோ அவசியமாக இருக்கவில்லை.

பல்கேரியாவில் மக்கள் பலாத்காரத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள்; யூகோஸ்லாவியாவில் தேசிய விடுதலைப் போரின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள். ஹங்கேரி, செக்கோஸ்லோவாக்கியா மற்றும் சில நாடுகளில் பாட்டாளி வர்க்கம் சமாதான பூர்வமான முறையில் அதிகாரத்தைப் பெற்றது. உலக யுத்தத்தின் போது, அதற்குப் பிறகு ஜனநாயக மாற்றங்கள் நடைபெற்ற போது இந்த நாடுகளில் முதலாளி வர்க்க-நிலக்கிழார் அரசு இயந்திரம் அரித்தழிக்கப்பட்டிருந்ததும் உள்நாட்டில் சக்திகளின் சமநிலை தொழிலாளி வர்க்கத்துக்குச் சாதகமாக இருந்ததும் இதற்கு முக்கியமான காரணங்களாகும்.

அன்றைக்கு நிலவிய அரசியல் ஸ்தாபனங்

களின் சுற்றுவட்டத்துக்குள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. உதாரணமாக செக்கோஸ்லோவாக்கியாவை எடுத்துக்கொண்டால் அங்கே நாடாளுமன்றம் மக்கள் சித்தத்துக்குப் பொருந்துகின்ற முடிவுகளை எடுக்கும் படியும் ஜனநாயக மற்றும் சோஷலிஸ்ட் மாற்றங்கள் சட்டரீதியான முறையில் அமுலாக்கப் படும்படியும் கம்யூனிஸ்ட் கட்சி கவனித்துக் கொண்டது. 1948 பிப்ரவரியில் செக்கோஸ்லோவாக்கியாவின் முதலாளி வர்க்கம் திடீர்ப் புரட்சி செய்ய முயற்சித்த பொழுது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலிருந்த தொழிலாளி வர்க்கம் அதை ஒடுக்கியது.

சீனா, வட கொரியா, வியத்நாம் மற்றும் கியூபாவில் ஏகாதிபத்தியம், உள்நாட்டுப் பிற்போக்குவாதம், காலனியாதிக்கம் மற்றும் அதன் ஸ்தலக் கூட்டாளிகளை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தின் மூலம் புரட்சி ஜனநாயகக் கட்டத்தில் வெற்றியடைந்தது. ஆனால் ஜனநாயகப் புரட்சியிலிருந்து சோஷலிசப் புரட்சிக்கு மாற்றம் மிகவும் அதிகமான அளவுக்கு அமைதியான முறையிலேயே நடைபெற்றது; ஏனென்றால் தொழிலாளி வர்க்கத்திடம் ஆட்சியதிகாரம் இருந்தது, பழைய இராணுவ-அதிகார வர்க்க இயந்திரம் நொறுக்கப்பட்டு விட்டது.

1948—1949ம் வருடங்களின் போது மக்கள் ஜனநாயக நாடுகளிலிருந்த முதலாளி வர்க்கம் அரசியல் ரீதியில் இறுதித் தோல்வியை அடைந்தது, தொழிலாளி வர்க்கமும் அதன் நேச சக்தி

களும் முழு அதிகாரத்தைப் பெற்றன. தொழில் துறை தேசவுடைமையாக்கப்பட்டது உள்நாட்டுச் சுரண்டல்காரர்களுக்குப் பலத்த அடியாக இருந்தது. அது அந்நிய மூலதனத்தின் சக்தியை பலவீனப்படுத்தியது, உற்பத்திச் சாதனங்களில் அரசு உடைமை என்ற அடிப்படையில் பொருளாதாரம் வளர்ச்சியடைய உதவியது. விவசாய சீர்திருத்தங்கள் நிலக்கிழார்களை ஒழித்து விவசாயிகளுக்கு நிலத்தைக் கொடுத்தன. தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாய வர்க்கத்துக்கும் இடையிலிருந்த கூட்டணியின் பலம் பெருகியது. இது மொத்த சமூகத்தின் சிந்தனையிலும் தீவிரமான மாற்றங்களை ஏற்படுத்தி மார்க்சிய-லெனினியம் விரிவாகப் பரவ வாய்ப்பளித்தது. மக்கள் ஜனநாயக நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சிகள் வெற்றியடைந்தன என்பது அதன் அர்த்தம். அதே சமயத்தில் சீனாவில் மக்கள் புரட்சி செய்தார்கள்.

1950க்கள் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற, புதிய சமூகத்தின் அடிப்படைகளை நிர்மாணிக்கின்ற காலகட்டமாக இருந்தன.

சோஷலிஸ்ட் புரட்சிகள் நடைபெற்ற பெரும்பான்மையான நாடுகளில் பொருளாதார வளர்ச்சி கீழ் மட்டத்திலிருந்ததால் சமூகத்தை சோஷலிஸ்ட் அடிப்படையில் புனரமைப்பதற்கு அவசியமான பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடித்தளத்தை இயன்ற அளவுக்குச் சீக்கிரமாக உருவாக்குவது அத்தியாவசியமாக இருந்தது.

இந்த அடித்தளம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்த பொழுது திட்டமிட்ட சோஷலிஸ்ட் பொருளாதாரம், சோஷலிஸ்ட் சர்வதேசியம், சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் பரஸ்பர சகோதர உதவி ஆகியனவற்றின் சாதகங்கள் முழுமையாக வெளிப்பட்டன. அமெரிக்காவும் மற்ற முதலாளித்துவ நாடுகளும் சோஷலிஸ்ட் நாடுகளுக்கு எதிராக அரசியல் மற்றும் பொருளாதார முற்றுகையை ஏற்படுத்தியிருந்தன; எனவே சோஷலிஸ்ட் நாடுகள் தற்காப்புக்கு அதிகமான நிதியும் முயற்சியும் செலவிட வேண்டியிருந்தது. எனினும் அவை தம்முடைய பொருளாதார சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொண்டன. மேலும் முதலாளித்துவ உலகத்துடன் பொருளாதாரப் போட்டியில் சோஷலிஸ்ட் நாடுகள் மாபெரும் முன்னேற்றத்தை அடைந்தன. உதாரணமாக, 1950க்கும் 1960க்கும் இடையில் சிஎம்இஏ* நாடுகளில் தேசிய வருமானம் 2.5 மடங்கு அதிகரித்தது, ஆனால் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் 1.5 மடங்கு மட்டுமே அதிகரித்திருந்தது. இதே காலகட்டத்தில் தொழில்துறை வளர்ச்சி சோஷலிஸ்ட் நாடுகளில் மொத்தத்தில் 3.6 மடங்காகவும் உலகத்தின் எஞ்சிய பகுதியில் 1.7 மடங்காகவும் வளர்ந்தது. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் 64 சதவிகி

* சிஎம்இஏ — பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சில் (இதைப் பற்றி அதிக விவரங்கள் இப்புத்தகத்தில் தரப்பட்டிருக்கின்றன).

தம் மட்டுமே அதிகரித்திருந்தது.

ஒரு புதிய சமூகத்தை நிர்மாணிக்கின்ற கஷ்டமான நிகழ்வுப் போக்கில் கணிசமான சிக்கல்கள் சில நாடுகளில் ஏற்பட்டன. பல உதாரணங்களில் ஒரு நாட்டின் வளர்ச்சியில் தனித்தன்மையான கூறுகள் குறைத்து மதிப்பிடப்பட்டன அல்லது அதற்கு மாறாக சோஷலிச நிர்மாணம் பற்றிய பொது விதிகள் புறக்கணிக்கப்பட்டன; தனித்தன்மையான, தேசியக் கூறுகளுக்கு மிகையான முக்கியத்துவம் அளிக்கப்பட்டு தேசிய நலன்கள் பொது நலன்களுக்கும் சோஷலிஸ்ட் குடும்பத்தின் இலட்சியங்களுக்கும் எதிராக நிறுத்தப்பட்டன. சில நாடுகளில் தோன்றிய சீர்திருத்தவாத மற்றும் தேசியவாதக் கருத்துக்களை, தூக்கியெறியப்பட்ட சுரண்டும் வர்க்கங்களில் எஞ்சியிருந்தவர்களும் குட்டி முதலாளி வர்க்கத்தில் சில பகுதியினரும் ஆதரித்தார்கள். இந்த நாடுகள் சோஷலிசப் பாதையில் முன்னேற்றமடைவதைத் தடுக்க முயற்சித்துத் தோல்வியடைந்த சர்வதேசப் பிற்போக்குவாதம் இப்பொழுது உள்நாட்டில் அவற்றை அரித்தழித்து புரட்சிகர சக்திகளைப் பிளவுபடுத்துகின்ற நம்பிக்கையுடன் சீர்திருத்தவாத மற்றும் தேசியவாத சக்திகளுக்கு உதவி புரிந்தது. பெரும்பாலான உதாரணங்களில் சீர்திருத்தவாதத்தையும் தேசியவாதத்தையும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் தொழிலாளி வர்க்கமும் உறுதியாக எதிர்த்தபடியால் அவை சமூக வளர்ச்சியின் போக்கைத் தடுக்க முடியவில்லை.

1950க்களின் இறுதியிலும் 1960க்களின் தொடக்கத்திலும் சோஷலிஸ்ட் நாடுகள் ஒரு புதிய சமூக-பொருளாதார வளர்ச்சிக் கட்டத்தை அடைந்திருந்தன. சோவியத் யூனியனில் வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகம் நிர்மாணிக்கப் பட்டு விட்டது, சோஷலிஸ்ட் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற நாடுகளில் சோஷலிசத்துக்கு அடித்தளம் அமைத்தல் முடிவடைந்திருந்தது. தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் அரசியல் அதிகாரமும் உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமையும் வலுவடைந்திருந்தன. முதலாளித்துவத்தின் கீழ் ஏகாதிபத்திய அரசுகளுக்கு மூலப் பொருள்களையும் விவசாய விளை பொருள்களையும் அனுப்பிக் கொண்டு அந்த அரசுகளின் ஒட்டுப் பகுதியாக இருந்து வந்த இந்நாடுகள் வளர்ச்சியடைந்த தொழில் துறை-விவசாய நாடுகளாக மாறிவிட்டன, விரிவான சமூக, கலாசார நடவடிக்கைகளை நிறைவேற்றக் கூடிய சக்தியைப் பெற்றுவிட்டன.

சோவியத் யூனியனில் வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகத்தையும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளில் சோஷலிசத்தின் அடிப்படைகளையும் நிர்மாணித்தது உண்மையிலேயே உலக சோஷலிசத்தின் மகத்தான சாதனைகளில் ஒன்றாகும்; பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் சித்தாந்தத் துறைகளில் இந்நாடுகள் மகத்தான முன்னேற்றம் அடைந்திருப்பதை நிரூபிக்கிறது. ‘‘இன்று சோவியத் யூனியனில் மட்டுமல்ல, இதர சோஷலிஸ்ட் நாடுகளிலும் முதலாளித்

துவத்தை மறுபடியும் ஏற்படுத்துவது சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் நடைபெற முடியாததாகும்''* என்று 1960இல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசக் கூட்டம் சுட்டிக் காட்டியது.

1960க்களின் பிற்பாதியில் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளின் சகோதரக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் வளர்ச்சியடைந்த சோஷலிசத்தை நிர்மாணிக்கத் தொடங்கின. சோஷலிஸ்ட் மாற்றங்களில் முதிர்ச்சியடைந்த, வளர்ச்சியடைந்த சோஷலிசக் கட்டம் என்பது மிகவும் அவசியமான, இயற்கையான இணைப்பாகும்; சோஷலிஸ்ட் நாடுகளின் தனித்தன்மையான கூறுகள் எப்படி இருந்தாலும், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற, ஒப்பீட்டளவில் ஒரு நீண்ட காலகட்டத்தை இது குறிக்கிறது.

வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகம் கம்யூனிஸ்ட் சமூகத்தின் முதல் கட்டம், அக்கட்டத்தில் சோஷலிசம் இறுதி வெற்றியை அடைகின்ற அளவுக்குப் போதுமான சக்தியைப் பெறுகிறது என்று லெனின் எழுதியதையும்

---

* *The Struggle for Peace, Democracy and Socialism.* Documents of Meetings of Representatives of the Communist and Workers' Parties, Held in Moscow in November 1957, in Bucharest in June 1960, and in Moscow in November 1960, Foreign Languages Publishing House, Moscow, 1963, p. 47.

தமது அனுபவத்தையும் ஆழமான சிந்தனை யையும் ஆதாரமாகக் கொண்டு சகோதரக் கம்யூனிஸ்ட் கட்சிகள் வளர்ச்சியடைந்த சோஷ லிஸ்ட் சமூகம் என்ற கருதுகோளை விரித்துரைத் தன. சோவியத் யூனியன் அரசியலமைப்புச் சட்டம் வளர்ச்சியடைந்த சோஷலிசத்தைப் பின்வருமாறு வரையறுக்கிறது: இது ''வலிமை மிகு உற்பத்தி சக்திகளும் முற்போக்கான விஞ் ஞானமும் கலாசாரமும் படைக்கப்பட்டிருக் கின்ற சமூகம், அந்த சமூகத்தில் மக்களின் வாழ்க்கைத் தரம் மென்மேலும் உயர்ந்து கொண்டிருக்கிறது, தனிமனிதனின் சர்வாம்ச வளர்ச்சிக்குச் சாதகமான நிலைமைகள் மேலும் மேலும் ஏற்படும்''.* உலக வரலாறு முன்னர் கண்டிராத நிகழ்வாகிய சோஷலிஸ்ட் வாழ்க்கை முறை உருவாகிவிட்டது, அது மேலும் வளர்ச்சி யடைந்து கொண்டிருக்கிறது. உழைப்பு சுரண்ட லிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருப்பதும் அது எல்லா உறுப்பினர்களின் கடமையாக, தனிநபரை உருவாக்குகின்ற சாதனமாக மாற்றப் பட்டிருப்பதும் அதன் தனித்தன்மையான அம் சமாகும். அங்கே மெய்யான கூட்டு நடவடிக்கை நிறுவப்பட்டிருக்கிறது, அது தனிநபருக்கு மதிப் பளிக்கின்ற கோட்பாட்டுடன் பின்னிப் பிணைந் திருக்கிறது. சமூகத்தின் மிக உயர்ந்த செல்வம் மனிதனே; சமூகத்துடன் மனிதனுடைய உறவு

* *Constitution (Fundamental Law) of the Union of Soviet Socialist Republics,* Novosti Press Agency Publishing House, Moscow, 1977, p. 13.

களின் ஒத்திசைவு மென்மேலும் அதிகரிக்கிறது. சோஷலிஸ்ட் வாழ்க்கை முறை சர்வதேசிய உணர்ச்சியில் தோய்ந்திருக்கிறது.

வளர்ச்சியடைந்த சோஷலிசத்தை அபிவிருத்தி செய்கின்ற நிகழ்வுப் போக்கு பல்வேறு கட்டங்களின் மூலம் நடைபெறுகிறது, ஒரு நீண்ட, வரலாற்றுக் காலகட்டத்தைக் கொண்டிருக்கிறது என்பதை அனுபவம் காட்டுகிறது.

1970க்களின் பிற்பாதியிலும் 1980க்களின் ஆரம்பத்திலும் பல்கேரியா, ஹங்கேரி, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளின் மக்கள் வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார்கள், கம்யூனிசத்தை நோக்கிப் படிப் படியாக மாறுவதற்கு அவசியமான நிலைமைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். ருமேனியாவில் மக்கள் வளர்ச்சியடைந்த சோஷலிசத்தை நிர்மாணித்துக் கம்யூனிசத்தை நோக்கி முன்னேறுகின்ற செயல்திட்டத்தை அமுலாக்கிக் கொண்டிருக்கிறார்கள். யூகோஸ்லாவிய மக்கள் சோஷலிசத்தை நிர்மாணிப்பதில் மேலும் வெற்றிகளை அடைந்திருக்கிறார்கள். மங்கோலியாவில் சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்டு விட்டது, அது தொழில்துறை-விவசாய நாடாக மாறி விட்டது. கியூபா சோஷலிச மாற்றத்தில் மாபெரும் சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறது. வியத்நாமிய மக்கள் நாசகரமான யுத்தத்துக்குப் பிறகு பொருளாதாரப் புனரமைப்பையும் வளர்ச்சியையும் சாதிக்கின்ற கடினம் நிறைந்த கடமையை

நிறைவேற்றி சோஷலிஸ்ட் சமூகத்தை நிர் மாணித்துக் கொண்டிருக்கிறார்கள். கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு ஜனநாயக அடிப் படையில் நாட்டை ஒன்றுபடுத்துகின்ற கடின மான போராட்ட நிலைமைகளில் சோஷ லிசத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறது. முதலாளித்துவக் கட்டத்துக்குள் செல்லாமல் சோஷலிஸ்ட் வளர்ச்சிப் பாதையை மேற் கொண்டிருக்கின்ற லாவோசிலும் கம்பூச்சிய மக்கள் குடியரசிலும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஆழமான மாற்றங்கள் ஏற்பட் டிருக்கின்றன.

இன்று உலக சோஷலிஸ்ட் குடும்பத்தைச் சேர்ந்த நாடுகள் முதிர்ச்சி பெற்றுவிட்டன; புதிய அமைப்பின் சோஷலிசத் தன்மையும் முதலாளித்துவ அமைப்பின் மீது அதன் சாதகங்களும் மேலும் முழுமையாக வெளிப்பட் டிருக்கின்றன. குண ரீதியில் புதிய மற்றும் அளவு ரீதியில் விரிவான கடமைகளை நிறை வேற்ற உதவுகின்ற பொருளாதார வளர்ச்சி சாதிக்கப்பட்டுவிட்டது. சமூக உற்பத்தியின் ஒவ்வொரு துறையிலும் பிரதேச அமைப்பிலும், விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத் திறனிலும், உழைப்பின் தன்மையிலும் குணாம்சத்திலும் மற்றும் சோஷலிஸ்ட் உற்பத்தி உறவுகளிலும் ஆழமான, முற்போக்கான மாற்றங்கள் ஏற் பட்டுக் கொண்டிருக்கின்றன. சோஷலிஸ்ட் நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் விஞ் ஞான-தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தின்

சாதனைகளை விரிவான அளவில் பயன் படுத்தியும் அவற்றை சோஷலிசத்தின் சாதகங் களுடன் இணைத்தும் உற்பத்தி மற்றும் சமூக நடவடிக்கையின் எல்லாத் துறைகளின் தன்மை மற்றும் செய்திறனை அபிவிருத்தி செய்கின்ற கொள்கையைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றன. சோஷலிஸ்ட் ஜனநாயகம் ஆழமடைந்து அபிவிருத்தியடைந்து வருகிறது.

சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சோஷலிஸ்ட் நாடுகளின் சாதனைகள் சட்ட மாகி விட்டன; அவை அரசியலமைப்புச் சட்டங் களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. புதிய அரசி யலமைப்புச் சட்டங்கள் ஜெர்மன் ஜனநாயகக் குடி யரசில் 1968இலும், பல்கேரியாவில் 1971இலும், ஹங்கேரியில் 1972இலும், ருமேனியாவில் 1975இலும் நிறைவேற்றப்பட்டன. சோவியத் யூனியன் 1977இல் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றியது. வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகத்தை ஏற்கெனவே நிர் மாணித்துள்ள ஒரு நாட்டின் அடிப்படையான சட்டமாக அது இருக்கிறது.

சோஷலிஸ்ட் நிர்மாணம் வர்க்கக் கட் டமைப்பை ஆழமாக மாற்றியிருக்கிறது. அங்கே நிலக்கிழார்களோ அல்லது முதலாளிகளோ இல்லை; ஆழமான சமூக மாற்றங்களின் விளை வாகத் தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் அதிகரித்திருப்பதுடன் அதிகமான பலத்துடன் வேரூன்றியிருக்கிறது. இப்பொழுது அது சமூகத் தின் தலைமையான சக்தியாகிவிட்டது. இப்

பொழுது ஹங்கேரியில் 1938இல் இருந்ததைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள்; போலந்தில் தொழிலாளி வர்க்கம் இரண்டு மடங்கு அதிகரித்திருக்கிறது. விவசாயிகள் தீவிரமாக மாற்றமடைந்திருக்கிறார்கள். தனியார் நிலவுடைமையை அடிப்படையாகக் கொண்ட சிறு விவசாயம் கூட்டுறவு விவசாயமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது.

அதே சமயத்தில் சோஷலிஸ்ட் நாடுகள் தம்முடைய வளர்ச்சியில் சிக்கலான பிரச்சினைகளைச் சந்தித்தன. புரட்சிக்கு முன்பு இந்நாடுகளில் சிலவற்றில் ஏகாதிபத்திய ஏகபோகங்கள் ஆதிக்கம் செலுத்தியதும் அவை பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் இருந்ததும் இன்றும் தம் விளைவைக் கொண்டிருக்கின்றன. சில நாடுகளில் மிகக் குறைவான அளவில் மூலப் பொருள்கள் கிடைப்பதாலும் தொழில்துறை வளர்ச்சி ஒரே சீராக இல்லாததாலும் ஏற்படுகின்ற பொருளாதாரப் பொருத்தமின்மைகளின் விளைவாக சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. சில நாடுகளில் விவசாயம் தொழில்துறையின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகின்ற பொழுது பின்தங்கியிருப்பது பொருளாதார வளர்ச்சியைத் தடை செய்கிறது. 1970க்களின் பிற்பாதிக்குள் பல நாடுகளில் மனித சக்திச் சேம இருப்பு முற்றிலும் உபயோகிக்கப்பட்டுவிட்டது, எனவே தேசிய வருமானம் அதிகரிப்பதற்கு உழைப்பின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதும் சமூக உற்

## மக்கள்தொகைக் கணக்கின்படி சமூகப் பிரிவுகள் ( % )

| நாடு | | தொழிலாளர்களும் அலுவலர்களும் | கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களான விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் | தனிப்பட்ட விவசாயிகளும் கைவினைஞர்களும் | சுதந்திரமான தொழில்களில் இருப்பவர்கள் மற்றும் இதர மக்கள் தொகைப் பிரிவுகள் |
|---|---|---|---|---|---|
| செக்கோஸ்லோவாக்கியா | 1961 | 84.2 | 11.9 | 3.8 | 01 |
| | 1980 | 91.2 | 8.5 | 0.2 | 01 |
| சோவியத் யூனியன் | 1959 | 68.3 | 31.4 | 0.3 | — |
| | 1979 | 81.1 | 14.9 | 0 | — |
| கியூபா | 1953 | 57.9 | 0.1 | 41.4 | 0.6 |
| | 1970 | 69.5 | 18.8 | 11.2 | 0.5 |
| பல்கேரியா | 1956 | 43.9 | 37.0 | 18.1 | 1.0 |
| | 1975 | 83.8 | 15.4 | 0.4 | 0.4 |
| போலந்து | 1960 | 60.4 | 2.7 | 36.8 | 0.1 |
| | 1978 | → 78.8 | ← | 20.8 | 0.4 |
| மங்கோலியா | 1963 | 46.5 | 53.3 | → 0.2 | ← |
| | 1979 | 61.7 | 38.1 | → 0.2 | ← |
| ருமேனியா | 1956 | 37.0 | 8.3 | 53.7 | 1.0 |
| | 1977 | 68.9 | 26.6 | 4.5 | 0 |
| ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு | 1964 | 80.5 | 11.5 | → 8.0 | ← |
| | 1971 | 82.3 | 11.7 | 3.7 | 2.3 |
| ஹங்கேரி | 1970 | 75.5 | 21.4 | 2.8 | 0.3 |
| | 1980 | 80.5 | 16.9 | → 2.6 | ← |

பத்தியை இன்னும் திறமையான அடிப்படையில் அமைப்பதும் மிகவும் அவசியமாக இருந்தன. சோஷலிஸ்ட் நாடுகளுக்கு எதிராக மேற்கு நாடுகள் கடைப்பிடித்த வர்த்தகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் பாதகமான உலகப் பொருளாதார நிலைமையும் எதிர்மறையான தாக்கத்தைக் கொண்டிருந்தன. சில மூலப் பொருள்களுக்கான தேவைகள் (குறிப்பாக சக்தித் துறையில்) அதிகரித்த பொழுது சப்ளைப் பிரச்சினைகள் ஏற்பட்டன. சோவியத் யூனியன் தனது எண்ணெய் மற்றும் எரிவாயுத் தொழில் துறையை தொலைவிலுள்ள மாவட்டங்களுக்கு மாற்றியதன் விளைவாகக் கஷ்டங்கள் அதிகரித்தன. எனினும் சோவியத் யூனியன் எண்ணெய், எரிவாயு மற்றும் எண்ணெய்ப் பொருள்களை மற்ற சோஷலிச நாடுகளுக்கு அதிகமாகவே சப்ளை செய்திருக்கிறது, உலகச் சந்தை நிலவரங்களைக் காட்டிலும் குறைவான விலைகளுக்கு விற்பனை செய்து வந்திருக்கிறது. சோவியத் யூனியனிலிருந்து அவசியமான பொருள்கள் நம்பிக்கையான முறையில் கிடைத்துக் கொண்டிருப்பது தேசியப் பொருளாதாரத் திட்டமிடுதலுக்கு உறுதியான அடிப்படையைக் கொடுத்திருக்கிறது. மறு பக்கத்தில் சோவியத் யூனியன் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளிலிருந்து தொழில்துறை மற்றும் விவசாயப் பொருள்களை இறக்குமதி செய்வது சோவியத் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமாகும்.

முதலாளித்துவத்தில் உள்ளூறையாகவுள்ள

முரண்பாடுகள் சோஷலிசத்தின் கீழ் ஏற்பட மாட்டா. புதிய சமூக அமைப்பின் சாதகங் களும் சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் பரஸ்பர உதவியும் அவை வளர்ச்சிப் பாதையில் சந்திக்கும் சிக்கல்களைத் தீர்க்க உதவுகின்றன. கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் முரணில்லாத மார்க்சிய-லெனினிய சர்வதேசியக் கொள்கையைக் கடைப்பிடிப்பது சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்துக்கு நடைபெறும் போராட் டத்தில் தீர்மானகரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

பொருளாதார வளர்ச்சியில் சகோதர அரசு களின் சாதனைகளின் விளைவாக அவை பெரும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். சிஎம்இஏ நாடுகளில் உழைக்கும் நிலைமைகளும் வாழ்க்கைத் தரமும் தொடர்ச்சியாக அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கின்றன; கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் காங்கிரசு களில் நிறைவேற்றப்படும் சமூக-பொருளாதார செயல்திட்டங்கள் முரணில்லாமல் அமுலாக்கப் படுகின்றன. சிஎம்இஏ நாடுகளில் தேசிய வரு மானத்தில் 75 சதவிகிதம் வரை சமூக மற்றும் தனி யார் நுகர்வுக்காக ஒதுக்கப்படுகிறது. உதாரண மாக, 1976—1980ம் வருடங்களில் இந்த நாடுகளில் மெய்யான தனிநபர் வருமானம் 15 சதவிகிதம் அதிகரித்தது.

உதாரணமாக 1981ம் வருடத்தை எடுத்துக் கொள்வோம். இது சோஷலிஸ்ட் நாடுகளைப் பொறுத்தமட்டில் வழக்கமான வருடமே. இவ்

வருடத்தில் மெய்யான தனிநபர் வருமானங்கள் 1980ஐக் காட்டிலும் பல்கேரியாவில் 3 சதவிகிதத்திற்கு அதிகமாகவும் ஹங்கேரியில், ருமேனியாவில் 2.2 சதவிகிதமும் சோவியத் யூனியனில் 3.3 சதவிகிதமும் அதிகரித்தன. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலும் மங்கோலியாவிலும் செக்கோஸ்லோவாக்கியாவிலும் ரொக்க வருமானங்கள் முறையே 3.3, 6 மற்றும் 2.8 சதவிகிதம் அதிகரித்தன. கியூபாவில் சராசரி ஊதியம் 14 சதவிகிதம் அதிகரித்தது. தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களின் ஊதியங்கள் தொடர்ச்சியாக அதிகரித்தன. இந்த ஊதியங்களே மெய்யான வருமானத்தின் தோற்றுவாய்கள்.

நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதுடன், தரமான பொருள்களை சப்ளை செய்வதன் மூலம் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இது சில்லறை வர்த்தகத்தின் வளர்ச்சி விகிதத்தின் மீது தாக்கம் செலுத்துகிறது. இது பல்கேரியாவில் 4,6 சதவிகிதமும் ருமேனியாவில் 4,3 சதவிகிதமும் செக்கோஸ்லோவாக்கியாவில் 2,3 சதவிகிதமும் அதிகரித்தது.

மக்கள் வசிப்பதற்காக வீடுகள் மிகவும் பெரிய அளவில் நிர்மாணிக்கப்படுகின்றன. 1981இல் பல்கேரியாவில் 70,300 வீடுகள் கட்டப்பட்டன, ஹங்கேரியில் 77,000, கியூபாவில் 24,000, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் 185,000, ருமேனியாவில் 164,200 மற்றும் சோவியத் யூனியனில் இரண்டு மில்லியன் வீடுகள் கட்டப்பட்டன.

கல்வி, உயர்கல்வி, கலாசாரம் மற்றும் சுகாதார-மக்கள்நல அமைப்பின் பொருளாயத அடிப்படை மேலும் பலப்படுத்தப்பட்டது. மருத்துவ வசதிக்கும் மக்கள் ஓய்வெடுக்கும் நிலையங்களுக்கும் அதிகமான நிதி செலவிடப் பட்டது.

சோஇ நாடுகளில் ஆரோக்கியமான இளை ஞர்கள் அனைவருக்கும் வேலை உத்தரவாதம் உண்டு. தொழிலாளர்கள் மற்றும் அலுவலர் களின் எண்ணிக்கை 160 மில்லியனாகும்.

முதலாளித்துவ உலகத்தில் உழைக்கும் மக் களின் நிலைமையுடன் ஒப்பிட்டால் சோஷலிஸ்ட் வாழ்க்கை முறையின் சாதகங்கள் சிறப்பாகப் புலப்படும். பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி ஸ்தாபனத்தில் (OECD) இணைந் திருக்கின்ற 24 முதலாளித்துவ நாடுகளில் 1981ம் வருடத்தின் கடைசியில் வேலையில்லாதவர் களின் எண்ணிக்கை 26 மில்லியனாக இருந்தது. இதில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 10.5 மில் லியனும் கிரேட் பிரிட்டனில் 3 மில்லியனும் இத்தாலியில் 2 மில்லியனும் மேற்கு ஜெர்மனி யில் 1.7 மில்லியனும் ஜப்பானில் 1.2 மில்லிய னும் அடங்கும்.

''எல்லாமே மனிதனுக்காக, எல்லாமே மனி தனுடைய நன்மைக்காக!'' என்பது, சோஷலிசத் தின் தலையான குறிக்கோளாகும். கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் இக்குறிக்கோளை நிறைவேற்றக் கூடிய கொள்கையை முரணில் லாமல் கடைப்பிடித்து வருவதை சோஇ

நாடுகளின் வளர்ச்சி தெளிவாக எடுத்துக்காட்டு கிறது.

சமூக-பொருளாதார வளர்ச்சியும் விரிவடை கின்ற சோஷலிஸ்ட் ஜனநாயகமும் தனிநபரின் சர்வாம்ச வளர்ச்சிக்கும் தனிநபர் நலன்களை சமூக நலன்களுடன் இசைவிப்பதற்கும் பரந்த வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன. சுரண்டல் மற்றும் சுரண்டல்காரர்களிடமிருந்து விடுதலை யடைந்துள்ள சோஷலிஸ்ட் நாடுகளின் மக்கள் வேலையுரிமை, கல்வியுரிமை, வீட்டு வசதி, இலவச மருத்துவ உதவி, முதலிய பரந்த உரிமைகளை அனுபவிக்கிறார்கள். ஒரு நபர் தனக்கு விருப்பமான வேலையைத் தேர்ந்தெடுக் கின்ற சுதந்திரம், தன்னுடைய ஆற்றலையும் திறமையையும் சமூகத்துக்கும் தன்னுடைய மெய்யான நலன்களுக்கும் உபயோகிக்கின்ற சுதந்திரம் எதிர்காலத்திலும் சுய பலத்திலும் அவருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி சுயமரி யாதையை வளர்க்கிறது.

சோஷலிச நிர்மாணத்தின் போது மக்களின் அறிவுத் தொகுதியில் கணிசமான மாற்றங்கள் ஏற்படுகின்றன; மார்க்சிய-லெனினிய சித்தாந் தத்தின் தாக்கத்தினால் அவர்களுடைய உணர்வு உருவாகிறது; சோஷலிஸ்ட் சமூகத்தின் மக்களுக் குரிய கூறுகள் பரிணமிக்கின்றன, சோஷலிஸ்ட் வாழ்க்கை முறை வளர்ச்சியடைகிறது.

சோஷலிஸ்ட் நாடுகளில் மார்க்சிய-லெனினிய சித்தாந்தம் பலமடைவது சோஷலிசம் மற்றும் கம்யூனிச நிர்மாணத்தைப் பற்றிய பிரச்சினை

களின் தீர்வுடனும் அரசியல் பணியின் உயர்ந்த சித்தாந்த மட்டத்துடனும் புதிய மனிதனை உருவாக்குவதுடனும் சோஷலிஸ்ட் கலாசாரத் தின் வளர்ச்சியுடனும் பின்னிப் பிணைந்திருக் கிறது. அதே சமயத்தில் முதலாளித்துவப் பிரச்சாரத்தை எதிர்ப்பதும் கம்யூனிச எதிர்ப் புக்கு எதிராகப் போராடுவதும் முதலாளித்துவ சமூகத்தின் மக்கள் விரோதத் தன்மையை அம்பலப்படுத்துவதும் தீவிரப்படுத்தப்படுகின் றன.

சகோதரக் கட்சிகளின் ஆவணங்கள் சுட்டிக் காட்டுவதைப் போல மக்களிடம் விஞ்ஞான, மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டத்தை ஏற்படுத்துவதே இன்னும் முக்கியமான கடமை யாக இருக்கிறது. இதை நிறைவேற்றுவதில் அரசியல் உணர்வின் உயர்ந்த மட்டத்தை உரு வாக்குவது கேந்திரமானதாகக் கருதப்படுகிறது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள் கையைப் புரிந்து கொள்ளுதல், பெருந்திரளான மக்களிடையில் அதன் ஆதரவு, புரட்சிகரமான போராட்டம் மற்றும் சோஷலிச நிர்மாணத்தின் வரலாற்றையும் இன்றைக்கிருக்கின்ற சோஷ லிசத்தின் சாதனைகளையும் பிரச்சினைகளை யும் பற்றி, சோஷலிசத்தின் எதிரிகள் கடைப் பிடிக்கின்ற சித்தாந்தச் சீர்குலைப்பின் மெய்யான நோக்கங்களையும் அதை எதிர்ப்பதற்கு அவசிய மான திறமையையும் பற்றி சரியான கருத்து ஆகியவை இதில் அடங்கியுள்ளன.

மற்ற சோஷலிஸ்ட் நாடுகளின் கம்யூனிஸ்ட்

கட்சிகளும் இதே நோக்கங்களைப் பின்பற்று கின்றன. சோஷலிஸ்ட் தாயகத்துக்கு சேவை செய்யக் கூடிய, சோஷலிஸ்ட் அரசையும் அதன் ஸ்தாபனங்களையும் சமூக ஒழுங்குமுறையையும் கட்டுப்பாட்டையும் பலப்படுத்தக் கூடிய, தங் களுடைய உரிமைகள் மற்றும் கடமைகளின் ஒருமையைப் புரிந்து கொண்டு, மாபெரும் சோஷ லிஸ்ட் குடும்பத்தில் உறுப்பினராக இருப்பதைப் பற்றிப் பெருமை அடையக் கூடிய உண்மை யான தேசபக்தர்களை உருவாக்குவது கல்விப் பயிற்சியின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றா கும்.

சித்தாந்தப் பிரச்சினைகளை வெற்றிகர மாகத் தீர்ப்பதற்கு சர்வதேச நிலைமையில் ஏற்படுகின்ற மாற்றங்களின் வர்க்க சாரத்தையும் தன்மையையும் ஆழமான முறையில் புரிந்து கொள்வது முக்கியமான நிபந்தனையாகும். கம் யூனிஸ்ட் கட்சிகள் சமூக வாழ்க்கை சம்பந்த மான அனைத்து விவரங்கள், நிகழ்வுகள் மற்றும் நிகழ்வுப் போக்குகளைப் பற்றி வர்க்க அணுகுமுறையை மக்களுக்குக் கொடுப்பதற்கு முயற்சி செய்கின்றன. இதைச் செய்கின்ற பொழுது அவை சோஷலிசத்துக்கும் முதலாளித் துவத்துக்கும் இடையிலான தீவிரமான சர்வ தேச சித்தாந்த மற்றும் அரசியல் போராட்டம் சோஷலிஸ்ட் நாடுகளின் வாழ்க்கையில் ஏற் படுத்துகின்ற தாக்கத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்வதையும் புதிய உலகத்தின் வளர்ச்சிக்கு அவற்றின் சமரசமில்லாத போராட்டத்தின் முக்



4*

கியத்துவத்தையும் பழைய கருத்துக்களுக்கும் புதிய கருத்துக்களுக்கும் இடையிலுள்ள முரணி யல்பையும் புரிந்து கொள்வதையும் வலியுறுத்து கின்றன.

சோஷலிசத்தின் சித்தாந்தத் தாக்குதல் சமூக வளர்ச்சி பற்றிய அவசரமான பிரச்சினைகள், சர்வதேசக் கொள்கை மற்றும் உலக அளவி லான சித்தாந்தப் போராட்டம் ஆகியவற்றைத் தத்துவ ரீதியில் விரித்துரைப்பதை அடிப்படை யாகக் கொண்டிருக்கிறது. உலக வளர்ச்சி, சர்வ தேச உறவுகள், புரட்சிகர நிகழ்வுப் போக்கு, அதன் பல்வேறு போக்குகளின் இடைச்செயல் மற்றும் ஒருமை, ஜனநாயகத்துக்கான போராட் டத்தை சோஷலிசத்துக்கான போராட்டத்துடன் பொருத்துதல், யுத்தமா, சமாதானமா என்னும் இன்றைய கேந்திரமான பிரச்சினையில் போராட் டம் ஆகிய முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி விஞ்ஞான ஆராய்ச்சி மென்மேலும் அதிக மான முக்கியத்துவத்தைப் பெற்று வருகிறது.

இக்கடமைகளின் ஒளியில், எதிரிடையான சமூக அமைப்புகளுக்கு இடையில் வரலாற்று ரீதியான போட்டியை வெவ்வேறு சமூக அமைப்பு களைக் கொண்ட அரசுகளுக்கு இடையில் ஒத் துழைப்புடன் பொருத்துவதின் இயக்கவியலைப் பற்றி ஆழமான தத்துவப் பகுப்பாய்வு செய்யப் பட வேண்டும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்ற நாடுகளில் ஆட்சிப் பொறுப்பிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளும் சர்வதேச அரங்கத்தில்

தம்முடைய போராட்டத்தில், ஏகாதிபத்தியம் நீடிக்கின்ற வரை சர்வதேச உறவுகளில் கணிச மான மாற்றங்கள் ஏற்பட முடியாது என்கின்ற வறட்டுக் கோட்பாட்டுவாதக் கருத்துக்களை முறியடிக்கப் பாடுபடுகின்றன. இவ்விதமான கருத்துக்கள் ஆபத்தானவை. ஏனென்றால் அவை சர்வதேச அரங்கத்தில் சோஷலிசத்துக்கு ஆதரவாக ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களைப் புறக்கணிக்கின்றன, சோஷலிச அமைப்பின் பலம் வளர்ச்சியடைவதன் விளைவாகப் புரட்சி கர இயக்கத்துக்கு முன்னால் தோன்றியுள்ள புதிய வாய்ப்புகளை மறுக்கின்றன, நிரந்தரமான, நியாயமான உலக சமாதானத்துக்காக முற் போக்கு சக்திகளின் தீவிரமான போராட்டத்தை அரித்தழிக்கின்றன.

சோஷலிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் முதலாளி வர்க்க சித்தாந்தத்துக்கு எதிரான போராட்டம் விசேஷமான முக்கியத் துவத்தைக் கொண்டிருப்பதாகக் கருதுகின்றன. அவற்றின் தத்துவப் பணி சோஷலிசத்தின் எதிரிகள், கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்கள், சோவி யத் எதிர்ப்பாளர்கள், தேசியவாதம் மற்றும் சமூக வளர்ச்சியைப் பற்றிய எல்லா ஏகாதிபத் திய, வலது சந்தர்ப்பவாத மற்றும் "இடது" அதிதீவிரவாத தத்துவங்கள் மற்றும் கருத் தமைப்புகளுக்கு எதிராகத் தொடர்ச்சியான போராட்டச் சூழ்நிலையில் நடைபெறுகிறது.

முதலாளி வர்க்க சித்தாந்தத்துக்கு எதிரான போராட்டத்தைப் பற்றிய வர்க்க அணுகுமுறை

மார்க்சியத்துக்குப் புறம்பான முதலாளித்துவ மற்றும் சீர்திருத்தவாதக் கருத்தமைப்புகளை விமர்சிப்பது மட்டுமல்லாமல் அவற்றின் மெய் யான நிகழ்வுப் போக்கைப் பற்றி ஆழமான விஞ்ஞானப் பகுப்பாய்வைக் கோருகிறது. முத லாளி வர்க்க சித்தாந்திகள் நம் காலத்திய வாழ்க்கையின் புதிய நிகழ்வுகளை—குறிப்பாக, விஞ்ஞான-தொழில்நுட்பவியல் புரட்சி, தேசிய உணர்வின் வளர்ச்சி, இளைஞர்களின் அரசியல் நடவடிக்கைகள், இதரவற்றுடன் சம்பந்தப் பட்டவற்றை—பற்றிச் சிந்திக்கின்ற பொழுது சமூக நிகழ்வுகளின் சாராம்சத்தையும் தன்மை யையும் திரித்துக் கூறுவதற்கு முயற்சி செய் கிறார்கள். அதனால் சித்தாந்த நடவடிக்கை யின் எல்லாத் துறைகளிலும் மார்க்சியத் தத்து வத்தை வளர்ப்பது மிக முக்கியமானதாக இருக் கிறது. லெனினியத்தின் படைப்புத் தன்மை, புதிய அனுபவத்தின் ஒளியில் மார்க்சிய-லெனி னியத் தத்துவத்தைத் தொடர்ச்சியாக வளர்ப் பதும் செழுமைப்படுத்துவதுமே முதலாளி வர்க்க சித்தாந்தத்துக்கு எதிரான மிகச் சிறந்த ஆயுதம்.

சோஷலிசம் ஆரம்பத்திலிருந்தே ஒரு சர்வ தேச நிகழ்வாக, ஒன்றுக்கொன்று நெருக்கமாக ஒத்துழைக்கின்ற அரசுகள் மற்றும் மக்களினங் களின் கூட்டணியாக, பொருளாதார, அரசியல் மற்றும் சித்தாந்த ரீதியில் ஒரே சமூகமாக அமைந் திருப்பதால்தான் சோஷலிசத்தின் எல்லாச் சாதனைகளும் சாத்தியமாகியிருக்கின்றன.

பொருளாதார, அரசியல் மற்றும் ஆன்மிக

வாழ்க்கையை சர்வதேசமயமாக்குதல் சோஷலிஸ்ட் வளர்ச்சியின் புறநிலையான விதியாகும். ''மனித சமுதாயம் சின்னஞ்சிறு அரசுகளாகப் பிரிந்து, பலவகைத் தேசிய இனங்களாகத் தனித்து வாழ்வதை முடிவுக்குக் கொண்டுவருவதும், அவைகளிடையில் பரஸ்பர நல்லுறவை மீண்டும் ஏற்படுத்துவதும் மட்டும் சோஷலிசத்தின் நோக்கமல்ல. அவைகளை ஒன்றோடொன்று இரண்டறக் கலக்கச் செய்வதும் அதன் நோக்கமாகும்''* என்று லெனின் வற்புறுத்தினார். இது 'முழு வரலாற்றுச் சகாப்தத்தை உள்ளடக்கிய படிப்படியான நிகழ்வுப் போக்கு.

முதலாளித்துவ உலகத்தில் சர்வதேசமயமாக்குதல் என்றால் அதிக வலிமையான ஏகபோகங்களும் அரசுகளும் மற்ற நாடுகள், மக்களினங்களின் மீது தம்முடைய சித்தத்தைத் திணித்து அவற்றை விவசாய விளை பொருள்கள் மற்றும் மூலப் பொருள்களைக் கொடுக்கின்ற நாடுகளாகச் செய்தல் என்று அர்த்தமாகும். ஆனால் சோஷலிச உலகம் வேறு கோட்பாடுகளைப் பின்பற்றுகிறது. உலக சோஷலிஸ்ட் அமைப்பின் உருவாக்கமும் வளர்ச்சியும் அரசுரிமை மற்றும் விருப்பபூர்வமாக இணைதல் என்ற கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன, அந்த அமைப்பிலுள்ள மக்களினங்கள் அனைவருடைய ஜீவாதாரமான

---

* வி. இ. லெனின், **தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதமும். சில பிரச்சினைகள்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1969, பக்கம் 178.

நலன்களுக்கும் ஏற்ப நடைபெறுகின்றன.

சகோதர நாடுகளுக்கு இடையில் உறவுகள் எல்லாக் கட்டங்களிலும் இரண்டு போக்குகளின் இடைச்செயலை அடிப்படையாகக் கொண்டிருக் கின்றன: முதலாவது, பொருளாதாரம், அரசு அமைப்பு மற்றும் கலாசாரத்தின் வளர்ச்சி, மற்றும் தேசிய சுதந்திரம், அரசுரிமையை பலப் படுத்துதல்; இரண்டாவது, மக்களினங்களுக்கு இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு, அவர் களுக்கு இடையிலுள்ள உறவுகளை விரிவு படுத்துதல் மற்றும் ஆழப்படுத்துதல். எல்லா நாடு களிலும் புதிய சமூக அமைப்பு பலமடைகிறது, அவற்றின் பொருளாதார சக்தி, பொருளாதார, கலாசார முன்னேற்றத்திற்கும் அரசு அமைப்பின் வளர்ச்சிக்கும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. சோஷலிஸ்ட் அரசுகள், மக்களினங்களுக்கு இடையில் சர்வாம்ச உறவுகள் தொடர்ச்சியாக விரிவாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின் றன.

சகோதர சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடை யிலுள்ள உறவுகள் பாட்டாளி வர்க்க சர்வ தேசியக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இக்கோட்பாடு அரசு களுக்கு இடையில் மற்றும் கட்சிகளுக்கு இடை யிலான உறவுகளிலும் இந்த நாடுகளின் சமூக ஸ்தாபனங்களுக்கும் கூட்டு உழைப்பு அமைப்பு களுக்கும் இடையிலான உறவுகளிலும் பின் பற்றப்படுகிறது. வாழ்க்கையின் எல்லாத் துறை களிலும் அது பரவியிருக்கிறது, பொருளாதார

ஒத்துழைப்பில் அது சாதிக்கப்படுகிறது. சோஷலிஸ்ட் சாராம்சத்தினால் வளப்படுத்தப்பட்டு சோஷலிஸ்ட் அரசுகளுக்கு இடையிலான உறவுகளின் மூலம் மேலும் வளர்க்கப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வதேசியம் சோஷலிஸ்ட் சர்வதேசியம் என்று அழைக்கப்படுகிறது.

தேசிய இனங்களுக்கு இடையில் முதல் தட்வையாக சமத்துவமான உறவுகளை நிறுவிய பல தேசிய இனங்களைக் கொண்ட சோவியத் யூனியனுடைய அனுபவம் சோஷலிஸ்ட் அரசுகளைச் சேர்ந்த மக்களினங்களுக்கு இடையில் புதிய ரகமான உறவுகளை வளர்ப்பதில் அதிக முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. இந்த உறவுகளின் அடிப்படையான கோட்பாடுகள் பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு ஒன்றிய அரசின் உறவுகளை ஒழுங்கமைத்தாலும் அவற்றை அரசுரிமை கொண்ட அரசுகளுக்கு இடையிலுள்ள உறவுகளுக்கும் கையாள முடியும்.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் உறவுகள் சில கட்டங்களில் வளர்ச்சியடைந்திருக்கின்றன; ஒவ்வொரு கட்டத்திலும் தனிப்பட்ட சோஷலிஸ்ட் நாடுகளின் மாபெரும் சாதனைகளும் பரஸ்பர ஒத்துழைப்பு மேலும் அதிகரிப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

முதல் கட்டத்தில் (உத்தேசமாக 1945—1949) சோஷலிஸ்ட் நாடுகளின் இராணுவ மற்றும் அரசியல் கூட்டணி அமைக்கப்பட்டது. சோவியத் யூனியன் மக்கள் ஜனநாயக நாடுகளுடன் நட்பு, ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர

உதவி உடன்படிக்கைகளைச் செய்து கொண்டது; அந்த நாடுகள் தமக்கிடையில் இரு தரப்பு உடன்படிக்கைகளைச் செய்து கொண்டன:

*1943*—சோவியத் யூனியனும் செக்கோஸ்லோவாக்கியாவும்;

*1945*—சோவியத் யூனியனும் போலந்தும்;

*1946*—சோவியத் யூனியனும் மங்கோலியாவும், யூகோஸ்லாவியாவும் போலந்தும், யூகோஸ்லாவியாவும் செக்கோஸ்லோவாக்கியாவும், யூகோஸ்லாவியாவும் அல்பேனியாவும்;

*1947*—போலந்தும் செக்கோஸ்லோவாக்கியாவும், பல்கேரியாவும் யூகோஸ்லாவியாவும், யூகோஸ்லாவியாவும் ஹங்கேரியும், அல்பேனியாவும் பல்கேரியாவும், யூகோஸ்லாவியாவும் ருமேனியாவும்;

*1948*—பல்கேரியாவும் ருமேனியாவும், ருமேனியாவும் ஹங்கேரியும், ருமேனியாவும் சோவியத் யூனியனும், சோவியத் யூனியனும் ஹங்கேரியும், பல்கேரியாவும் சோவியத் யூனியனும், பல்கேரியாவும் செக்கோஸ்லோவாக்கியாவும், பல்கேரியாவும் போலந்தும், போலந்தும் ஹங்கேரியும், பல்கேரியாவும் ஹங்கேரியும், ருமேனியாவும் செக்கோஸ்லோவாக்கியாவும்;

*1949*—போலந்தும் ருமேனியாவும், செக்கோஸ்லோவாக்கியாவும் ஹங்கேரியும்.

சோஷலிஸ்ட் நாடுகளின் இராணுவ மற்றும் அரசியல் கூட்டணியை பலப்படுத்தியது உள்நாட்டில் மக்களின் ஆட்சியதிகாரத்தை வலுப்படுத்துவதை ஊக்குவித்தது, சர்வதேச அரங்

கத்தில் அவற்றின் நிலைகளை வலுப்படுத்து வதற்கும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து சோஷலிஸ்ட் வெற்றிகளைப் பாதுகாப்பதற்கும் உதவி புரிந்தது.

சோவியத் யூனியன் இந்த நிகழ்வுப் போக்கில் கேந்திரமான பாத்திரத்தை வகித்தது. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிலிருந்து மக்கள் ஜனநாயக நாடுகளைப் பாதுகாப்பதில் அதன் பலம் தீர்மானகரமாக இருந்தது. அது மக்கள் ஜனநாயக நாடுகளுக்கு மிகவும் அதிகமான பொருளாயத உதவியைச் கொடுத்தது, உணவுப் பொருள்களை அனுப்பியது, இரண்டாவது உலக யுத்தத்தின் விளைவாக நாசமடைந்திருந்த அவற்றின் பொருளாதாரத்தைப் புனரமைப்பதற் காக கட்டிடப் பொருள்கள் மற்றும் தளவாடங் களைக் கொடுத்துதவியது. சோவியத் யூனியன் கொடுத்த சித்தாந்த மற்றும் தார்மிக ஆதரவு மிகவும் முக்கியமானதாகும்.

முதல் கட்டத்தின் போது சோவியத் யூனி யனுக்கும் மக்கள் ஜனநாயக நாடுகளுக்கும் இடையில் பொருளாதாரப் பிணைப்புகள் மிக வும் பலவீனமாக இருந்தன. ஐரோப்பாவிலிருந்த மக்கள் ஜனநாயக நாடுகளின் சர்வதேசப் பொருளாதார உறவுகள் உலக முதலாளித் துவப் பொருளாதார அமைப்பை நெடுங்கால மாகச் சார்ந்திருந்ததன் விளைவுகளினால் இன் னும் பாதிக்கப்பட்டிருந்தன. அந்த நாடு களின் பொருளாதாரத்துக்கு முதலாளித்துவ அமைப்பில் ஏற்பட்டிருந்த திசையமைவை

மாற்றுவது மிகவும் கடினமாக இருந்தது.

உலக சோஷலிஸ்ட் அமைப்பின் உருவாக்கத்தின் ஆரம்பக் கட்டத்தின் போது பொருளாதார உதவி என்னும் சுற்றுவட்டத்திற்குள் சரக்குகளின் பரிவர்த்தனையும் பொருள்களை சப்ளை செய்வதும் சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் பொருளாதார உறவுகளின் தலைமையான கூறாக இருந்தன. இவை பிரதானமாக, இரு தரப்பு உறவுகளாக இருந்தன. உலக சோஷலிஸ்ட் சந்தை பரிணமித்துக் கொண்டிருந்தது, சோஷலிஸ்ட் ஒத்துழைப்பின் வடிவங்கள் தோன்றத் தொடங்கியிருந்தன. பழைய முதலாளித்துவ சர்வதேச உறவுகளின் அமைப்பிலிருந்து அரசுகளுக்கு இடையில் புதிய ரகத்தைச் சேர்ந்த உறவுகளுக்கு மாறும் கட்டம் என்று அதைக் குறிப்பிடலாம். அதன் பிறகு, இராணுவ மற்றும் அரசியல் கூட்டணியுடன் விரிவான சமூக-பொருளாதார ஒத்துழைப்பும் சேர்க்கப் பட்டது.

மக்கள் ஜனநாயக நாடுகள் தம் ஜனநாயக மாற்றங்களைப் பூர்த்தி செய்துவிட்டு சோஷலிச நிர்மாணத்தைத் தொடங்கிய பொழுது **இரண்டாவது கட்டம்** — சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் பல்துறையான பிணைப்புகளை வளர்க்கும் கட்டம் — ஆரம்பமாயிற்று. இக்கட்டம் உத்தேசமாகப் பத்தாண்டுகள் **(1949 — 1959)** நீடித்தது. இக்கட்டத்தின் போது பொருளாதாரம், சமூக-அரசியல் உறவுகள், பாதுகாப்பு, கலாசாரம் ஆகிய எல்லாத் துறைகளையும்

தழுவிய விரிவான பன்முக உறவுகள் ஏற் படுத்தப்பட்டன.

அதிக வளர்ச்சியடைந்த நாடுகள் நேரடி யான பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உதவியளித்தல் உலக சோஷ லிஸ்ட் அமைப்பைச் சேர்ந்த நாடுகளுக்கு இடை யிலிருந்த உறவுகளில் பிரதான கூறாக இருந் தது. பல்கேரியா, ருமேனியா போன்ற நாடு களில் நவீனத் தொழில்துறையின் அடிப்படையை ஏற்படுத்துவதில் மட்டுமல்லாமல் மக்கள் ஜனநாயக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மட்டத்தில் சமநிலையை ஏற்படுத்துவதிலும் அது முக்கியமான காரணிகளில் ஒன்றாக இருந் தது. 1950க்களில் அது நாட்டுக்கு நாடு கணிச மான அளவுக்கு ஒரே சீராக்கப்பட்டது.

இரு தரப்பு வர்த்தகமும் வளர்ச்சியடைந் தது. 1950இலிருந்து 1960க்குள் வர்த்தகத்தின் அளவு மும்மடங்குக்கும் அதிகமாக அதிகரித் தது.

1950க்களின் நடுப்பகுதியிலிருந்து தேசியப் பொருளாதாரத்தைத் திட்டமிடுதலின் ஒருங் கிணைப்பு வர்த்தக மற்றும் பொருளாதார உதவியுடன் சேர்ந்து வளர்ச்சியடையத் தொடங் கியது.

1949 ஜனவரியில் செக்கோஸ்லோவாக் கியா, சோவியத் யூனியன், ஹங்கேரி, பல் கேரியா, போலந்து, ருமேனியா ஆகிய நாடு களின் பிரதிநிதிகளின் பொருளாதார மாநாடு நடைபெற்றது. அதில் சகோதர நாடுகளுக்கு

இடையில் பொருளாதார ஒத்துழைப்புக்குரிய ஸ்தாபனம்—பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சில் (சிஎம்இஏ) என்ற பெயரில் அமைக்கப் பட்டது. அதன் பிறகு மற்ற சோஷலிஸ்ட் நாடுகளும் அதில் சேர்ந்தன: 1949இல்—அல்பே னியா (1961க்குப் பிறகு அல்பேனியா சிஎம்இஏ கூட்டங்களில் பங்கெடுக்கவில்லை), 1950இல்—ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, 1962இல்—மங்கோலியா, 1972இல்—கியூபா, 1978இல்—வியத்நாம்.

மேற்கு ஐரோப்பாவிலும் வடக்கு அமெரிக்கா விலும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக் கூட்டணி யான ''நாட்டோ'' தன் இராணுவ பலத்தைப் பன்மடங்கு பெருக்கியது. இதைச் சமாளிப்பதற் காக 1955 மேயில் வார்சா உடன்படிக்கை ஸ்தாபனம் நிறுவப்பட்டது. இந்த ஸ்தாபனம் உறுப்பினர்களாக உள்ள நாடுகளின் பாது காப்பை உறுதிப்படுத்துகிறது. சமாதானத்தைக் காப்பதற்கும் பலப்படுத்துவதற்கும் நடைபெறு கின்ற போராட்டத்தில் அவற்றின் நடவடிக்கை களை ஒருங்கிணைக்கிறது. வார்சா உடன் படிக்கை ஸ்தாபனம் மாபெரும் வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது; ஏனென் றால் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும், ஆக்கிரமிப்பு வெறிபிடித்த ஏகாதிபத்தியத்திட மிருந்து புரட்சியின் சாதனைகளைக் கூட்டாகப் பாதுகாத்தலையும் பற்றிய லெனின் கருத்துக் களை அது ஸ்தூலமாக அமுல் நடத்தியது. இப்பாதுகாப்புக் கூட்டணி ஒரு முக்கியமான

நோக்கத்தை நிறைவேற்றியது. அது ஐரோப்பிய சோஷலிஸ்ட் நாடுகளின் பொருளாதார வளங்களையும் இராணுவ பலத்தையும் ஒன்றிணைத்து அவற்றின் பாதுகாப்பு வலிமையைப் பன்மடங்கு பெருக்கியது.

உலக சோஷலிசம் புதிய வளர்ச்சிக் கட்டத்துக்குள் நுழைந்திருக்கிறது என்று 1960இல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசக் கூட்டம் முடிவு செய்தது. இன்றைய கட்டம் மூன்றாவது கட்டமாகும். சோவியத் யூனியன் கம்யூனிசத்தை நிர்மாணிக்கின்ற கட்டத்தைத் தொடங்கியிருத்தல், பல மக்கள் ஜனநாயக நாடுகள் வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணிப்பதை தொடங்கியிருத்தல், உலக சோஷலிஸ்ட் அமைப்பிற்குள் சோஷலிஸ்ட் உறவுகள் வெற்றி பெற்றிருத்தல் ஆகியவை இக்கட்டத்தின் பிரதான கூறுகளாகும். இவற்றுடன் சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் சர்வாம்ச ஒத்துழைப்பு மென்மேலும் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது.

1960இல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசக் கூட்டம் புதிய ரகத்தைச் சேர்ந்த சர்வதேச உறவுகளின் அனுபவத்தைப் பின்வரும் விதத்தில் மதிப்பிட்டது: ‘‘சோஷலிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த மக்களினங்களின் பொது நலன்களும் சமாதானம் மற்றும் சோஷலிசத்தின் நலன்களும் சோஷலிஸ்ட் சர்வதேசியம் மற்றும் சோஷலிஸ்ட்

தேசபக்திக் கோட்பாடுகளை அரசியலில் சரியாக இணைக்க வேண்டுமென்று கோருகின்றன. தன் அரசில் ஆளும் கட்சியாக இருக்கின்ற ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியும் தன்னுடைய நாடு, மொத்த சோஷலிஸ்ட் முகாம் ஆகிய இரண்டின் விதிகளுக்கும் வரலாற்றுப் பொறுப்பைக் கொண்டிருக்கிறது.''*

இப்புதிய சர்வதேச உறவுகள் வளர்ச்சியடைந்திருப்பதால் சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையிலுள்ள உறவுகளில் எல்லாப் பிரச்சினைகளும் முற்றிலும் மறைந்து விட்டன என்று கருதக் கூடாது. ஒவ்வொரு நாட்டையும் எதிர்நோக்குகின்ற கடமைகள் வெவ்வேறு ரகத்தைச் சேர்ந்தவை, அவை பெரும்பாலும் மிகவும் தனித்தன்மையைக் கொண்டிருக்கின்றன; நாடுகளின் வளர்ச்சி மட்டங்களும் நிலைமைகளும் வெவ்வேறாக இருக்கின்றன. இவற்றின் விளைவாக, சில சமயங்களில் சில பிரச்சினைகளுக்கு வெவ்வேறு அணுகுமுறைகள் ஏற்பட்டன. எனினும் வளர்ச்சியின் போது தோன்றிய இவ்வேற்றுமைகள் பகைமையானவை அல்ல, சரியான மார்க்சிய-லெனினிய அணுகுமுறையைக் கையாண்டதன் மூலம் எல்லா சோஷலிஸ்ட் நாடுகளின் நலன்களுக்கும் ஏற்ற முறையில் இந்த உறவுகளுக்கு ஆதாரமான விசேஷக் கோட்பாடுகளே இவ்வேற்றுமைகளை வெற்றிகரமாகத் தீர்த்தன.

---

* *The Struggle for Peace, Democracy and Socialism,* Foreign Languages Publishing House, Moscow, 1963, p. 51.

உலக சோஷலிஸ்ட் அமைப்பின் உருவாக்கம் உலக அரங்கத்தில் சக்திகளின் சமநிலையின் வெறும் அளவு ரீதியான மாற்றமல்ல, ஒவ் வொரு நாட்டின் வளர்ச்சியிலும் குண ரீதி யான மாற்றங்களை அடைய முடியும் என் பதை அது குறித்தது. சோஷலிஸ்ட் நாடுகளின் சர்வதேசக் கூட்டமைப்பின் சுற்றுவட்டத்துக் குள் கொள்கையை ஒருங்கிணைக்கின்ற வாய்ப்பு ஒவ்வொரு சகோதர நாட்டிற்குள்ளேயும் அவை அனைத்திலும் உயர்மட்ட வளர்ச்சிக்குரிய நிலை மைகளை ஏற்படுத்தியது.

சர்வதேச சோஷலிஸ்ட் கூட்டமைப்பு முத லாளித்துவ சமூகத்தைக் காட்டிலும் பொருளா தார, அரசியல் மற்றும் ஆன்மிக ரீதியில் வளமாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதை காலம் எடுத்துக்காட்டியிருக்கிறது. மனிதகுலத் தின் வளர்ச்சியில் உள்ள முற்போக்கான போக்கு களை மேலும் முழுமையாகத் திரட்டுவதற்கு சோஷலிசம் வாய்ப்பளிக்கிறது. புதிய சமூகம் ''இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தான மனித சிந்தனையின், கலாசாரத்தின் வளர்ச்சியில் கிட்டிய மதிப்புடைத்த ஒவ் வொன்றையும்''* தன்வயப்படுத்துவதை அடிப் படையாகக் கொண்டிருக்கிறது என்று லெனின் கூறியதை நிரூபிக்கிறது.

சோஷலிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த மக்களினங்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 11, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 111.



5-730

கள் ஒன்றிடமிருந்து மற்றொன்று வேகமாக வும் பயனுள்ள முறையிலும் கற்றுக்கொள்ள முடியும். அவை புதிய தேசியக் கலாசாரங்களின் அம்சங்களையும் வரலாற்று ரீதியில் வெவ்வேறு அறிவுத்துறை அனுபவத்தையும் கொண்டு உலகத்தின் ஆன்மிகப் பாரம்பரியத்தை வளப் படுத்துகின்றன; அதாவது வளர்ச்சியடைந்த பொருளாயத மற்றும் ஆன்மிகக் கலாசாரத்தை வெற்றிகரமாக வளர்க்க முடியும் என்பது இதன் அர்த்தமாகும்.

சோஷலிஸ்ட் குடும்பத்தில் உறுப்பினராக இருப்பது சகோதர மக்களினங்கள் ஒவ்வொன் றின் விதியின் மீதும் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சோஷலிசம் ஓங்கி வளர்ந்திருப் பது உலக வளர்ச்சியின் மீது அதிகரிக்கின்ற தாக்கத்தைச் செலுத்த உதவியிருக்கிறது, சோஷ லிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் சக்திகளின் சமநிலையை வேகமாக மாற்ற உதவியிருக்கிறது. 1960க்களின் கடைசியில் 1970க்களின் ஆரம்பத்தில் சர்வதேச உறவுகளில் சோஷலிசத்துக்குச் சாதகமான முறையில் குண ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டன. எதிரிடை யான இரண்டு சமூக-அரசியல் அமைப்பு களைச் சேர்ந்த நாடுகளுக்கு இடையிலான உறவுகளின் தன்மை மற்றும் வடிவங்கள் மீது இது மிக அதிகமான தாக்கத்தைக் கொண்டிருக் கிறது. இராணுவ ரீதியில் சோஷலிசத்தைப் ''பின்னால் தள்ளி'' அகற்றுகின்ற வாய்ப்பை ஏகாதிபத்தியம் முற்றிலும் இழந்து விட்டது.

சோஷலிசத்தின் ஆதரவுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் தம் சுதந்திரப் போராட்டத்தை வெற்றிகரமாகத் தொடர முடிகிறது.

சோஷலிசம் வலிமையான சர்வதேச சக்தியாகவும் மனிதகுலத்தின் முன்னேற்றத்தில் தீர்மானகரமான காரணியாகவும் ஆகியிருக்கிறது. சமூக வளர்ச்சியைப் பற்றிய ஒவ்வொரு பிரச்சினை மீதும் அது தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் சோஷலிசம் ஏகாதிபத்தியக் கடல்களுக்கு மத்தியில் சின்னஞ் சிறு தீவாக இருந்தது; ஆனால் சில பத்தாண்டுகளில் அது மாபெரும் கண்டமாக—அதன் மீது எதிர்காலம் நிர்மாணிக்கப்படுகிறது — வளர்ந்திருக்கிறது. சோஷலிசம் என்பது வெல்ல முடியாத சக்தி, மிகவும் வித்தியாசமான தேசிய நிலைமைகளிலும் அது வேரூன்றிச் செழித்து வளர முடியும் என்பது இன்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அணு யுத்தப் பேராபத்தைத் தவிர்த்து உலக நாகரிகத்தைப் பாதுகாக்கின்ற மாபெரும் போராட்டத்தில் சோஷலிசம் தலைமையான சக்தியாக இருக்கிறது. சர்வதேச உறவுகளில் அது ஆக்கமுறையான மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது; வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளுக்கு இடையில் சமாதான சகவாழ்வை அடிப்படையாகக் கொண்ட ஒத்துழைப்புக்குரிய நிலைமைகளைப் படைத்திருக்கிறது.

சோஷலிச நிர்மாணம் அதிகமான பல வடிவங்களில் நடைபெறும் என்னும் லெனினுடைய

மேதாவிலாசமான கருத்தை சோஷலிசத்தின் வரலாறு நிரூபித்திருக்கிறது. ஒவ்வொரு சோஷலிஸ்ட் நாட்டின் வளர்ச்சியிலும்—அரசியல் அமைப்பின் உருவாக்கம், சோஷலிஸ்ட் தொழில் துறையை அமைத்தல், விவசாய வளர்ச்சி, சித்தாந்தம் மற்றும் கலாசாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் — தனிக்கூறுகள் காணப்படுகின்றன.

''எல்லா நாடுகளும் சோஷலிசத்தை வந்தடையும். இது தவிர்க்க முடியாதது. ஆனால் எல்லாம் துல்லியமாக ஒரே முறையில் வரப் போவதில்லை. ஜனநாயகத்தின் ஏதாவதொரு வடிவத்துக்கு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஏதாவதொரு ரகத்துக்கு, சமூக வாழ்க்கையின் வெவ்வேறு அம்சங்களில் சோஷலிஸ்ட் மாற்றங்களின் விகிதத்துக்கு ஒவ்வொன்றும் தனக்குரிய பங்களிப்பைச் செய்யும். 'வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் பெயரால்' எதிர்காலத்தின் இந்த அம்சத்துக்கு ஒரே மாதிரியான பழுப்பு வர்ணத்தைப் பூசுவதைக் காட்டிலும் தத்துவப் பார்வையில் அதிகப் பூர்விகமானது, அல்லது செய்முறைக் கோணத்தில் அதிகமான நகைப்புக்குரியது வேறு இல்லை. அப்படிச் செய்தால் சுஸ்டால் வர்ணப்பூச்சைக் காட்டிலும் சிறப்பாக ஒன்றும் ஏற்படாது''* என்று லெனின் எழுதினார்.

உண்மையில் ஒவ்வொரு சோஷலிஸ்ட் நாட்டி

* V. I. Lenin, *Collected Works,* Vol. 23, pp. 69—70.

லும் சோஷலிஸ்ட் நிர்மாணம் பல ஸ்தூல மான வரலாற்றுக் கூறுகளைக் கொண்டிருந் தது. மத்திய ஐரோப்பா மற்றும் தென் கிழக்கு ஐரோப்பாவில் சோஷலிஸ்ட் புரட்சிகளின் தனித் தன்மையான கூறுகள் பின்வருமாறு:

—சோஷலிஸ்ட் புரட்சிகள் நடைபெற்ற பொழுது தொழிலாளி வர்க்கம் ஏற்கெனவே ஆட்சியதிகாரத்தைப் பெற்றிருந்தது. ஆகவே அங்கே இருந்த ஆட்சியதிகாரத்தைத் தூக்கி யெறிவது நோக்கமாக இருக்கவில்லை; அதை உபயோகித்து முதலாளி வர்க்கத்தின் அதி காரத்தைப் பறிப்பதே நோக்கமாக இருந்தது;

—இந்த நாடுகளில் கீழ்மட்ட வெகுஜன இயக்கம் மேல்மட்ட ஜனநாயக சக்திகளின் ஆதரவைப் பெற்று நடந்தது;

—முதலாளி வர்க்கத்திற்குள் பிரிவினைகள் இருந்தபடியால் சுலபமாக அதை அகற்ற முடிந் தது, ஏகாதிபத்தியத்துடன் முதலாளி வர்க்கத் தின் நேரடியான பிணைப்புகள் தொடர்ச்சியான பல நடவடிக்கைகள் மூலம் அழிக்கப்பட்டன;

—ஜனநாயக வெற்றிகளைக் கவிழ்ப்பதற்கு முயற்சி செய்த ஏகாதிபத்திய ஆதரவாளர்களை முறியடிப்பதற்காகத் தொழிலாளி வர்க்கம் அனைத்து உழைக்கும் மக்களின் ஜனநாயக ஒற்றுமைக்குத் தீவிரமாகப் பாடுபட்டது;

—முதலாளி வர்க்கக் கட்சிகள் அம்பலப் படுத்தப்பட்டன; அக்கட்சிகளின் செல்வாக்கு அரித்தழிக்கப்பட்டது;

—கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சி

களின் செல்வாக்கு தொடர்ச்சியாக அதிகரித்தது;

—கேந்திரமான பொருளாதார நிலைகள் தொழிலாளி வர்க்கத்தின் கைகளில் இருந்தன.

அதே சமயத்தில் சோஷலிஸ்ட் புரட்சிகளிலும் அதன் பிறகு நடைபெற்ற சோஷலிஸ்ட் நிர்மாணத்திலும் சில பொதுவான கூறுகள் இருந்தன. 1957இல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அறிக்கை உலக அமைப்பாக சோஷலிசம் வளர்ச்சியடைந்த அனுபவத்தைப் பற்றி முதன்முறையாகக் கூட்டு மதிப்பீட்டைக் கொடுத்தது. சோஷலிஸ்ட் பாதையைப் பின்பற்றியுள்ள எல்லா நாடுகளிலும் சில பொதுவான கூறுகள் இருப்பதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டியது: ''ஏதாவதொரு வடிவத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சியை நிறைவேற்றுவதில், ஏதாவதொரு வடிவத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதில் மார்க்சிய-லெனினியக் கட்சியைக் கேந்திரமாகக் கொண்ட தொழிலாளி வர்க்கம் உழைக்கும் மக்களுக்கு வழிகாட்டுதல்; தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளின் பெரும் பகுதியினருக்கும் உழைக்கும் மக்களின் மற்ற பிரிவினருக்கும் இடையில் கூட்டணி; அடிப்படையான உற்பத்திச் சாதனங்களில் முதலாளித்துவ உடைமையை ஒழித்து சமூக உடைமையை நிறுவுதல்; விவசாயத்தை சோஷலிஸ்ட் ரீதியில் படிப்படியாக மாற்றியமைத்தல்; சோஷலிசத்தை

யும் கம்யூனிசத்தையும் நிர்மாணிப்பதையும் உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்ட தேசியப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சி; சித்தாந்தம் மற்றும் கலாசாரத் துறைகளில் சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றுதல் மற்றும் தொழிலாளி வர்க்கம், உழைக்கும் மக்கள் மற்றும் சோஷலிச இலட்சியத்துக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட எண்ணற்ற அறிவுப்பகுதியினரை உருவாக்குதல்; தேசிய ஒடுக்குமுறையை ஒழித்தல் மற்றும் மக்களினங்களுக்கு இடையில் சமத்துவத்தையும் சகோதர நட்புறவையும் நிறுவுதல்; வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விரோதிகளை எதிர்த்து சோஷலிசத்தின் சாதனைகளைப் பாதுகாத்தல்; குறிப்பிட்ட நாட்டின் தொழிலாளி வர்க்கத்துக்கும் மற்ற நாடுகளின் தொழிலாளி வர்க்கத்துக்கும் ஒருமைப்பாடு, அதாவது பாட்டாளி வர்க்க சர்வதேசியம்.''*

உலக சோஷலிஸ்ட் அமைப்பு ஏற்பட்ட பிறகு சோஷலிஸ்ட் கோட்பாடுகள் தனியொரு நாட்டில் மட்டுமின்றி மிகவும் விரிவான அளவிலும் செயல்படத் தொடங்கின. மேலும் உலக சோஷலிஸ்ட் அமைப்பின் வளர்ச்சியை மொத்தமாக வரையறுக்கின்ற சில புதிய கோட்பாடுகள் தோன்றின. இக்கோட்பாடுகள் உள்நாட்டில் சோஷலிஸ்ட் வளர்ச்சியின் விதிகளுக்குத்

* *The Struggle for Peace, Democracy and Socialism*, p. 14.

துணையானவை; அவை பல தேசிய இனங்களைக் கொண்ட சோஷலிஸ்ட் அரசுகளில் தேசியப் பிரச்சினையின் தீர்வு—இத்தீர்வு அரசியல் ரீதியிலும் சட்ட ரீதியிலும் மக்களினங்களின் முழுமையான சமத்துவத்தையும் தேசிய மற்றும் சர்வதேசிய நலன்களை இணைப்பதையும் உறுதிப்படுத்துகிறது—பற்றிய பொதுக் கோட்பாடுகளுடன் சில வழிகளில் தொடர்புள்ளவை.

இவ்விதிகள் பின்வருமாறு: சோஷலிஸ்ட் நாடுகள் எல்லா அம்சங்களிலும் நெருங்கி வருதல்; அவற்றுக்கு இடையில் பரஸ்பர உதவியும் ஒத்துழைப்பும்; சர்வதேச சோஷலிஸ்ட் உழைப்புப் பிரிவினை; பொருளாதார ஒருங்கிணைப்பின் வளர்ச்சி; ஒன்றுபடுத்தப்பட்ட பொருளாதாரத்தைப் படைக்கின்ற சோஷலிஸ்ட் நாடுகளின் போக்கு; திட்டமிட்ட அடிப்படையில் விரைவான, நிலையான பொருளாதார வளர்ச்சி விகிதங்கள்; சோஷலிஸ்ட் நாடுகளின் பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார வளர்ச்சியை சமமாக்குதல், அநேகமாக ஒரே சமயத்தில் (ஒரு வரலாற்றுச் சகாப்தத்திற்குள்ளாக) கம்யூனிசத்துக்கு மாறுதல்; உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எதிரிகளிடமிருந்து சோஷலிஸ்ட் சாதனைகளைக் கூட்டாகப் பாதுகாத்தல்.

உலக சோஷலிஸ்ட் அமைப்பு வளர்ச்சியுற்று வலிமை பெற்றுக் கொண்டிருந்த பொழுது இவ்விதிகள் உருவாகிப் படிப்படியாகச் செயல்

பட்டன என்பது வெளிப்படை. எனினும் உலக ரீதியில் சோஷலிஸ்ட் வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களிலேயே சில கூறுகளை இனம்காண முடிந்தது.

சோஷலிஸ்ட் புரட்சி, சோஷலிச நிர்மாணம், உலக சோஷலிஸ்ட் அமைப்பின் உருவாக்கம் ஆகியவற்றின் பொது விதிகள் திரண்ட வரலாற்று அனுபவத்தினால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அதே சமயத்தில் மெய்யான மார்க்சிய-லெனினியத்திலிருந்தும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திலிருந்தும் விலகினால் தேக்கமும் பின்னடைவும் ஏற்படும், ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சாதனைகளுக்கு ஆபத்தேற்படும் என்பதை வாழ்க்கை எடுத்துக்காட்டியிருக்கிறது.

இவ்விதிகள் உலக சோஷலிசத்தின் வளர்ச்சியின் மீது செலுத்திய தாக்கம் அடுத்துவரும் அத்தியாயங்களில் விளக்கப்படும்.

## 2. சகோதர மக்களினங்களின் குடும்பம்

ஒவ்வொரு சோஷலிஸ்ட் நாடும் வளர்ச்சி யடைந்து சோஷலிஸ்ட் அரசுகள் தம் அரசு ரிமையை வலுப்படுத்திக் கொள்கின்ற பொழுது கொள்கை, பொருளாதாரம், சமூக வாழ்க்கை ஆகிய துறைகளில் அவற்றிற்கிடையான தொடர்பு கள் மிக நெருக்கமாகின்றன, அவற்றின் வளர்ச்சி மட்டம் மென்மேலும் ஒரே மாதிரி யாகிறது. சோஷலிஸ்ட் நாடுகள் படிப்படியாக ஒன்றுசேர்கின்றன; அவற்றின் ஒத்துழைப்பு பலமடைகிறது. இது இயற்கையான, புறநிலை யான நிகழ்வுப் போக்கு.

சோஷலிஸ்ட் மக்களினங்களும் நாடுகளும் எல்லாத் துறைகளிலும் பன்முகத் தன்மையுடன் நெருங்கி வருகின்றன. பொருளாதாரத் துறை யில் சோஷலிஸ்ட் பொருளாதார ஒருங்கிணைப்பு; சமூக-அரசியல் துறையில் சோஷலிஸ்ட் அமைப்பை பலப்படுத்துதலும் வளர்ச்சியும்; வெளிநாட்டுக் கொள்கையில் சமாதானத்தையும் நட்புறவை யும் பலப்படுத்துகின்ற, பதட்ட நிலைத் தணிவை ஆழப்படுத்துகின்ற, ஏகாதிபத்தியத்தின் ஆக் கிரமிப்புக் கொள்கையை எதிர்க்கின்ற ஒருங்கி

ணைந்த கொள்கையைக் கடைப்பிடித்தல்; சித்தாந்தத் துறையில் மார்க்சிய-லெனினிய சித்தாந்த நிலைகளை வலுப்படுத்துதல், கலாசாரப் பரிவர்த்தனையை விரிவுபடுத்துதல்; இதரவை. இந்த நிகழ்வுப் போக்கின் எல்லா அம்சங்களும் இடைத்தொடர்பு உடையவை.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் சர்வாம்ச ஒத்துழைப்பும் ஒற்றுமையும் சோஷலிஸ்ட் அமைப்பின் வளர்ச்சியின் புறநிலையான தேவைகளிலிருந்து தோன்றுகின்றன. ஆட்சி புரிகின்ற கம்யூனிஸ்ட் கட்சிகள் உலக சோஷலிசத்தின் விதிகளையும் தேசிய மற்றும் சர்வதேசிய நலன்களுக்கு இடையிலான உறவுகளின் இயக்கவியலையும் பற்றிய விஞ்ஞானப் பகுப்பாய்வின் அடிப்படையில் ஒத்துழைப்பை அமைத்து இயக்குகின்றன.

சமூக வாழ்க்கையில் சர்வதேசியத் தன்மையைக் கொண்டு வருகின்ற போக்கு புறநிலையானது, உலக முழுவதும் இருப்பது. முதலாளித்துவ உலகத்தில் ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு (EEC), ஐரோப்பிய சுதந்திர வர்த்தகச் சங்கம் (EFTA), பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி ஸ்தாபனம் (OECD) முதலிய பொருளாதார ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டிருப்பதில் இதைக் காண முடியும். அரசியல் துறையில் அரசுகளுக்கு இடையிலான சில அமைப்புகளும் நிறுவப்பட்டிருக்கின்றன; இவற்றில் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட வடக்கு அட்லாண்டிக் உடன்படிக்கை

ஸ்தாபனம் (NATO) குறிப்பிடத் தக்கதாகும். இந்த ஸ்தாபனங்கள் அனைத்தும் பெரிய ஏகபோகங்கள் மற்றும் அவற்றின் ஏகாதிபத்தியக் கொள்கையின் நலன்களுக்கே பிரதானமாகப் பயன்படுகின்றன. இந்த ஸ்தாபனங்களில் தனிப்பட்ட நாடுகளுக்கு இடையில், அதாவது வலிமையான நாடுகளுக்கும் பலவீனமான நாடுகளுக்கும் இடையில், உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையில் தீவிரமான முரண்பாடுகள் இருக்கின்றன.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையிலுள்ள உறவுகளும் சோஷலிஸ்ட் அரசுகளின் குடும்பத்திற்குள் ஒத்துழைப்பும் முற்றிலும் வேறுவிதமானவை. எதிர்காலத்தில் எல்லா மக்களினங்களுக்கிடையில் எங்கும் ஏற்படப் போகின்ற சகோதர உறவுகளுக்கு அவை முன்மாதிரியாக இருக்கின்றன.

## பொருளாதார ஒத்துழைப்பு

சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் பொருளாதார உறவுகளை நாம் ஆராய்வோம். வலிமைமிக்க சோஷலிஸ்ட் பொருளாதாரத்தை அமைத்தல், தொழில்துறை, விவசாயம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் சர்வாம்ச முன்னேற்றத்தை உறுதிப்படுத்துதல், சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தின் பொருளாயத மற்றும் தொழில்நுட்ப அடிப்ப

டையை நிர்மாணித்தல் ஆகியவை இந்த உறவுகளின் நோக்கம். இவை ஒன்றுபடுத்தப்பட்ட உலக சோஷலிஸ்ட் பொருளாதாரத்தின் உருவாக்கத்தை, சமாதான ரீதியான போட்டியில் முதலாளித்துவத்தின் மீது சோஷலிசத்தின் வெற்றி இயன்றவரை சீக்கிரமாக ஏற்படுவதை, சோஷலிஸ்ட் குடும்பத்தின் பலம் ஓங்குவதைத் தூண்டுகின்றன.

சோஷலிஸ்ட் அரசுகளின் பொருளாதார சக்தி மற்றும் வளர்ச்சி மட்டம் எப்படியிருந்தாலும் அவை அனைத்தும் பொருளாதார ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்வதிலும் ஆழப்படுத்துவதிலும் அக்கறை கொண்டிருக்கின்றன. சோஷலிஸ்ட் நாடுகளில் மிகப்பெரிய நாடாகிய சோவியத் யூனியன் சக்தி மற்றும் மூலப் பொருள்கள் துறைகளில் அதிகமான சுய தேவைப் பூர்த்தியைக் கொண்டிருக்கிறது; உற்பத்தி மற்றும் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத் துறையில் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது அதிகமான வாய்ப்பு வளத்தைக் கொண்டிருக்கிறது. ஆனால் பிரதானமாக, சோஷலிஸ்ட் குடும்பத்துக்குள் சர்வதேச உழைப்புப் பிரிவினையின் சாதகங்களை விரிவாகப் பயன்படுத்த வேண்டும் என்னும் அக்கறை சோவியத் யூனியனுக்கு அதிகம். கூட்டு முயற்சிகள் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துகின்றன, நல்ல முடிவுகளைத் தருகின்றன என்பதை சோவியத் யூனியன் உணர்ந்திருக்கிறது.

சகோதர நாடுகளுக்கு இடையில் பொருளா

தார ஒத்துழைப்பு விரிவடைகின்ற பொழுது சோஷலிஸ்ட் குடும்பம் முழுமைக்கும் மற்றும் தனிப்பட்ட ஒவ்வொரு நாட்டின் நலன்களுக்கும் பொருத்தமான பொருளாதார ஒருங்கிணைப்பு மென்மேலும் முக்கியமாகிறது. நாடுகள் தமது இயற்கை வளங்களை விவேகமாகவும் சிறந்த முறையிலும் உபயோகிப்பதற்கும் தமது அரசுரிமையை மேலும் வலுப்படுத்து வதற்கும் உரிய வாய்ப்புகளைப் பொருளாதார ஒருங்கிணைப்பு பன்மடங்காகப் பெருக்குகிறது. ஒத்துழைப்பு ஒவ்வொரு நாட்டின் ஒத்திசை வான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக் கிறது; தொழில்துறை மற்றும் விவசாயம், பிரதான மற்றும் துணைத் தொழில்துறை, கன இயந்திர உற்பத்தி மற்றும் நுகர்வுப் பொருள் உற்பத்தி ஆகியவற்றைச் சிறப்பான முறையில் இணைத்துப் பன்முகமான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதை ஊக்குவிக்கிறது. பொருளாதாரப் பிணைப்புகள் ஆழமடைகின்ற பொழுது ஏற்படுகின்ற சர்வதேச உழைப்புப் பிரிவினை ஒப்பீட்டளவில் குறைவான வளர்ச்சி மட்டத்தைக் கொண்ட நாடுகள் வேகமாகத் தொழில் வளர்ச்சி மற்றும் தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தை அடைவதற்கும் அந்த அடிப் படையில் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கும் உதவுகிறது. ஒவ்வொரு சோஷ லிஸ்ட் நாட்டிலும் தொழில்துறை பொருளா தாரத்தின் தலைமையான பிரிவாக இருக்கிறது. அதே சமயத்தில் விவசாய வளர்ச்சிக்கும் அதில்

புதிய முறைகளைப் புகுத்துவதற்கும் அதிகமான கவனம் செலுத்தப்படுகிறது.

''ஒரு ஒற்றை உலகப் பொருளாதாரத்தைப் படைத்துருவாக்கும் திசையிலான போக்கு இருக்கிறது... ஒரு பொதுத் திட்டத்திற்கு ஏற்ற முறையில், ஒரு முற்றிணக்கமான ஒரு முழுமையாக இது எல்லா தேசங்களையும் சேர்ந்த பாட்டாளிகளால் ஒழுங்குறுத்தப் படும்...''* என்று லெனின் முன்னறிவித்தார். சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் விரிவடைந்து வருகின்ற பொருளாதார ஒத்துழைப்பு இப்போக்கு ஆழமடைந்து வருவதை நிரூபிக்கிறது.

பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சில் **(சிஎம்இஏ)** சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் பொருளாதார ஒத்துழைப்பின் வளர்ச்சியில் மாபெரும் பாத்திரத்தை வகிக்கிறது. இக்கவுன்சிலில் ஐரோப்பிய, ஆசிய மற்றும் அமெரிக்கக் கண்டங்களைச் சேர்ந்த பத்து நாடுகள் உறுப்பினர்களாகும்.

**சிஎம்இஏ** நாடுகளில் உலகத்திலேயே அதிகமான சக்திவாய்ந்த தொழில்துறை இணையம் இருக்கிறது. அவை உலகத்தின் மொத்த தொழில்துறை உற்பத்தியில் அநேகமாக மூன்றிலொரு பகுதியை உற்பத்தி செய்கின்றன. முதலாளித்துவக் ''கோட்டைகளான'' மேற்கு ஐரோப்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 11, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 14.

பாவையும் (22%) அமெரிக்க ஐக்கிய நாட்டை யும் (சுமார் 30%) காட்டிலும் இது அதிகம். சிஎம்இஏ நாடுகள் உலகத்தின் தேசிய வருமானத்தில் கால் பங்கை உற்பத்தி செய்கின்றன. சிஎம்இஏ நாடுகளில் 1950க்குப் பிறகு தொழில்துறையின் ஒரு நபருக்கான உற்பத்தி 8 மடங்கிற்கும் அதிகமாக உயர்ந்தது; ஆனால் உலகத்தின் சராசரி உற்பத்தி 3.6 மடங்கு மட்டும் உயர்ந்தது. முப்பதாண்டுகளுக்கு முன்பு சிஎம்இஏ நாடுகள் தொழில்துறைச் சக்தியில் மேற்கு ஐரோப்பாவைக் காட்டிலும் வெகுதூரம் பின்தங்கியிருந்தன; ஆனால் இன்று அவை ஐரோப்பியப் பொருளாதாரக் குடும்பத்தைச் (EEC) சேர்ந்த நாடுகளைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தி செய்வதைப் பின்வரும் விவரங்கள் எடுத்துக்கூறும்: மின்சார உற்பத்தி—1.4 மடங்கு அதிகம்; வாயு உற்பத்தி—3.4 மடங்கு அதிகம்; நிலக்கரி (எரிபொருள்)—3.2 மடங்கு அதிகம்; உருக்கு—1.8 மடங்கு அதிகம்; சிமெண்ட் உற்பத்தி—1.4 மடங்கு அதிகம்; துணிகள்—1.5 மடங்கு அதிகம்; தோல் காலணிகள்—1.6 மடங்கு அதிகம்; செல்லுலோஸ் உற்பத்தி—3.2 மடங்கு அதிகம். மொத்தத்தில் சிஎம்இஏ நாடுகள் தொழில்துறையில் ஐரோப்பியப் பொதுச் சந்தை நாடுகளைக் காட்டிலும் சுமார் இரண்டு மடங்கு அதிகமாக உற்பத்தி செய்கின்றன.

சிஎம்இஏ நாடுகளின் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி விகிதங்கள், விஞ்ஞான, தொழில்

நுட்பவியல் முன்னேற்றம், மக்கள் நலம் மற்றும் கலாசார மட்டங்கள் தொடர்ச்சியாக அதிகரித்தல், பொருளாதார வளர்ச்சி மட்ட வேறுபாடுகள் படிப்படியாக சமப்படுத்துதல் குறிப்பிடத்தக்கவை.

சிஎம்இஏ நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பு சோஷலிஸ்ட் சர்வதேசியவாதம், அரசுரிமை, சுதந்திரம் மற்றும் தேசிய நலன்களை மதித்தல், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை, முழு சமத்துவம், பரஸ்பர நன்மை மற்றும் பரஸ்பர உதவி என்ற கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் பொருளாதார ஒத்துழைப்பு பல்வேறு வடிவங்களில் நடைபெறுகிறது. அந்நிய வர்த்தகம், பொருளாதாரத் திட்டங்களை ஒருங்கிணைத்தல், அரசுகளுக்கு இடையில் தனித்துறைச் சிறப்புத் தேர்ச்சி மற்றும் ஒத்துழைப்பு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் பரிவர்த்தனை முதலியவை இவ்வடிவங்களில் சில.

சகோதர நாடுகளுக்கு அந்நிய வர்த்தகம் பொருளாதார ஒத்துழைப்பின் முக்கியமான வடிவமாகும். அது சர்வதேச சோஷலிஸ்ட் உழைப்புப் பிரிவினையை ஆழப்படுத்தி, அபிவிருத்தி செய்கிறது, பொதுவாக சோஷலிஸ்ட் பொருளாதாரத்தை முன்னேற்றுகிறது. வர்த்தகம் ஒவ்வொரு நாடும் அவசியமான மூலப் பொருள்கள் மற்றும் இதர பொருள்கள், தளவாடங்கள் முதலியனவற்றை உரிய காலத்தில் பெறுவதை

உத்தரவாதம் செய்கின்ற நீண்ட கால ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்டது; இது விற்பனைகளுக்குக் கணிசமாக உதவுகிறது.

தொழில்துறை வளர்ச்சி சோஷலிஸ்ட் நாடுகளின் அந்நிய வர்த்தகக் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது; ஆகவே தற்பொழுது இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மென்மேலும் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் வர்த்தகம் தொடர்ச்சியாக விரிவடைகிறது. அதைப் போல முதலாளித்துவ மற்றும் வளர்முக நாடுகளுடன் சிஎம்இஏ நாடுகளின் வர்த்தகமும் விரிவடைந்து வருகிறது. உதாரணமாக, 1982இல் சிஎம்இஏ நாடுகளின் அந்நிய வர்த்தகம் 7% வளர்ச்சியடைந்தது; 267,000 மில்லியன் ரூபிள்கள் தொகையை எட்டியது. இதில் சிஎம்இஏ நாடுகளுக்கு இடையில் நடைபெற்ற வர்த்தகம் 149,000 மில்லியன் ரூபிள்களாக இருந்தது.

சிஎம்இஏ நாடுகள் பலதரப்பு மற்றும் இருதரப்பு ஒப்பந்தங்களின் அடிப்படையில் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் வர்த்தகத்தை வளர்ப்பதற்கும் உற்பத்தியில் தனித்துறைச் சிறப்புத் தேர்ச்சிக்கும் ஒத்துழைப்புக்கும் விசேஷமான கவனம் செலுத்துகின்றன. 1982இல் சிஎம்இஏ நாடுகளுக்கு இடையில் நடைபெற்ற வர்த்தகத்தில் தனித்துறை சிறப்பு உற்பத்திப் பொருள்களின் பங்கு 39,5 சதவிகிதமாக இருந்தது.

சகோதர நாடுகள் தமக்கு வேண்டிய முக்கியமான எரி பொருள்கள், மூலப் பொருள்கள் பிரதான பொருள்கள், இயந்திரங்கள், தளவாடங்களில் பெரும்பகுதியைத் தமக்கிடையிலேயே பெற்றுக் கொள்கின்றன. 1979இல் சிஎம்இஏ நாடுகளின் தேவைகள் உறுப்பினர் நாடுகளிடமிருந்து பின்வரும் அளவில் பூர்த்தி செய்யப்பட்டன: இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் — 68% ; இரும்புத்தாது — 70% ; நிலக்கரி — 93% ; சுட்ட நிலக்கரி — 94% ; எண்ணெய் — 68%; தேனிரும்பு — 87% ; பதப்படுத்தப்பட்ட இரும்பு — 60% .

சோவியத் யூனியன் சர்வதேசியக் கோட்பாடுகளின் அடிப்படையில் சோஷலிஸ்ட் நாடுகளின் சக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மிகவும் அதிகமான பங்கேற்கிறது. அந்த நாடுகளுக்கு எண்ணெய், பெட்ரோலியப் பொருள்கள், இயற்கை வாயுவை அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறது, உலகச் சந்தையிலுள்ள விலையைக் காட்டிலும் குறைவான விலையைப் பெற்றுக் கொள்கிறது.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் நடைபெறுகின்ற வர்த்தகத்தில் விலைகள் — உலகச் சந்தையிலுள்ள விலைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு — இரு தரப்பிலும் பேசி முடிவு செய்யப்படுகின்றன. விலைகள் வழக்கமாக நீண்டகால ஒப்பந்தங்களின் மூலம் திட்டவட்டமான காலத்துக்கு நிர்ணயிக்கப்படுகின்றன. முதலாளித்துவச் சந்தையில் வழக்கமாக நடைபெறுகின்ற

விலை ஊசலாட்டம் இவற்றை பாதிப்பதில்லை. உலக சோஷலிஸ்ட் சந்தையின் விலை நிர்ணய முறை சோஷலிஸ்ட் திட்டமிட்ட பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யப்படுகிறது.

1959இல் **சிஎம்இஏ** நாடுகள் பொருளாதாரத்தின் தனித்துறைகளில் முக்கியமான சூசிகளை ஒத்திசைவிப்பதிலிருந்து பொருளாதாரத் திட்டங்களை ஒத்திசைவிப்பதற்கு முன்னேறின. தேசியப் பொருளாதாரத் திட்டங்களை ஒத்திசைவிப்பது சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் நேரடியான பொருளாதாரப் பிணைப்புகளை வளர்ப்பதற்கு முக்கியமான வழியாக இருக்கிறது. இது பரிவர்த்தனை, உற்பத்தி ஆகிய இரண்டு துறைகளையும் தழுவித் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யப்படுகிறது.

திட்டமிட்ட, அளவுப் பொருத்த பொருளாதார வளர்ச்சி விதி இயங்குகின்ற வீச்சை ஒத்திசைவு விரிவுபடுத்துகிறது; மூலப் பொருள்கள் மற்றும் தளவாடத் தேவைகளை உள்நாட்டு வளங்களின் மூலம் பூர்த்தி செய்ய முடியாத நாடுகள் உள்பட எல்லா சோஷலிஸ்ட் நாடுகளும் தம்முடைய பொருளாதார வளர்ச்சியைத் திட்டமிடுவதற்கு உதவி புரிகிறது.

இன்று உற்பத்தியில் தனித்துறைச் சிறப்புத் தேர்ச்சியும் ஒத்துழைப்பும் பொருளாதார ஒருங்கிணைப்பில் செயலுரமிக்க வடிவமாக இருக்கின்றன. அது இன்றைய பொருளாதாரப் போக்குகளையும் உலக சோஷலிஸ்ட் பொருளா

தார அமைப்புக்குள் உற்பத்திக் குவிப்பு மற்றும் உற்பத்தியின் சர்வதேசமயமாக்க நிகழ்வுப் போக்கையும் பிரதிபலிக்கிறது.

சில சோஷலிஸ்ட் நாடுகள் பரந்த பிரதேசம், அதிகமான இயற்கை வளங்கள் ஆகியவற்றைக் கொண்டிருப்பதாலும் அவற்றில் மக்கள்தொகை அதிகமாக இருப்பதாலும் ஓரளவுக்குப் பெரிய உள்நாட்டுச் சந்தையைக் கொண்டிருக்கின்றன. எனவே பெரிய அளவு உற்பத்தியும் கணிசமான அளவில் சரக்கு உற்பத்தியும் செய்ய முடியும். சில நாடுகளில் இந்த நிலைமைகள் இல்லை. அவை எல்லா விதமான இயந்திரங்களையும் கருவிகளையும் உற்பத்தி செய்யத் தொடங்கினால் அதிகமான நட்டம் ஏற்படும். சகோதர நாடுகளுக்கு இடையில் பொருளாதார ஒத்துழைப்பு, உற்பத்தியில் தனித்துறைச் சிறப்புத் தேர்ச்சி, ஒத்துழைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத் திட்டமிடுதலில் ஒத்திசைவிப்பு எல்லா நாடுகளிலும் சோஷலிச நிர்மாணத்துக்கு அநேகமாக ஒரே மாதிரியான நிலைமைகளை உருவாக்கி, சோஷலிச வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது. அவற்றிற்கிடையிலான உழைப்புப் பிரிவினை அவை ஒவ்வொன்றும் அதே பொருட் செலவையும் உழைப்பு நுகர்வையும் உபயோகித்து அதிகமாக உற்பத்தி செய்வதற்கு உதவுகிறது.

சர்வதேச உழைப்புப் பிரிவினை உள்நாட்டுப் பொருளாதாரத்தின் ஒருமையை அழிக்கவில்லை. அது துறைகளின் சிறப்புத் தேர்ச்சியை ஊக்கு

வித்துப் பெரிய அளவு உற்பத்திக்கு வழிவகுக்கிறது. இத்தனித்துறைச் சிறப்புத் தேர்ச்சி பொருளாதார ரீதியில் லாபகரமானது, உசிதமானது. இது முற்றிலும் விருப்பபூர்வமான முறையில் பின்பற்றப்படுகிறது. இயற்கை வளங்கள் மற்றும் கனிச்செல்வங்கள் முற்றிலும் அந்த நாட்டின் பொறுப்பிலேயே இருக்கின்றன; பொருளாதார ஒத்துழைப்பைப் பற்றிய பிரச்சினைகள் பரஸ்பர இசைவு மற்றும் முழு சமத்துவம் என்ற அடிப்படையில் தீர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு நாடும் சர்வதேச உழைப்புப் பிரிவினையில் தனக்கு மிகவும் லாபகரமாகவும் உசிதமாகவும் இருக்கின்ற தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது.

சிஎம்இஏ நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பைப் பொறுத்தமட்டில் 1970க்கள் அவற்றின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ள வருடங்களாக இருந்தன. அக்காலகட்டத்தின் போது அவை தமது தொழில்துறைச் சக்தியை இரண்டு மடங்காகப் பெருக்கின, தமக்கிடையில் நடைபெற்ற வர்த்தகத்தை மும்மடங்காகப் பெருக்கின. இது சர்வதேசப் பொருளாதார உறவுகளில் சோஷலிஸ்ட் ஒத்துழைப்பின் சாதகங்களை சிறப்பாக எடுத்துக் காட்டியது.

1971இல் பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சிலின் 25வது கூட்டத்தில் சோஷலிஸ்ட் பொருளாதார ஒருங்கிணைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும்

அகல்விரிவான பன்முகச் செயல்திட்டம் நிறை வேற்றப்பட்டது.

இந்தச் செயல்திட்டத்தின் அடிப்படையில் சிஎம்இஏ நாடுகள் பின்வரும் நோக்கங்களுக் காகத் தமது பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்பவியல் ஒத்துழைப்பை ஆழப்படுத்தி மேம் படுத்துகின்றன, சோஷலிஸ்ட் பொருளாதார ஒருங்கிணைப்பை வளர்க்கின்றன:

—சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளிலும் உற் பத்திச் சக்திகளின் வளர்ச்சியை ஊக்குவித்து, ஆக உயர்ந்த விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மட்டத்தையும் சமூக உற்பத்தியில் உச்ச அளவுப் பொருளாதாரத் திறமையையும் சமூக உழைப் பின் உற்பத்தித் திறனில் இயன்ற அளவுக்கு உச்ச வளர்ச்சியையும் அடைதல்;

—எல்லாப் பிரிவுகளின் தொழில்நுட்பத் தரத்தையும் முறைப்படியாக உயர்த்துகின்ற பொழுதே உற்பத்தியின் கட்டமைப்பை அபி விருத்தி செய்து உற்பத்தியின் அளவை அதி கரிப்பதும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வியல் புரட்சியின் தேவைகளுக்கு ஏற்ப வளர்ச்சியடைந்த தொழில்நுட்பவியலைப் புகுத்து வதும்;

—எரிபொருள், சக்தி, மூலப் பொருள்கள், நவீன தளவாடங்கள், விவசாய விளை பொருள் கள், உணவுப் பொருள்கள் மற்றும் நுகர்வுப் பொருள்கள் ஆகியவை குறித்து உறுப்பினராக வுள்ள நாடுகளின் வளர்ச்சியடைகின்ற தேவை களைப் பிரதானமாக, அவற்றின் சொந்த உற்

பத்தி மற்றும் உள்நாட்டு வளங்களை சிக்கன மாக உபயோகிப்பதன் மூலம் நீண்ட காலத்துக் காக பூர்த்தி செய்தல்;

—இந்நாடுகளின் மக்கள் நலத்தை முன் னேற்றுவதும் அவர்களுடைய கலாசார நிலையை உயர்த்துவதும்;

—அவற்றின் பொருளாதார வளர்ச்சி மட்டங் களைப் படிப்படியாக சமப்படுத்துதல்;

—உலக சோஷலிஸ்ட் சந்தையின் அளவை யும் அதன் ஸ்திர நிலைமையையும் அதிகப் படுத்துதல்;

—உலகப் பொருளாதாரத்தில் **சிஎம்இஏ** நாடு களின் நிலையை பலப்படுத்தி முதலாளித்துவத் துடன் பொருளாதாரப் போட்டியில் அவை முடி வான வெற்றியடைவதை உறுதிப்படுத்துதல்;

—அவற்றின் இராணுவ பலத்தைப் பெருக்கு தல்.

**சிஎம்இஏ** நாடுகள் இச்செயல்திட்டத்தைப் பின்பற்றி சோஷலிஸ்ட் பொருளாதார அமைப்பு, சர்வதேச சோஷலிஸ்ட் உழைப்புப் பிரிவினை ஆகியவற்றின் சாதகங்களைப் பயன்படுத்தி தம்முடைய பொருளாதார மற்றும் இராணுவ சக்தியை வலுப்படுத்திக் கொள்வதற்கும் மக்கள் நலத்தை இன்னும் உயர்த்துவதற்கும் பாடுபடு கின்றன.

குறைவாக வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதார நிலையை உயர் மட்டத்துக்குக் கொண்டுவருவதற்கு இச்செயல்திட்டம் விசேஷ மான நடவடிக்கைகளை முன்வைக்கிறது. மங்

கோலியாவில் துரிதமான பொருளாதார வளர்ச்சி விகிதங்களை ஏற்படுத்த வேண்டும், உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டும் என்று விசேஷமாக முடிவு செய்யப்பட்டது. வியத்நாம் மற்றும் கியூபா சிஎம்இஏ ஸ்தாபனத்தில் உறுப்பினராகச் சேர்ந்த பிறகு இதே மாதிரி முடிவு செய்யப் பட்டது.

சிஎம்இஏ நாடுகளும் ஸ்தாபனங்களும் செயல் திட்டத்துடன் நெருக்கமாக இணைந்த முறையில் தயாரித்த சிஎம்இஏ உறுப்பினர் நாடுகளின் பலதரப்பு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்திசைந்த திட்டம் (1976—1980) பொருளாதார ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதிலும் மேம்படுத்துவதிலும் மற்றொரு முக்கியமான நடவடிக்கையாகும். இத்திட்டம் எல்லோருக்கும் பலனளிக்கக் கூடிய முறையில் இயற்கை வளங்களைக் கூட்டாகப் பயன்படுத்துதல், எல்லா நாடுகளின் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய மாபெரும் தொழில்துறை இணையங்களை நிர்மாணித்தல், தொழில் நிறுவனங்களுக்கும் தொழில்துறையின் முழுப் பிரிவுகளுக்கும் இடையில் நீண்ட கால ஒத்துழைப்பு ஆகியவற்றை முன்னனுமானித்தது.

ஒத்திசைந்த திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதன் விளைவாக சகோதர நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு ஆழமடைந்தது, அந்த நாடுகளின் பொருளாதாரங்களின் பரஸ்பர உதவித்திறன் அதிகரித்தது. இதன்படி பின்வரும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

சோவியத் யூனியனில் உள்ள ஒரென்புர்க் பிரதேசத்திலிருந்து அதன் மேற்கு எல்லை வரை செல்கின்ற 2,750 கி. மீட்டர் நீளமுள்ள ''ஸொயூஸ்'' குழாய்ப்பாதை (1979இல் செயல் படத் தொடங்கியது) — ஆண்டுதோறும் அதன் மூலம் 15,000 மில்லியன் கன சதுரமீட்டர் வாயு சிஎம்இஏ நாடுகளுக்கு அனுப்ப முடியும்; சோவியத் யூனியனில் உள்ள வின்னித்ஸா விலிருந்து அல்பெர்டிர்ஷாவுக்கு (ஹங்கேரி) 750 கிலோவோல்ட் மின்சாரத்தை அனுப்பு கின்ற, 800 கி. மீட்டர் நீளமுள்ள கம்பிப்பாதை (1978இல் செயல்படத் தொடங்கியது); சோவி யத் யூனியனில் அமைக்கப்பட்டுள்ள, ஆண்டு தோறும் 500,000 டன்கள் உயர்ந்த ரக செல்லு லோசை உற்பத்தி செய்கின்ற உஸ்த்-இலிம்ஸ்க் செல்லுலோஸ் தயாரிப்புத் தொழிற்சாலை; வருடந்தோறும் 500,000 டன்களைத் தயாரிக்கக் கூடிய கியெம்பாய் அஸ்பெஸ்டாஸ் மில்; கியூபாவில் ஆண்டுதோறும் 30,000 டன்களை உற்பத்தி செய்யும் புதிய நிக்கல் மற்றும் கோபால்ட் தொழில் நிறுவனங்கள்; கூட்டு முயற்சிகளால் நிர்மாணிக்கப்படுகின்ற மற்ற தொழில் நிறுவனங்கள்.

சிஎம்இஏ ஸ்தாபனத்தின் 32 மற்றும் 33வது கூட்டங்கள் சக்தி, எரிபொருள் மற்றும் மூலப் பொருள்கள், விவசாயம் மற்றும் உணவுத் தொழில்துறை, பொறியியல் துறை, தொழில் துறை நுகர்வுப் பொருள்கள் மற்றும் போக்கு வரத்து ஆகிய துறைகளில் ஒத்துழைப்புக்குரிய

ஐந்து நீண்ட காலத் திட்டங்களைத் தயாரித்தன. இந்த நீண்ட காலத் திட்டங்கள் பல வருட காலம் நீடிக்கக் கூடிய ஒத்துழைப்புச் செயல்முறையைக் கொண்டிருக்கின்றன.

இந்நீண்ட காலச் செயல்திட்டங்களில் பல தரப்பு ஒப்பந்தங்களின் அடிப்படையில் பல விஞ்ஞான, தொழில்நுட்பப் பிரச்சினைகளை ஆராய்ச்சி செய்தலும் அடங்கும்.

சகோதர நாடுகள் 1980க்களை உற்பத்தி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியலில் தீவிரமான ஒத்துழைப்புக் காலகட்டமாக மாற்றுகின்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க முயற்சியைத் தொடங்கியிருக்கின்றன. அவை அடுத்து வரும் ஐந்து வருடங்களுக்கும் தம்முடைய தேசியத் திட்டங்களை ஒன்றிணைத்துக் கொள்கின்றன, பலதரப்பு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்திசைந்த திட்டத்தைத் தயாரிக்கின்றன. சோவியத் யூனியனும் ஐரோப்பிய சிஎம்இஏ நாடுகளும் உற்பத்தியில் தனித்துறைச் சிறப்புத் தேர்ச்சி மற்றும் ஒத்துழைப்புக்கு நீண்ட கால இரு தரப்புத் திட்டங்களை உருவாக்கியிருக்கின்றன.

1980க்களின் தொடக்கத்தில் உற்பத்தியில் சர்வதேச தனித்துறைச் சிறப்புத் தேர்ச்சி மற்றும் ஒத்துழைப்பில் மொத்தம் 120 பலதரப்பு ஒப்பந்தங்கள் இருந்தன; இவற்றில் 90 மெக்கானிகல் இஞ்சினீயரிங், ரேடியோ இஞ்சினீயரிங் மற்றும் எலெக்ட்ரானிக் துறைகளைச் சேர்ந்தவை. இவை தவிர ஆயிரத்துக்கும் அதிகமான

இரு தரப்பு ஒப்பந்தங்கள் இருந்தன. இவை பத்தாயிரத்துக்கும் அதிகமான பொருள்களை உற்பத்தி செய்வதைப் பற்றியவை.

1984இல் நடைபெற்ற சிஎம்இஏ உறுப்பினர் நாடுகளின் உச்ச மட்டப் பொருளாதார மாநாடு சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் பொருளாதார ஒத்துழைப்பின் வளர்ச்சியில் ஒரு புதிய முன்னேற்றத்தைக் குறித்தது. இந்த நூற்றாண்டின் கடைசி வரை அவற்றின் பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேலும் வளர்ப்பதிலும் ஆழப் படுத்துவதிலும் பிரதான திசைவழிகளை அது நிர்ணயம் செய்தது. சுறுசுறுப்பான பொருளா தார வளர்ச்சியிலும் தொடர்ச்சியாக மக்கள் நலத்தை அபிவிருத்தி செய்வதிலும் சிஎம்இஏ நாடுகள் தம்முடைய தலைமையான நிலையைத் தக்கவைத்துக் கொள்ள உத்தேசிக்கின்றன. அதைச் சாதிப்பதற்கு பொருளாதாரத்தை முனைப்பான வளர்ச்சிக்கு மாற்றுவதைத் துரிதப் படுத்துதல், சகோதர நாடுகளுக்குக் கிடைத் துள்ள செல்வாதாரங்களைத் திறமையாக உபயோகிப்பதை அதிகப்படுத்துதல், உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களின் தரத்தை உயர்த்துதல் ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன. வியத்நாம், கியூபா, மங்கோலியா ஆகிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்த, சிஎம்இஏயில் உறுப்பினராக உள்ள ஐரோப்பிய நாடுகளின் தரத்துக்கு அவற்றை உயர்த்த வேண்டிய முக்கியத்துவம் வலியுறுத்தப்

பட்டது. ஏகாதிபத்தியம் எவ்விதமான வடிவத்தில் பொருளாதார ஆக்கிரமிப்புச் செய்தாலும் அதை முறியடிக்கக் கூடிய விதத்தில் சகோதர நாடுகளின் பொருளாதார பலத்தையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அதிகமான கவனம் செலுத்தப்பட்டது.

இப்பொருளாதார மாநாடு **சிஎம்இஏ** உறுப்பினர் நாடுகளுக்கு இடையில் பெரிய பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய வழிகளைக் கூட்டு அடிப்படையில் தயாரித்தது; பொருளாயத உற்பத்தியின் எல்லாத் துறைகளிலும் சம்பந்தப்பட்ட நாடுகளின் நேரடியான இடைச் செயல் முறைகளைக் கூட்டாக நிர்ணயித்தது. எனவே **சிஎம்இஏ** உறுப்பினர் நாடுகளுக்கு இடையில் பொருளாதாரக் கொள்கைகளை ஒருங்கிணைப்பதில் புதிய முன்னேற்றத்தை இம்மாநாடு குறித்தது. எல்லாத் துறைகளிலும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துதல், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தின் பிரதான சிகரங்களை அடைதல் ஆகியவற்றுக்குத் தலைமையான முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மூலப் பொருள், எரிபொருள் மற்றும் சக்திப் பிரச்சினையை ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் தீர்ப்பதற்கு நீண்ட காலத்திட்டத்தின் உருவரை தயாரிக்கப்பட்டது. உற்பத்தியின் மிக முக்கியமான துறைகளில் உற்பத்தி மற்றும் தொழில் நுட்பவியல் ஒத்துழைப்புக்குரிய உடன்பாடுகளைக் கொண்ட விஞ்ஞான மற்றும் தொழில்

நுட்பவியல் முன்னேற்றத்துக்கு சர்வாம்சச் செயல்திட்டத்தைத் தயாரிக்கின்ற கடமை முன்வைக்கப்பட்டது. தொழில் நிறுவனங்களுக்கு இடையில் நேரடியான உறவுகள் இன்னும் விரிவான அளவில் உபயோகிக்கப்படும். சிஎம்இஏ ஸ்தாபனத்தின் உறுப்புகளின் நடவடிக்கைகள் மேலும் அபிவிருத்தி செய்யப்படும்; மிக முக்கிய மான துறைகளில் உற்பத்தி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பு சம்பந்தமாக இந்த நாடுகள் கையெழுத்திட்டிருக்கின்ற உடன் பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அபி விருத்தி அடையுமென உத்தேசிக்கப்படுகிறது.

1981—1985க்கான பலதரப்பு ஒருங் கிணைப்பு நடவடிக்கைகளின் திட்டத்தின்படி உற்பத்தியில் தனித்துறைச் சிறப்பு தேர்ச்சியும் ஒத்துழைப்பும் மேலும் வளர்க்கப்படுகின்றன; புதிய திட்ட நிறுவனங்கள் கூட்டு முயற்சிகளால் கட்டப்படுகின்றன, விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பவியல் பிரச்சினைகள் கூட்டாகத் தீர்க்கப் படுகின்றன; ஒத்துழைப்புக்கான தலைமையான திசைவழிகள் வகுக்கப்படுகின்றன. விஞ்ஞான-தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பு மிக விரிவாக வளர்ச்சியடைந்தது. எனவே அதை ஒத்திசை விப்பதற்காக சிஎம்இஏ ஸ்தாபனம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்புக்காக ஒரு விசேஷ கமிட்டியை நிறுவியது. இத்துறை யில் 120 ஒப்பந்தங்களின் அடிப்படையில் ஒத்து ழைப்பு நடைபெற்றது. 24 சர்வதேச விஞ்ஞான-தொழில்நுட்ப மற்றும் பொருளாதார அமைப்பு

கள், விஞ்ஞானிகள் மற்றும் நிபுணர்களைக் கொண்ட 7 சர்வதேச குழுக்கள், 57 ஒருங்கிணைப்பு மையங்கள் இதில் ஈடுபட்டிருந்தன. இந்த விஞ்ஞான-தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பில் மொத்தமாக 3,000க்கும் அதிகமான ஆராய்ச்சி நிலையங்கள், வரைபடக் குழுக்கள், உயர் கல்வி ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

சோவியத் யூனியன் சகோதர நாடுகளுக்கு மிகவும் அதிகமான உதவியளிக்கிறது. சோவியத் விஞ்ஞான-தொழில்நுட்ப உதவியைக் கொண்டு பல்கேரியா இரும்பு மற்றும் இரும்பு அல்லாத உலோக உற்பத்தி, பல இயந்திர வகைகள், பவர் இஞ்சினியரிங் இயந்திரங்கள், வானொலிப் பெட்டிகள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், இன்னும் பல பொருள்களை உற்பத்தி செய்கிறது. ஹங்கேரி உயர் ரக எஃகுப் பொருள்களைத் தயாரிக்கிறது, உராய்வைத் தாங்கும் இயந்திரப் பொருள்களின் உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது; இவை தவிர முக்கியமான தொழில்நுட்பவியல் பிரச்சினைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு எண்ணெய்ச் சுரங்கங்களைத் தோண்டுகின்ற சோவியத் முறைகளைப் பின்பற்றுகிறது. போலந்து ஸ்டீம்-டர்பைன்கள், டர்போ-ஆல்டெர்னேட்டர்கள், அதிக அழுத்த பாய்லர்கள், நிலக்கரி சுரங்க இயந்திரத் தொகுதிகள் மற்றும் மோட்டார்கார்களின் உற்பத்தியில் சோவியத் முறைகளைப் பின்பற்றுகிறது. சோவியத் வரை

படங்களின் உதவியைக் கொண்டு ருமேனியா டிராக்டர்கள், இயந்திரக் கருவிகள், டர்போ-டிரில்கள், பூமியைத் தோண்டும் இயந்திரங்கள், டவர் கிரேன்கள் ஆகியவற்றின் உற்பத்தியை வளர்த்தது. செக்கோஸ்லோவாக்கியாவில் உலோகவியல், இரசாயனவியல், நெசவு மற்றும் இதர தொழில்துறைகளில் சோவியத் தொழில் நுட்பவியல் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

விண்வெளி ஆராய்ச்சியில் ''இன்டர்கோஸ்மஸ்'' ஒத்துழைப்புத் திட்டம் சகோதர நாடுகளுக்கு இடையில் பலனுள்ள விஞ்ஞான-தொழில் நுட்பவியல் ஒத்துழைப்புக்குச் சிறந்த உதாரணமாகும். அதன் பத்து வருட கால வரலாற்றில் சகோதர நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சோவியத் விண்வெளியைச் சுற்றுகின்ற செயற்கைக் கோள்களையும் ஆராய்ச்சி இராக்கெட்டுகளையும் உபயோகித்து விண்வெளியின் பௌதிக குணாம்சங்கள், விண்வெளிப் பருவ இயல் தொடர்பு விஞ்ஞானம், உயிரியல், மருத்துவம் பூமியின் இயற்கை வளங்கள் ஆகியவற்றைப் பற்றி அதிகமான ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறார்கள். சோவியத் மற்றும் சகோதர நாடுகளைச் சேர்ந்த விண்வெளிப் பயணிகளின் கூட்டு முயற்சிகள் மனிதகுலத்தின் நன்மைக்காக விண்வெளியை ஆராய்கின்ற திட்டங்களில் சகோதர நாடுகள் பங்கெடுக்க முடியும் என்பதை சிறப்பாக எடுத்துக்காட்டியிருக்கின்றன. அவற்றின் விஞ்ஞானிகளும் நிபுணர்களும் புதிய தளவாடங்

கள், பொருள்கள் மற்றும் தொழில்நுட்பவியலைப் படைப்பதிலும் புறச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தியில் அதிகமான வெற்றிகளை அடைந்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு நாட்டின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் திறமையைச் சிறப்பான முறையில் பயன்படுத்துவதும் ஆராய்ச்சிக் காலத்தையும் புதிய கண்டுபிடிப்புகளை வெகுஜன உற்பத்தியில் பயன்படுத்துவதற்கு அவசியமான காலத்தையும் குறைப்பதும் பொருளாயத வளங்களையும் மனித சக்தியையும் சிக்கனம் செய்வதற்கு உதவுவதும் பலதரப்பு மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பின் நோக்கமாகும்.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பின் அளவை எடுத்துக்காட்டுவதற்குப் பின்வரும் விவரங்களைத் தருகிறோம். பன்முகச் செயல்திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு 1970க்களில் 10,000க்கும் அதிகமான தத்துவ மற்றும் செய்முறைத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன—குறிப்பாக, 1,500க்கும் அதிகமான புதிய இயந்திரங்கள், பொறியமைவுகள், கருவிகளுக்கு வரை படங்கள் தயாரிக்கப்பட்டன—1,200க்கும் அதிகமான தொழில்நுட்பத் தயாரிப்பு முறைகள் விரித்துரைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டன, 1,300க்கும் அதிகமான புதிய பொருள்கள், தயாரிப்புகள் உருவாக்கப்பட்டன. உதாரணமாக, இரசாயனத் துறையில் புதிய பிளாஸ்டிக் ரகங்கள், செயற்கைப் பிசின்கள், ரப்பர், கிரியா ஊக்கிகள்,


7–730

இரசாயன நுகர்வுப் பொருள்கள், பூச்சிகளைக் கொல்லும் மருந்துகள் மற்றும் பல பொருள்கள் தயாரிக்கப்பட்டன.*

இயந்திரத் துறையில் சுமார் 40 புதிய ரக விவசாய இயந்திரங்களுக்குரிய வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன; விவசாயம் மற்றும் வனத் துறையை இயந்திரமயமாக்குவதற்குரிய இயந்திரங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. சுரங்கத் தொழிலை இயந்திரமயமாக்குவதற்கு வேண்டிய சாதனங்கள், தானியங்கி இயந்திரங்கள் மற்றும் 80க்கும் அதிகமான செயல்முறைத்திட்ட-இயக்க இயந்திரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. குறுகிய காலத்தில் மூன்றாவது தலைமுறை கம்ப்யூட்டர்களின் ஒன்றுபடுத்தப்பட்ட அமைப்பின் முதல் பிரிவு உருவாக்கப்பட்டது.**

1979இல் சிஎம்இஏ நாடுகளில் 1990 வரைக்கும் உள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பின் பிரதான திசைவழிகள் அங்கீகரிக்கப்பட்டன. இக்கூட்டு முயற்சி சிஎம்இஏ ஸ்தாபனத்தின் சமீபத்திய கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட கேந்திர உற்பத்தித் துறைகளில் ஒத்துழைப்புக்கான நீண்ட காலத் திட்டங்களுடன் நெருக்கமாக இணைந்திருக்கிறது. 1980க்களில் சகோதர நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூட்டாக வகுத்துரைக்கின்ற

---

* சிஎம்இஏ நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பு, இதழ் 5, 1977, பக்கங்கள் 33—34 (ருஷ்ய மொழியில்).

** அதே நூல், பக்கங்கள் 34—35.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரச்சினைகள் பல இத்திட்டங்களுடன் நேரடியான சம்பந்தத்தைக் கொண்டிருக்கின்றன.

சோஷலிஸ்ட் நாடுகளின் மொத்த தொழில் நுட்பவியல் முன்னேற்றத்தில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பு தீர்மானகரமாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சிஎம்இஏ ஸ்தாபனம் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முக்கியமாக இருக்கின்ற விஞ்ஞான-தொழில்நுட்பத் துறைகளில், குறிப்பாக, உலகத் தரத்தை எட்டக் கூடிய பொருள்களைத் தயாரித்தல், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் புரட்சிகளின் சாதனைகளை விரைவாகப் பின்பற்றுதல், பொருளாதாரப் · பிணைப்புகளைத் தீவிரப்படுத்துதல் ஆகியவற்றில் கவனத்தைக் குவிக்கிறது.

ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரக் காரணிகளைத் திறமையாக உபயோகிப்பதை பரஸ்பர அனுகூலம் மற்றும் லாபகரமான அந்நிய வர்த்தகம் ஆகியவற்றின் அவசியங்களுடன் இணைப்பதை உறுதிப்படுத்துவதற்கு சகோதர நாடுகள் முயற்சி செய்கின்றன. சோஷலிசத்தின் அந்நிய பொருளாதாரப் பிணைப்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கு ஆக முக்கியமான நிபந்தனை இதுவே.

சமீப ஐந்து வருடக் காலகட்டங்களில் சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் பொருளாதார ஒத்துழைப்பு தரம், சமூக உற்பத்தி, சர்வதேச சோஷலிஸ்ட் ஒத்துழைப்பு மேலும்

சிறந்திருத்தல் ஆகியவற்றைப் பிரதானமாக வலியுறுத்தியிருக்கிறது. பொருளாதார வளர்ச்சி விகிதங்களை அதிகப்படுத்துவதற்கு ஒவ்வொரு நாட்டின் உள்நாட்டு வளங்களையும் உச்ச அளவில் உபயோகிக்கின்ற பிரச்சினையுடன் இது நெருக்கமாக இணைந்திருக்கிறது. இதன் விளைவாக சோஷலிஸ்ட் நாடுகளின் பொருளாதார மற்றும் கலாசார வளர்ச்சி மட்டங்கள் அதிகமான அளவுக்குச் சமப்படுத்தப்பட்டிருக்கின்றன; சோஷலிசத்தை நிர்மாணிக்க அவசியப்படுகின்ற காலத்தைக் குறைக்க முடிந்திருக்கிறது.

பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சில் தன்னையே பார்த்துப் பெருமைப்படுகின்ற ஸ்தாபனம் அல்ல. அது மற்ற நாடுகளின் சமூக மற்றும் அரசு அமைப்பு எப்படியிருந்தாலும், சமத்துவம், பரஸ்பர அனுகூலம், அரசுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றுடன் பொருளாதார உறவுகளை வளர்ப்பதற்குத் தயாராக இருக்கிறது.

யூகோஸ்லாவியா சிஎம்இஏ ஸ்தாபனத்துடன் நன்கு ஒத்துழைக்கிறது, பரஸ்பர அக்கறையைக் கொண்ட பிரச்சினைகள் சம்பந்தமாக அநேகமாக எல்லா உறுப்புகளிலும் பங்கெடுக்கிறது. இரும்பு மற்றும் இரும்பு அல்லாத உலோகவியல், இயந்திர உற்பத்தி, இரசாயன மற்றும் எண்ணெய்த் தொழில்துறைகள், எலெக்ட்ரானிக் துறை, விவசாயம், அந்நிய வர்த்தகம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகியன இந்த

ஒத்துழைப்புத் துறைகளில் சிலவாகும்.

சோஷலிஸ்ட் நாடுகள் அடைந்துள்ள வெற்றிகள், அவற்றுக்கிடையில் ஒத்துழைப்பின் அனுபவம் மென்மேலும் அதிகமான நாடுகளின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. சிஎம்இஏ ஸ்தாபனம் இப்பொழுது பின்லாந்து, மெக்சிகோ ஆகிய நாடுகளுடன் ஒத்துழைப்பு ஒப்பந்தங்களைச் செய்திருக்கிறது, அறுபதுக்கும் அதிகமான சர்வதேச ஸ்தாபனங்களுடன் வெவ்வேறு மட்டங்களில் உறவுகளை வைத்துக் கொண்டிருக்கிறது.

சோஷலிஸ்ட் நாடுகள் சோஷலிஸ்ட் அல்லாத உலகத்துடன் விரிவான, பரஸ்பர அனுகூலமான பொருளாதார உறவுகளை வளர்ப்பதற்கு முயன்று வருகின்றன. 1960க்களின் தொடக்கத்தில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு 100க்கு அதிகமான நாடுகளுடன் வர்த்தக உறவுகளை வைத்திருந்தது, செக்கோஸ்லோவாக்கியா அநேகமாக உலகத்தின் எல்லா நாடுகளுடனும், ஹங்கேரி 90 நாடுகளுடனும் (யுத்தத்துக்கு முன்பு 41 நாடுகளுடன்), போலந்து 150 நாடுகளுடனும், ருமேனியா 80க்கும் அதிகமான நாடுகளுடனும், பல்கேரியா 75க்கும் அதிகமான நாடுகளுடனும், கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு 40க்கும் அதிகமான நாடுகளுடனும், வியத்நாம் ஜனநாயகக் குடியரசு 29 நாடுகளுடனும், மங்கோலிய மக்கள் குடியரசு 15 நாடுகளுடனும் (1952க்கு முன்னர் சோவியத் யூனியனுடன் மட்டுமே) பொருளாதார

உறவுகளைக் கொண்டிருந்தன.*

சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் பொருளாதார ஒத்துழைப்பு உலக சோஷலிசத்தை வலுப்படுத்துவதில், முதலாளித்துவத்துடன் பொருளாதாரப் போட்டியில், நம் காலத்திய விடுதலைச் சக்திகள் அனைத்தின் அரணாக சோஷலிசத்தை பலப்படுத்துவதில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது.

## அரசியல் மற்றும் இராணுவக் கூட்டணி

உலக சோஷலிஸ்ட் அமைப்பைச் சேர்ந்த சகோதர நாடுகளுக்கு இடையில் அரசியல் ஒத்துழைப்பின் நோக்கம் ஒவ்வொரு நாட்டிலும் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிப்பதற்கும் மொத்தத்தில் உலக சோஷலிஸ்ட் அமைப்பின் வளர்ச்சிக்குமான மிகச் சிறந்த நிலைமைகளை ஏற்படுத்துவதாகும்.

பொதுவான சமூக-பொருளாதார அமைப்பு, சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிக்கின்ற பொது இலட்சியம், பொதுவான மார்க்சிய-லெனினிய சித்தாந்தம் சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையிலுள்ள உறவுகளுக்கு

---

* **சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் நிர்மாணமும் சோஷலிஸ்ட் நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பும்,** *மாஸ்கோ, 1970, பக்கம் 172 (ருஷ்ய மொழியில்).*

சமத்துவத்தையும் மெய்யான சகோதரத் தன்மையையும் தருகின்றன. கொள்கையை ஒத்திசைவித்தல், சோஷலிஸ்ட் சாதனைகளைக் கூட்டாகப் பாதுகாத்தல், சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிப்பதிலும் சமாதானப் போராட்டத்திலும் கூட்டு முயற்சிகள் அதன் ஆக முக்கியமான அம்சங்களாகும்.

ஐரோப்பிய சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் அரசியல் ரீதியான ஒத்துழைப்பு வார்சா உடன்படிக்கை ஸ்தாபனத்தின் சுற்றுவட்டத்திற்குள் நடைபெறுகிறது. சோஷலிஸ்ட் சாதனைகளையும் சோஷலிஸ்ட் சர்வதேசியக் கோட்பாடுகளையும் கூட்டுமுறையில் பாதுகாக்க வேண்டும் என்ற லெனின் கருத்தை அடிப்படையாகக் கொண்ட இராணுவ-அரசியல் கூட்டணி அது. உறுப்பினர் நாடுகளுக்கு இடையில் சமத்துவம், அரசுரிமையை மதித்தல், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த ஸ்தாபனம் இயங்குவது குறிப்பிடத்தக்கதாகும். வார்சா உடன்படிக்கை தற்காப்புக் கூட்டணியாகும். உடன்படிக்கையில் கையொப்பமிட்டிருக்கின்ற நாடுகள் ''ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்துக்கு ஏற்ப தமது சர்வதேச உறவுகளில் பலாத்காரத்தை அல்லது பலாத்காரத்தை உபயோகிப்பதாக பயமுறுத்துவதைத் தவிர்க்குமென்றும் தமது சர்வதேசத் தகராறுகளை சமாதான முறைகளின் மூலம் மற்றும் உலக சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தேற்

படுத்தாத முறையில் தீர்க்குமென்றும் உறுதியளிக்கின்றன''* என்று முதல் ஷரத்து கூறுகிறது.

தற்காப்புக்காக ஏற்பட்டிருக்கின்ற வார்சா உடன்படிக்கை தன்மையிலும் கோட்பாடுகளிலும் ஆக்கிரமிப்புக்காக ஏற்பட்டுள்ள ஏகாதிபத்தியக் கூட்டணிகளுக்கு, குறிப்பாக ''நாட்டோ''வுக்கு எதிரிடையாகும். சில சமயங்களில் அரசியல்வாதிகள் இரண்டும் ஒன்றே எனக் கூறுவதுண்டு. அது முற்றிலும் தவறாகும்.

உலகம் இரண்டு எதிர்ப்பு இராணுவ முகாம்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதையும் ஆயுதப் போட்டியையும் சோஷலிஸ்ட் நாடுகள் தீவிரமாக எதிர்க்கின்றன. ஆனால் ''நாட்டோ'' இருக்கின்ற வரை, இராணுவ வெறியர்கள் ஆயுதப் போட்டியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற வரை வார்சா உடன்படிக்கை நாடுகள் தமது இராணுவ-அரசியல் கூட்டணி பலமிக்கதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளும்.

வார்சா உடன்படிக்கையில் சேர்ந்திருக்கின்ற நாடுகளின் கொள்கையை அரசியல் ஆலோசனைக் கமிட்டி ஒத்திசைவிக்கிறது. இக்கமிட்டியின் கூட்டங்களில் உச்ச மட்டப் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். இக்கமிட்டி தோழமையான கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் கேந்திரமான சர்வதேசப் பிரச்சினைகளில் தன் பொதுவான அணுகுமுறையை நிர்ணயிக்கிறது. வார்சா

* **வார்சா உடன்படிக்கை ஸ்தாபனம், 1955 — 1975. ஆவணங்கள்**, மாஸ்கோ, 1975, பக்கம் 6 (ருஷ்ய மொழியில்).

உடன்படிக்கை உறுப்பினர் நாடுகளுக்கு இடையில் உறவுகளை ஆழப்படுத்துவதைப் பற்றிய பிரச்சினைகளையும் அது எடுத்துக்கொள்கிறது. 1976இல் வார்சா உடன்படிக்கை ஸ்தாபனத்தின் வெளிநாட்டு அமைச்சர்கள் கமிட்டி என்ற மற்றொரு முக்கியமான உறுப்பு ஏற்படுத்தப்பட்டது.

அரசியல் ஆலோசனைக் கமிட்டி 1955க்கும் 1983க்கும் இடையில் 19 கூட்டங்களை நடத்தியிருக்கிறது. இக்கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட ஆவணங்கள் சமாதானத்தையும் சர்வதேசப் பாதுகாப்பையும் பலப்படுத்துவதை, சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான போராட்டத்தை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட சோஷலிஸ்ட் நாடுகளின் சர்வதேசியக் கொள்கையைப் பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு கூட்டமும் முக்கியமான சர்வதேசப் பிரச்சினைகளை விவாதித்து ஐரோப்பாவிலும் உலக முழுவதிலும் பாதுகாப்பை ஊக்குவிக்கிறது. இக்கூட்டங்கள் பல முக்கியமான பிரேரணைகளை முன்வைக்கின்றன. அரசியல் துறையில் பதட்ட நிலைத் தணிவுக்கு உதவியாக இராணுவத் துறையில் பதட்ட நிலைத் தணிவு வேண்டும், ''நாட்டோ'' நாடுகளுக்கும் வார்சா உடன்படிக்கை நாடுகளுக்கும் இடையில் ஆக்கிரமிப்புச் செய்வதில்லை என்ற ஒப்பந்தம், ஐரோப்பாவில் இராணுவத் துறையில் பதட்ட நிலைத் தணிவுக்கும் படைக்கலைப்புக்கும் மாநாட்டைக் கூட்டுதல்

முதலியன இப்பிரேரணைகளில் சிலவாகும்.

சர்வதேச வாழ்க்கையில் உள்ள முக்கியமான எல்லாப் பிரச்சினைகளும் வார்சா உடன் படிக்கை ஸ்தாபனத்தின் நடவடிக்கையில் பிரதி பலிக்கப்படுகின்றன. அணு யுத்தத்தைத் தடுப் பதற்கும், ஆயுதப் போட்டிக்கு முடிவு கட்டு வதற்கும் படைக்கலைப்பை ஏற்படுத்துவதற்கும் நடைபெறுகின்ற போராட்டத்தில் சகோதர சோஷலிஸ்ட் நாடுகளின் உறுதியான நிலை உலக மக்களின் நலன்களுடன் பொருந்தியிருக் கிறது.

வார்சா உடன்படிக்கை நாடுகள் ஐரோப்பாக் கண்டத்தில் அமைந்திருப்பதால் அவை அக் கண்டத்தில் சமாதானத்தைப் பாதுகாப்பதி லும் பலப்படுத்துவதிலும் விசேஷ அக்கறை கொண்டிருக்கின்றன. சோவியத் யூனியன் மற்றும் இதர சோஷலிஸ்ட் நாடுகளின் முன்முயற்சி யின் பேரில் வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளுக்கு இடையில் சமத்துவ மான, பரஸ்பரம் அனுகூலமான ஒத்துழைப்புக் குரிய வாய்ப்புகளை அதிகப்படுத்துகின்ற பல ஒப்பந்தங்களும் உடன்பாடுகளும் கடந்த பத் தாண்டுகளில் கையெழுத்திடப்பட்டிருக்கின்றன.

வார்சா உடன்படிக்கை நாடுகள் சமா தானத்தைப் பாதுகாக்கின்ற கொள்கையை உறுதி யுடன் கடைப்பிடிக்கின்றன. பதட்ட நிலைத் தணிவிலும் சர்வதேச ஒத்துழைப்பிலும் கிடைத் துள்ள ஆக்கமுறையான அம்சங்கள் ஒவ்வொன் றையும் வலுப்படுத்துவதற்கும் விரிவுபடுத்து

வதற்கும் தம்மாலியன்ற அனைத்தையும் செய்கின்றன.

சகோதர சோஷலிஸ்ட் நாடுகள் உலகத்தின் எல்லா இடங்களிலுமுள்ள மக்களினங்களுக்கு சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிகளைச் செய்கின்றன, தேசிய சுதந்திரத்துக்குப் போராடுகின்ற நாடுகளுக்கு எப்பொழுதும் ஆதரவளிக்கின்றன. இந்தோசீனா, மத்திய கிழக்கு, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த மக்களினங்களின் விடுதலை மற்றும் சுதந்திரத்துக்கு வார்சா உடன்படிக்கை நாடுகளின் ஆதரவை அரசியல் ஆலோசனைக் கமிட்டி எப்பொழுதுமே தெரிவித்திருக்கிறது.

ஒரே சமயத்தில் வார்சா உடன்படிக்கை ஸ்தாபனத்தையும் வட அட்லாண்டிக் ஸ்தாபனத்தையும் கலைக்க வேண்டும், அந்தக் கலைப்பை முதலில் இராணுவ ஸ்தாபனங்களிலிருந்து தொடங்கலாம் என்று வார்சா உடன்படிக்கை நாடுகள் திரும்பத்திரும்பக் கூறுகின்றன; இக்கருத்து அந்நாடுகளின் சமாதானக் கோட்பாட்டு ரீதியான வெளிநாட்டுக் கொள்கையை எடுத்துக்காட்டுகிறது. ஆனால் இந்த முன்முயற்சிகளுக்கு மேற்கு நாடுகள் தகுந்த முறையில் பதிலளிக்கவில்லை. சகோதர சோஷலிஸ்ட் நாடுகள் இன்றைய உலக நிலைமை மற்றும் யுத்த வெறியைத் தூண்டுகின்ற ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் திட்டங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு தம்முடைய பாதுகாப்புக்கு அவசியமான நடவடிக்கைகளைச் செய்

கின்றன, அப்படிச் செய்கின்ற பொழுது நெருக்கமாக ஒத்துழைக்கின்றன.

வார்சா உடன்படிக்கை நாடுகளின் கூட்டு இராணுவச் சக்திகளுக்கு சோவியத் இராணுவம் அடிப்படையாக இருக்கிறது. அது மிக உயர்ந்த இராணுவ மற்றும் தொழில்நுட்பவியல் சக்தி, சித்தாந்த மற்றும் அரசியல் முதிர்ச்சி, தார்மிக குணங்கள், இராணுவப் பயிற்சியைக் கொண்டிருக்கிறது. சோஷலிஸ்ட் நாடுகள் முதல் தரமான ஆயுதங்களைக் கொண்ட நவீனமான படைகளை வைத்திருக்கின்றன, துருப்புகளுக்குச் சிறந்த முறையில் தலைமை தாங்குகின்ற அனுபவமிக்க தளகர்த்தர்களைப் பெற்றிருக்கின்றன.

வார்சா உடன்படிக்கை ஷரத்துக்களின் படி சில ஐரோப்பிய சோஷலிஸ்ட் நாடுகளில் சோவியத் துருப்புகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசுரிமையில் குறுக்கிடுதல் என்று அர்த்தமல்ல. சோவியத் துருப்புகளும் சோவியத் இராணுவத் தலைமையும் அந்த நாடுகளின் சுதந்திரத்தை மதிக்கின்றன, அவற்றின் இராணுவங்களுடன் ஒத்துழைக்கின்றன.

வார்சா உடன்படிக்கை நாடுகளின் இராணுவங்கள் கூட்டு இராணுவத் தலைமையை அமைத்திருக்கின்றன. அத்தலைமை துருப்புகளுக்குப் போர்ப் பயிற்சி தருகிறது, அவற்றின் தளவாடங்களை ஒரே விதமான தரத்துக்குக் கொண்டுவருகிறது, அவற்றின் பாதுகாப்பு முயற்சிகளை ஒத்திசைவிக்கிறது.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கிடையில் இராணுவ ஒத்துழைப்பு நேச இராணுவங்களின் நடவடிக் கையின் அநேகமாக எல்லாத் துறைகளிலும் இருக்கிறது, அது தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யப்படுகிறது. வார்சா உடன்படிக்கை ஸ்தா பனத்தின் தலைமையான இராணுவ உறுப்பு பாதுகாப்பு அமைச்சர்களின் கமிட்டியாகும். அது சோஷலிஸ்ட் நாடுகளின் பாதுகாப்பு சக் தியை பலப்படுத்துதல் மற்றும் அவற்றின் படை களுக்குப் பயிற்சியளிப்பது போன்ற முக்கிய மான விஷயங்களை கவனிக்கிறது. கூட்டுத் தலைமையகம் கூட்டு இராணுவத்துக்குத் தலைமை தாங்குகிறது, அன்றாட நடவடிக்கை களை அதன் இராணுவ கவுன்சில் ஒத்திசைவிக் கிறது. கூட்டு உயர் தளபதிகள் குழு துருப்பு களை இயக்குகிறது, அவற்றின் அனுபவத்தை மதிப்பிடுகிறது.

சோவியத் யூனியனும் சகோதர சோஷலிஸ்ட் நாடுகளும் தம்முடைய பாதுகாப்பைத் தொடர்ச் சியாக பலப்படுத்திக் கொண்டிருந்தாலும் உலகத் திலேயே அதிகமான இராணுவ பலத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று முயற்சிப் பதில்லை. அவை வேறு எந்த நாட்டையோ அல்லது நாடுகளின் கோஷ்டியையோ அச்சுறுத்த ஒருபோதும் உத்தேசித்ததில்லை. அவை முற்றி லும் தற்காப்புச் செயல்திட்டத்தைப் பின்பற்று கின்றன. அதனால்தான் இராணுவத் துறை யில் பதட்ட நிலைத் தணிவு குறித்து வார்சா உடன்படிக்கை நாடுகள் செய்திருக்கின்ற ஆக்க

பூர்வமான பிரேரணைகளைப் போல வேறு எந்த நாடோ அல்லது நாடுகளின் கோஷ்டியோ செய்ததில்லை. அவை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் உலகத்தில் சமாதானமும் பாதுகாப்பும் பலமடைந்திருக்கும். ஆனால் ''நாட்டோ'' நாடுகள் தொடர்ந்து ஆயுதப் பெருக்கத்திலும் உலகத்தின் பல பகுதிகளின் ''நெருக்கடி நிலைமைகளை'' ஏற்படுத்துவதிலும் ஈடுபடுகின்றன. இவை சமாதானத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் ஆபத்துண்டாக்குகின்றன.

வார்சா உடன்படிக்கை ஸ்தாபனம் கால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாகச் செய்திருக்கின்ற நடவடிக்கைகள் ஏகாதிபத்திய பயமுறுத்தலைப் பின்னே தள்ளுவதற்கும் சமாதானத்தை பலப்படுத்துவதற்கும் அது சக்திவாய்ந்த, பயனுள்ள ஆயுதம் என்பதை நிரூபிக்கின்றன. சோஷலிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு சமாதானத்தை உறுதிப்படுத்துகின்ற மிக முக்கியமான காரணியாகவும் அது இருக்கிறது.

வார்சா உடன்படிக்கையைத் தவிர, சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் நட்புறவு, ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி ஒப்பந்தங்கள் உலக சோஷலிசத்தை வளர்ப்பதிலும் சமாதானத்தை பலப்படுத்துவதிலும் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. அவை சோஷலிஸ்ட் சாதனைகளைப் பாதுகாப்பதில் பரஸ்பர பொறுப்புகளையும் சகோதர ஒத்துழைப்பின் கோட்பாடுகளையும் திசைவழிகளையும் நிர்ணயிக்கின்றன.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் இரு தரப்பு ஒத்துழைப்பு அவற்றின் சமூக அமைப்பு கள் மற்றும் பிரதான நலன்களின் பொதுவான தன்மையை அடிப்படையாகக் கொண்டிருக் கிறது. அது பரஸ்பர மதிப்பு, அரசுரிமை, சுதந்திரம், முழுமையான சமத்துவம் மற்றும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை ஆகிய கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண் டிருக்கிறது. இந்த ஒத்துழைப்பு அரசியல் மற்றும் சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது. ஒவ்வொரு நாடும் சோஷலிசத்தை நிர்மாணிப்பதற்கு உதவி செய் வதும் சகோதர சோஷலிஸ்ட் நாடுகளின் குடும் பத்தை வலுப்படுத்துவதும் இந்த ஒத்துழைப்பின் நோக்கமாகும்.

## சித்தாந்தத் துறையில் ஒத்துழைப்பு

சோஷலிஸ்ட் அரசுகளுக்கு இடையில் ஒத்துழைப்பு நடைபெறுகின்ற முக்கியமான துறைகளில் சிந்தாந்தத் துறையில் ஒத்துழைப்பும் ஒன்றாகும். ஒவ்வொரு நாட்டிலும் சித்தாந்த மற்றும் கல்வி வேலையின் தரத்தை உயர்த்து வதற்கும் இரண்டு சமூக அமைப்புகளுக்கு இடை யில் சித்தாந்தப் போராட்டத்தில் வெற்றி அடைவதற்கும் இது உதவி புரிகிறது.

சமீப வருடங்களில் சோஷலிஸ்ட் நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளின் சித்தாந்த அமைப்பு களுக்கு இடையில் பிணைப்புகள் மிகவும் அதிக

அளவில் பலப்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட்டிருக்கின்றன. 1974 முதல் சகோதரக் கட்சிகளின் மத்தியக் கமிட்டிகளின் செயலாளர்கள் சித்தாந்த வேலையை ஒத்திசைவிப்பதைப் பற்றி விவாதிப்பதற்குப் பல கூட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளுக்கு இடையில் கூட்டுத் தத்துவ ஆராய்ச்சிக்கும் முதலாளி வர்க்க சித்தாந்தம் மற்றும் வலது மற்றும் ''இடது'' சீர்திருத்த வாதத்துக்கும் எதிரான சித்தாந்தப் போராட்டம் ஆகியவற்றில் விரிவான சித்தாந்த மற்றும் தத்துவ ரீதியான ஒத்துழைப்புக்கு ஒத்திசைவித்தல் அவசியமாக இருக்கிறது. சோஷலிசத்தின் எதிரிகள் சோஷலிஸ்ட் நாடுகளின் மக்களின் மனங்களில் முதலாளி வர்க்க சித்தாந்தத்தை விதைப்பதற்கும் சோஷலிசத்தை அவதூறு செய்து சோஷலிஸ்ட் இலட்சியங்களைக் கேவலப்படுத்துவதற்கும் பொதுஜன செய்தி-காட்சிச் சாதனங்களை விரிவாக உபயோகித்துப் பிரச்சாரம் செய்கிறார்கள். ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த விசேஷமான மையங்களிலிருந்து வெள்ளம் போல எதிர்ப்பிரச்சாரம் செய்யப்படுவதால் சோஷலிஸ்ட் நாடுகள் இப்பிரச்சாரத் தாக்குதலை சமாளிப்பதற்குத் தம்முடைய முயற்சிகளை ஒன்றுபடுத்தியுள்ளன.

சகோதரக் கட்சிகள் சோஷலிஸ்ட் நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கையின் விஞ்ஞான அடிப்படைகள், சமாதானம் மற்றும் வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கு

இடையில் சமாதான சகவாழ்வை நிறுவுவதற்கான போராட்டத்தில் ஒருமைப் பிரச்சினைகள், சமூகத்தின் புரட்சிகரமான மாற்றங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், புதிய நிலைமைகளில் சித்தாந்தப் போராட்டத்தின் செயல்திட்டம் மற்றும் செயல்முறை ஆகியவற்றை ஒன்று சேர்ந்து விரித்துரைக்கின்றன. சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிப்பதில் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் விரிவடைந்த பாத்திரம், ஒன்றுபட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியை உருவாக்குவதில் மார்க்சிய-லெனினியத்தின் தாக்கம் ஆகியவை முன்வைக்கின்ற பிரச்சினைகளையும் நவீன சமூக வளர்ச்சியைப் பற்றி இன்னும் சில ஜீவாதாரமான பிரச்சினைகளையும் பற்றி அவை கூட்டாக ஆராய்ச்சி செய்கின்றன.

விஞ்ஞானம் மற்றும் கல்வித் துறைகளில் சோஷலிஸ்ட் நாடுகளின் ஒத்துழைப்பும் ஒத்திசைந்த நடவடிக்கைகளும் விரிவடைந்து வருகின்றன; அவை வெவ்வேறு மட்டங்களில் வெவ்வேறு வடிவங்களில் நடைபெறுகின்றன. சோஷலிஸ்ட் நாடுகளின் விஞ்ஞானப் பேரவைகளின் சமூக விஞ்ஞானப் பிரிவுகளின் துணைத் தலைவர்களின் நிரந்தரக் கமிட்டி இத்துறைகளில் ஆராய்ச்சிகளை ஒருங்கிணைக்கிறது. கூட்டு ஆராய்ச்சிகளும் நடைபெறுகின்றன. உதாரணமாக, 1970க்களின் நடுப்பகுதியில் சமூக விஞ்ஞானப் பிரிவில் மட்டும் 200க்கும் அதிகமான ஆராய்ச்சிகள் கூட்டாக நடத்தப்பட்டன. கூட்டு

முயற்சியினால் விஞ்ஞான ஆராய்ச்சி கூடுதலான பலனைத் தருகிறது; சோஷலிஸ்ட் நாடுகளின் விஞ்ஞான ஆற்றல் இன்னும் சிறப்பாக உபயோகிக்கப்படுவதும் ஒதுக்கப்பட்ட தொகை சிக்கனமாகச் செலவிடப்படுவதும் விஞ்ஞானப் பிரச்சினைகள் விரைவாகத் தீர்க்கப்படுவதும் உறுதியாக்கப்படுகின்றன. சகோதர நாடுகளைச் சேர்ந்த உயர் கல்வி நிலையங்களுக்கு இடையில் நேரடியான உறவுகள் மென்மேலும் வளர்ச்சியடைந்து வருகின்றன.

சோஷலிஸ்ட் நாடுகளின் மக்களினங்களை நெருக்கமாகக் கொண்டுவருவதற்கும் அவர்களுடைய நட்புறவை வலுப்படுத்துவதற்கும் கலாசார ஒத்துழைப்பு முக்கியமான கருவியாக இருக்கிறது. அது ஆன்மிக வாழ்க்கையை வளப்படுத்துகிறது; கலாசாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் விரைவாகவும் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியடைவதை ஊக்குவிக்கிறது.

சகோதர நாடுகளுக்கு இடையில் கலாசாரப் பிணைப்புகள் மென்மேலும் அதிகமாகப் பன்முகத் தன்மையைப் பெற்று வருகின்றன. நாடகக் குழுக்கள், இசைக் குழுக்கள், முன்னணிக் கலைஞர்கள், எழுத்தாளர்களின் சுற்றுப் பயணங்கள், கலைக் கண்காட்சிகள், புத்தக வெளியீடுகள், திரைப்படங்கள், வானொலி, தொலைக் காட்சி நிகழ்ச்சிகளின் பரிவர்த்தனை இவை அனைத்தும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த மக்களைப் பற்றி இன்னும் நன்றாகத்

தெரிந்து கொள்வதற்குக் கோடிக்கணக்கான மக்களுக்கு உதவியிருக்கின்றன. ஒரு நாடு மற்றொரு நாட்டில் நடத்துகின்ற கலாசார விழாவும் அந்த நாட்டின் முன்னணிக் கலைஞர்கள் இவ்விழாக்களில் பங்கெடுப்பதும் மக்களிடம் அதிகமான வரவேற்பைப் பெற்றிருக்கின்றன.

1970க்களில் தொழிற்சங்கங்கள் மற்றும் இளைஞர் ஸ்தாபனங்களுக்கு இடையில் கலாசாரப் பரிவர்த்தனை முக்கியத்துவமடைந்து கலாசார உறவுகள் ஐந்து வருட காலத்துக்குத் திட்டமிடப்பட்ட பொழுது சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் கலாசார உறவுகளின் வளர்ச்சியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது.

வளர்முக நாடுகளுக்கு சோஷலிஸ்ட் அரசுகள் தருகின்ற உதவியும் கலாசார ஒத்துழைப்பின் ஒரு பகுதியே. சோஷலிஸ்ட் நாடுகள் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த பல நாடுகளுக்கு சிறப்பான கல்வி அமைப்புகளை அமைப்பதற்கும் அந்த நாடுகளில் காலனியாதிக்கத்தின் மரபுரிமையான கலாசாரப் பின்தங்கிய நிலையை அகற்றுவதற்கும் உதவி செய்திருக்கின்றன.

இறுதியாக, சோஷலிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களுக்கு இடையில் நேரடியான உறவுகளை வளர்த்தல் மிகவும் முக்கியமானதாகும். இத்தகைய உறவுகள் சகோதர நாடுகளில் உள்ள மக்கள் நெருங்கிப் பழகுவதற்கும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்குரிய சூழலைத் தோற்றுவிப்பதற்கும் சோஷலிஸ்ட் நாடுகளின்



8*

தார்மிக, அரசியல் மற்றும் சித்தாந்த ஒற்றுமையை உறுதிப்படுத்துவதற்கும் உதவி செய்கின்றன.

## கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டணி

சோஷலிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரிக்க முடியாத கூட்டணி, அவற்றின் பொதுவான உலகக் கண்ணோட்டம், பொதுவான நோக்கங்கள், சித்தம் ஆகியன சோஷலிஸ்ட் நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்புக்கு அடிப்படையாகவும் அதன் தலைமையான, வழிகாட்டுகின்ற சக்தியாகவும் இருக்கின்றன. ஆட்சிப் பொறுப்பிலிருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சிகள் தம்முடைய நடவடிக்கைகள் அனைத்திலும் ஒத்துழைக்கின்றன; இந்த ஒத்துழைப்பு எல்லா மட்டங்களிலும் வெவ்வேறு வடிவங்களில் நிறைவேற்றப்படுகிறது.

சகோதரக் கட்சிகளின் மத்தியக் கமிட்டிகளின் பொதுச் செயலாளர்கள் மற்றும் முதல் செயலாளர்களுக்கு இடையில் தற்பொழுது வழக்கமாகி விட்ட பலதரப்பு மற்றும் இருதரப்புச் சந்திப்புகள் இந்த ஒத்துழைப்பில் விசேஷமான பாத்திரத்தை வகிக்கின்றன. இச்சந்திப்புகள் சோஷலிஸ்ட் கூட்டணியை வலுப்படுத்துவதில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. இவற்றின் போது உடனடிப் பிரச்சினைகளும் நீண்ட காலப் பிரச்சினைகளும் விவாதிக்கப்

படுகின்றன, பல்துறை ஒத்துழைப்பை விரிவு படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் முடிவு செய்யப்படுகின்றன. சமீப வருடங்களில் சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் சமத்துவமான, பரஸ்பர அனுகூல மான பொருளாதார ஒத்துழைப்பை விரிவு படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக் கிறது. பொருளாதாரப் பிணைப்புகளையும் நீண்ட கால ஒத்திசைந்த திட்டங்களின் அடிப் படையில் உற்பத்தியில் தனித்துறைச் சிறப்புத் தேர்ச்சியையும் ஒத்துழைப்பையும் செயலூர மாக்க வேண்டிய அவசியமும் சிஎம்இஏ ஸ்தா பனத்தின் சுற்றுவட்டத்துக்குள் சோஷலிஸ்ட் பொருளாதார ஒருங்கிணைப்பை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியமும் வலியுறுத்தப்பட் டிருக்கின்றன.

இச்சந்திப்புகளின் போது முக்கியமான சர்வ தேசப் பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன; சகோதர நாடுகள் கூட்டாகப் பாடுபட வேண் டிய நோக்கங்கள் ஸ்தூலப்படுத்தப்படுகின்றன. இவற்றின் மூலம் சோஷலிஸ்ட் நாடுகளின் வெளி நாட்டுக் கொள்கையின் ஒத்திசைவின் தரம் உயர்கிறது.

சகோதரக் கட்சிகளின் மத்தியக் கமிட்டி களின் செயலாளர்கள் பல்வேறு பிரச்சினை களைப் பற்றி இருதரப்பு மற்றும் பலதரப்புக் கூட்டங்களில் விவாதிக்கிறார்கள். வாடிக்கை யான ஆலோசனைக் கூட்டங்கள், கருத்தரங்கு கள், சொற்பொழிவுச் சுற்றுப் பயணங்கள்,

கட்சி வேலையைப் பற்றி ஆராய்வதற்காக தூதுக்குழுக்களைப் பரிமாறிக் கொள்ளுதல் முதலியனவும் உண்டு. சகோதர நாடுகளின் ஆராய்ச்சி ஸ்தாபனங்கள், கல்வி அமைப்புகள் மற்றும் பத்திரிகைகளும் ஒன்றோடொன்று ஒத்துழைக்கின்றன.

ஸ்தல கட்சி அமைப்புகளுக்கு இடையில் சுறுசுறுப்பான தொடர்புகள் இருக்கின்றன. உதாரணமாக, 130க்கும் அதிகமான சோவியத் பிரதேசங்கள், பிராந்தியங்கள் மற்றும் நகரங்கள் சகோதர சோஷலிஸ்ட் நாடுகளில் உள்ள 150 பிராந்தியங்கள் மற்றும் நகரங்களுடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன.

கட்சிகளுக்கிடையிலான ஒத்துழைப்பு அரசு ஸ்தாபனங்கள், பொதுஜன அமைப்புகள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு இடையிலுள்ள பரந்த தொடர்புகளுடன் ஒருங்கிணைக்கப்படுகிறது. சோவியத் யூனியனிலும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளிலும் உள்ள நட்புறவுக் கழகங்கள் இதில் மாபெரும் பங்களிப்பைச் செய்கின்றன. சோஷலிஸ்ட் நாடுகளின் மக்களினங்களுக்கு இடையில் தொடர்புகள் விரிவடைதல் அந்நாடுகளுக்கு இடையிலுள்ள உறவுகளுக்கு மெய்யான வெகுஜனத் தன்மையைத் தருகின்றன.

சோஷலிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த மிகப் பெரும்பான்மையான கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இடையில் ஒற்றுமை மற்றும் பயன்மிகுந்த ஒத்துழைப்பு இருந்து வருகிறது எனக் கூறும்

பொழுது சில பிரச்சினைகளில் அவை வெவ் வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை என்பது அர்த்தமல்ல. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் சோஷலிஸ்ட் நாடுகளின் ஒற்றுமை மென்மேலும் அதிகரிப்பது மொத்தப் போக்காக இருக்கிறது. சகோதரக் கட்சிகளும் இதை வலியுறுத்துகின்றன. நன்கு சோதனை செய்யப்பட்ட மார்க்சிய-லெனினியக் கோட் பாடுகள், சோஷலிஸ்ட் சர்வதேசியம், சமத் துவம் மற்றும் சகோதர ஒத்துழைப்பு ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளின் கூட்டு முயற்சிகள் உலக சோஷலிசத்தை பலப் படுத்துவதற்கு அவசியம் என்ற முகப்புரையுடன் அவை தொடங்குகின்றன.

சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் வெற்றி கரமாக நிர்மாணிப்பதில் சகோதர நாடு களின் ஒற்றுமை கேந்திரமான கூறாக இருப் பதை சோஷலிஸ்ட் குடும்பத்தின் வரலாறு சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. உலக சோஷ லிசத்தை எதிரிடுகின்ற மிகவும் சிக்கலான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தனிப்பட்ட நாடுகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற் கும் கூட்டு முயற்சிகள் பேருதவி புரிகின்றன.

சோஷலிஸ்ட் குடும்பத்தைச் சேர்ந்த நாடு கள் சமூக வாழ்க்கையின் அனைத்துத் துறை களிலும் ஆழமான மாற்றங்களை ஏற்படுத்து வதற்கும் மாபெரும் திட்டங்களை நிறைவேற்று வதற்கும் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் பரஸ்பர ஆதரவு அந்நாடுகளுக்கு உதவியிருக்

கின்றன. எல்லா நாடுகளின் சுய-வலியுறுத்தலும் சோஷலிஸ்ட் குடும்பத்துக்குள் நெருக்கமான பிணைப்புகளுக்கு அவை பாடுபடுதலும் உலக சோஷலிஸ்ட் அமைப்பின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சி என்னும் ஒற்றை நிகழ்வுப் போக்கின் இரண்டு பக்கங்களே.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் ஒற்றுமை மற்றும் நெருக்கமான ஒத்துழைப்பு சர்வ தேசத் தொழிலாளி வர்க்கம் மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களின் வெற்றிகரமான வளர்ச்சிக்கு முக்கியமான நிபந்தனையாக இருக்கின்றன. ''சோஷலிசத்தின் வெற்றிகள், உலக நிகழ்ச்சிப் போக்கின் மீது அதன் தாக்கம் மற்றும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தின் வலிமை சோஷலிஸ்ட் நாடுகளின் ஒற்றுமையையே பெருமளவுக்குச் சார்ந்திருக்கின்றன. செயலில் சோஷலிஸ்ட் நாடுகளின் ஒற்றுமை எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் ஒன்றுசேர்ப்பதில் முக்கியமான கூறாக இருக்கிறது''* என்று 1969இல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இறுதி ஆவணம் எடுத்துக்காட்டுகிறது. அதனால்தான் இந்த நாடுகளைச் சேர்ந்த மார்க்சிய-லெனினியக் கட்சிகள் மட்டுமல்லாமல் மொத்த கம்யூனிஸ்ட் இயக்கமும்

---

* *International Meeting of Communist and Workers' Parties,* Moscow, 1969, Peace and Socialism Publishers, Prague, 1969, p. 23.

மற்றும் முற்போக்கு, ஜனநாயக இயக்கங்களும் சோஷலிஸ்ட் நாடுகளின் ஒற்றுமை மேலும் வலுப்பட வேண்டும் என்று விரும்புகின்றன.

சோஷலிஸ்ட் நாடுகளின் ஒற்றுமை இன்னும் வலுப்பட வேண்டும் என்னும் அக்கறை அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் சோஷலிசத்தின் பலத்தின் தோற்றுவாயாக இருக்கின்ற இந்த ஒற்றுமையை அழிப்பதற்கு ஏகாதிபத்திய சக்திகள் தம்மாலியன்ற எல்லாவற்றையும் செய்கின்றன. சோஷலிஸ்ட் அரசுகளை ஒன்றுக்கொன்று எதிராக நிறுத்த வேண்டும், அவற்றுக்கிடையில் வேற்றுமைகளை ஏற்படுத்த வேண்டும் என்று அவை விரும்புவதால் ''தேசியக் கம்யூனிசம்'' என்று சொல்லப்படும் கருத்துக்களைப் பரப்புகின்றன. தனிப்பட்ட நாடுகள் சோஷலிசத்தை நோக்கி முன்னேறுவதில் தேசியமான, தனித்தன்மையான கூறுகள் தலைமையான பாத்திரத்தை வகிக்கும், வளர்ச்சிப் பாதைகளில் கணிசமான வேற்றுமைகள் இருக்கின்றன என்று கூறுகின்ற ஆபத்தான தத்துவம் இது.

ஏகாதிபத்திய நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் சோஷலிஸ்ட் நாடுகளுக்கு எதிராக பலவிதமான கவிழ்ப்பு முறைகளை உபயோகிக்கின்றன; அவை பின்பற்ற வேண்டிய உதாரணங்களாகத் தம்முடைய சொந்த சமூக, அரசியல் மற்றும் அறவியல் ''மதிப்புகளை'' முன்வைக்க முயற்சி செய்கின்றன. சோஷலிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த மக்கள் மீது குட்டி முதலாளி வர்க்க

மனோபாவத்தையும் முதலாளி வர்க்க உலகக் கண்ணோட்டத்தையும் திணிப்பதற்கு அவை பாடுபடுகின்றன. முதலாளிகள் சோஷலிஸ்ட் சமூகத்தின் ''நண்பர்கள்'', சோஷலிஸ்ட் சமூகத்தை ''அபிவிருத்தி'' அல்லது ''நயப்படுத்தி விட்டால்'' போதும் என்று கூறுவது முதலாளி வர்க்கப் பிரச்சாரம் உபயோகிக்கின்ற முறைகளில் ஒன்றாகும். ஆனால் சோஷலிசத்தை அடியோடு மாற்றி, முதலாளித்துவத்தை மறுபடியும் ஆட்சி பீடத்தில் அமர்த்துவதையே சோஷலிச விரோதிகள் உண்மையில் விரும்புகிறார்கள்.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பைத் தடை செய்கின்ற எதிர்மறையான மற்ற கூறுகளும் இருக்கின்றன. சோஷலிஸ்ட் குடும்பத்திலும் தனிப்பட்ட சோஷலிஸ்ட் நாடுகளிலும் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருக்கின்றன. பழமைக்கும் புதுமைக்கும் நடைபெறுகின்ற போராட்டத்தின் போக்கில், உள்முரண்பாடுகள் தீர்க்கப்படுகின்ற பொழுது சோஷலிஸ்ட் உலகம் வளர்ச்சியடைகிறது. அதன் விளைவாக, தனித் துறைகளில் சிக்கல்கள் தோன்றக் கூடும், அவை நாடுகளுக்கு இடையிலுள்ள உறவுகளில் ஏதாவதொரு வழியில் எதிர்மறையான கூறுகளைத் தோற்றுவிக்கலாம்.

உலக சோஷலிசம் வளர்ச்சியடைகின்ற பொழுது, ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராகத் தீவிரமான போராட்டம் நடைபெறுகின்ற பொழுது ஏற்படக் கூடிய சிக்கலான நிலைமை

களைத் தீர்க்கின்ற வெற்றிகரமான வழியை சோஷலிஸ்ட் நாடுகள் கண்டுபிடிப்பதற்கு அவற்றின் நெருங்கிய ஒத்துழைப்பு உதவியிருக்கிறது. எல்லாப் பிரச்சினைகளையும் உரிய நேரத்தில் சரியான முறையில் தீர்ப்பதற்கும் அரசு, சமூக-பொருளாதார மற்றும் கலாசார வாழ்க்கையின் எல்லா மட்டங்களிலும் ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்வதற்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் அனுபவம் உதவி செய்கிறது. சோஷலிஸ்ட் நாடுகள் தம்முடைய இடை உறவுகளை வலுப்படுத்துவதற்கு பரிபூரண சமத்துவம், பரஸ்பர அனுகூலம், சகோதர உதவி முதலிய கோட்பாடுகள் உதவுகின்றன. சகோதர நாடுகள் ஒவ்வொன்றும் வெற்றியடைவதைக் காண வேண்டுமென்று சகோதரக் கட்சிகள் விரும்புகின்றன. அவை தேசிய மற்றும் சர்வதேசிய நலன்களை ஒன்றிணைப்பது இயற்கையானதே.

ஏகாதிபத்திய முதலாளி வர்க்கம் சோஷலிஸ்ட் உலகத்துடன் மேற்கு மற்றும் கிழக்கு நாடுகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களின் ஒற்றுமையை அரித்தழிக்க விரும்புகிறது. உழைக்கும் மக்களின் ஒற்றுமை பலமடைந்தால் மேற்கு நாடுகளில் இடதுசாரி சக்திகளின் வெற்றியைத் தடுப்பது, முன்னர் காலனிகளாக இருந்த நாடுகளில் புதிய காலனியாதிக்க முறை ஊடுருவுவது என்கின்ற ஏகாதிபத்தியத்தின் திட்டங்கள் தோல்வியடையும் என்பதை முதலாளி வர்க்கம் உணர்கிறது. உண்மையான சோஷலிசத்துக்கும் இதர புரட்சிகர சக்திகளுக்கும் இடையில் பிளவை

ஏற்படுத்துவதற்கு ஏகாதிபத்தியம் பல்வேறு முறைகளைப் பின்பற்றுகிறது. மேற்கு நாடு களைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் நலன்களும் சோஷலிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த மக்களின் நலன்களும் ''எதிர்நிலையில்'' இருக் கின்றன, உண்மையான சோஷலிசத்தின் அனுப வம் ஐரோப்பா, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த நாடுகளுக்குப் ''பொருந் தாது'' என்னும் பிரச்சாரத்துடன் சித்தாந்த, உளவியல் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற முறை களும் பின்பற்றப்படுகின்றன. இவற்றுடன் கவிழ்ப்பு நடவடிக்கைகளும் சுதந்திரப் போராட் டத்தில் சோஷலிஸ்ட் நாடுகளைச் சார்ந்து நிற்க விரும்புகின்ற நாடுகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளும் உபயோகிக்கப்படு கின்றன.

சோஷலிஸ்ட் அரசுகள் பின்பற்றுகின்ற சமாதானக் கொள்கைக்கு, பதட்ட நிலையைத் தணிப்பதற்கு, ஆயுதப் போட்டிக்கு முடிவு கட்டுவதற்கும் படைக்கலைப்புக்கும் அவற்றின் இடைவிடாத முயற்சிகளுக்கு சோஷலிஸ்ட் அல் லாத நாடுகளின் மக்களினங்கள் தரும் ஆதரவை பலவீனப்படுத்துவது ஏகாதிபத்தியவாதிகளின் நோக்கங்களில் ஒன்றாகும். சோஷலிசம் இராணுவ ரீதியில் உலகத்தை பயமுறுத்துகிறது என்ற கற்பனையை உழைக்கும் மக்களை நம்ப வைப் பதற்கு அவர்கள் முயற்சி செய்கிறார்கள். அதே சமயத்தில் சோஷலிஸ்ட் நாடுகளின் சமாதானப் பிரேரணைகளை ஆதரிக்கின்ற அனைவரையும்

''அந்நிய அரசின் அடிமைகள்'', ''மாஸ்கோவை ஆதரிப்பவர்கள்'', தேசிய நலன்களுக்கு துரோகம் செய்பவர்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

மற்ற நாடுகளைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் சோஷலிசத்துக்குத் தருகின்ற ஆதரவை பலவீனப்படுத்துதல், அதன் விளைவாக சோஷலிசத்தின் சர்வதேச செல்வாக்கைக் குறைத்தல், உலக சோஷலிஸ்ட் அமைப்பை பலவீனப்படுத்துதல், சகோதர சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பு வலுப்படுவதைத் தடுத்தல் இந்த நடவடிக்கைகளின் நோக்கம்.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கிடையில் அதிகமான ஒற்றுமையை வலியுறுத்துகின்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் கொள்கை சமீப வருடங்களில் மிகவும் வெற்றியடைந்திருக்கிறது. சகோதர நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளுக்கு இடையில் பல்துறையிலும் ஒத்துழைப்பு விரிவடைந்து வருகிறது. அனுபவங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதன் அடிப்படையில் சோஷலிசம் மற்றும் கம்யூனிச நிர்மாணத்தைப் பற்றிய முக்கிய பிரச்சினைகளை விரித்துரைப்பதற்கு, பொருளாதார மற்றும் கலாசார உறவுகளில் மிகவும் உசிதமான வடிவங்களை நிர்ணயிப்பதற்கு, பொதுவான வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதற்கு அது உதவுகிறது.

சோஷலிஸ்ட் குடும்பம் அதிகமான ஒற்றுமை

யின் மூலம் சமூக வளர்ச்சி விரைவாக முன்னேறுவதை ஊக்குவிக்கிறது, சமாதானம், தேசிய சுதந்திரம் மற்றும் சோஷலிசத்துக்கான போராட்டம் வெற்றியடைவதற்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்குகிறது.

சகோதர நாடுகள் பலமடைகின்ற பொழுது அவற்றின் பொருளாதார, சமூக-அரசியல் மற்றும் கலாசார சாதனைகள் பன்மடங்காகப் பெருக்கமடைகின்ற பொழுது, சமூக வளர்ச்சியில் அவற்றுக்கிடையிலுள்ள வேறுபாடுகள் அகற்றப்படுகின்ற பொழுது, பரஸ்பர உதவியும் கருத்துப் பரிவர்த்தனைகளும் அதிகரிக்கும் என்று உலக சோஷலிசத்தின் கடந்த கால அனுபவத்திலிருந்து முடிவு செய்ய இயலும். சம உரிமைகளும் அரசுரிமையும் கொண்ட சோஷலிஸ்ட் அரசுகளின் குடும்பத்தின் சுற்றுவட்டத்துக்குள் நாடுகள் மற்றும் மக்களினங்கள் நெருங்கி வருவதும் பல்வேறு துறைகளில் அவற்றின் வாழ்க்கை சர்வதேசமயமாவதும் மேலும் அதிகரிக்கும்.

## 3. சர்வதேச அரங்கத்தில் கூட்டு நடவடிக்கை

தற்கால வாழ்க்கையில் உலக சோஷலிஸ்ட் அமைப்பின் பாத்திரம் அதிகரித்திருப்பது சர்வ தேச உறவுகளை ஜனநாயகப்படுத்துவதற்கு, வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளுக்கு இடையில் சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை நிறுவுவதற்கு, உலக சமா தானத்தை வலுப்படுத்தி ஆயுதப் போட்டியை நிறுத்துவதற்கு சர்வதேச அரங்கத்தில் அதன் நடவடிக்கைகளில் பிரதிபலிக்கப்படுகிறது. சோஷ லிஸ்ட் நாடுகள் ஆக்கிரமிப்பு மற்றும் வல்லரசுத் தலைமைவாதக் கொள்கையை வன்மையாக எதிர்க்கின்றன, தேசிய விடுதலை, சமூக விடு தலை மற்றும் சுதந்திரப் போராட்டத்தை ஆதரிக்கின்றன.

சர்வதேச அரங்கத்தில் சோஷலிஸ்ட் நாடு களின் இடைச்செயல் மென்மேலும் வளர்ந்து வருகிறது. ஆரம்ப கட்டத்தில் தனிப்பட்ட வெளிநாட்டு அரசியல் நடவடிக்கைகளை ஒத் திசைவு செய்வதிலிருந்து பொதுவான செயல் திட்டச் சுற்றுவட்டத்துக்குள் கூட்டு நடவடிக்கை களை ஒத்திசைவிப்பதற்கு அவை முன்னேறி யிருக்கின்றன. வார்சா உடன்படிக்கையின் சுற்று

வட்டத்திற்குள்ளாகவும் இரு தரப்பு அடிப் படையிலும் நடைபெற்ற ஒத்திசைவு சகோதர நாடுகள் தம்முடைய பொது நோக்கங்களுக்கு இன்னும் சிறப்பாகப் போராடுவதற்கும் சோஷ லிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் நடை பெறுகின்ற வரலாற்று ரீதியான எதிர்ப்படுதலில் அவற்றின் நிலைகளை வலுப்படுத்துவதற்கும் உதவியிருக்கிறது.

உலகத்தின் முதல் சோஷலிஸ்ட் நாடு 1917இல் ஏற்பட்ட கணத்திலிருந்து லெனி னுடைய வழிகாட்டுதலில் பின்பற்றிய கொள் கையின் தொடர்ச்சி மற்றும் வளர்ச்சியே சகோ தர நாடுகள் கடைப்பிடிக்கின்ற வெளிநாட்டுக் கொள்கை. சோவியத் நாடு ''எல்லா மக்களினங் களுடனும் சமாதானமாக வாழ்வதற்கும் உள் நாட்டு வளர்ச்சிக்காக அதன் முயற்சிகள் அனைத் தையும் ஈடுபடுத்துவதற்கும்''* பாடுபடுவதையும் ''ஒரு சோஷலிஸ்ட் சமுதாயத்தைப் படைப் பதற்கும் மக்களிடையே நிலையான, நீதி யான சமாதானத்தை நிறுவுவதற்கும்... மனித குலத்தை இட்டுச் செல்கின்ற பாதையை உறுதிப் படுத்தவும் அதை விரைவாக்கவும்''** தன் னாலியன்ற அனைத்தையும் செய்யத் தயாராக

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 10, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 104.

** வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 8, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 48.

இருப்பதையும் அதன் வெளிநாட்டுக் கொள்கை பிரதிபலிக்கிறது என்று லெனின் சுட்டிக் காட்டினார்.

ஆக்கிரமிப்பை, மற்ற மக்களுடைய நிலங்களைக் கைப்பற்றுவதையும் மக்களினங்களை அடிமைப்படுத்துவதையும் முற்றிலும் வழியடைக்கின்ற உலக சோஷலிஸ்ட் அமைப்பின் தன்மையிலேயே சமாதான வெளிநாட்டுக் கொள்கை உள்ளுறையாக இருக்கிறது. சோவியத் நாடு சமாதானச் சின்னத்துடன் பிறந்தது. வெற்றியடைந்த சோஷலிஸ்ட் புரட்சி நிறைவேற்றிய முதல் சட்டம் லெனினுடைய **சமாதானம் பற்றிய அரசாணை** ஆகும். பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் சமாதான சகவாழ்வும் சோஷலிஸ்ட் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் என்று அது பிரகடனம் செய்தது. இக்கோட்பாடுகள் பிறகு சட்டங்களாக வகுத்தளிக்கப்பட்டன. இச்சட்டங்களை சோவியத் யூனியன் தன்னுடைய வரலாறு நெடுகிலும் முரணில்லாமல் கடைப்பிடித்திருக்கிறது. சோஷலிஸ்ட் நாடுகளின் முக்கியமான ஆவணங்களிலும் அவை பிரதிபலிக்கப்பட்டன.

சோவியத் நாட்டின் ஆரம்ப வருடங்களில் **பாட்டாளி வர்க்க சர்வதேசியம்** என்பது சோஷலிஸ்ட் அரசைச் சேர்ந்த மக்களும் மற்ற நாடுகளைச் சேர்ந்த மக்களினங்களும் ஏகாதிபத்திய யுத்தங்களுக்கு முடிவு கட்டுவதற்கும், நியாயமான, ஜனநாயக சமாதானத்தை நிறுவுவதற்கும் அக்டோபர் புரட்சியின் வெற்றிகளைப் பாது

காப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் நடத்துகின்ற போராட்டத்தில் பரஸ்பர ஒருமைப்பாட்டையும் ஆதரவையும் குறித்தது.

உலக சோஷலிஸ்ட் அமைப்பு உருவாகியதுமே பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடு சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையிலும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் முதலாளித்துவ நாடுகளின் மக்களினங்களுடனும் புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் மக்களுடனும் உறவுகளின் அடிப்படையாக இருந்தது.

சோவியத் யூனியனும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளும் பொருளாதார மற்றும் அரசியல் சார்பு நிலையிலிருந்து எல்லா மக்களினங்களையும் விடுவிப்பதற்கும் அவற்றின் உரிமைகள் ஏகாதிபத்தியத்தினால் பறிக்கப்படுவதை எதிர்ப்பதற்கும் முரணில்லாமல் பாடுபடுகின்றன. சோஷலிஸ்ட் நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை மக்கள் தம்முடைய சுதந்திரமான சித்தத்தின் அடிப்படையில் கேந்திரமான பிரச்சினைகளைத் தீர்ப்பதை ஊக்குவிக்கிறது.

**வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளுக்கு இடையில் சமாதான சகவாழ்வுக்** கோட்பாட்டை நாம் இப்பொழுது எடுத்துக் கொள்வோம். அது சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றி லெனினுடைய தத்துவத்திலிருந்து, முதலாளித்துவத்தின் சமமில்லாத வளர்ச்சியினால் புரட்சி ஒரே சமயத்தில் எல்லா நாடுகளிலும் வெற்றி அடைய முடியாது என்ற உண்மை

யிலிருந்து அது நேரடியாக ஏற்படுகிறது. ஆகவே எதிரெதிரான சமூக-பொருளாதார அமைப்பு களைச் சேர்ந்த அரசுகள் ஒரு வரலாற்று சகாப் தம் முழுமைக்கும் அடுத்தடுத்து இருப்பது தவிர்க்க முடியாததாகும். இந்த அமைப்புகளின் சமரசப்படுத்த முடியாத தன்மை முதலாளித் துவ அரசுகளுக்கும் சோஷலிஸ்ட் அரசுகளுக்கும் இடையில் தீவிரமான போராட்டத்தை ஏற் படுத்துகிறது; அது சமாதான பூர்வமான தாகவோ அல்லது ஆயுதமேந்திய போராட்ட மாகவோ இருக்கலாம். ஏகாதிபத்தியத்திடம் உள் ளூறையாக இருக்கின்ற ஆக்கிரமிப்பு உணர்ச்சி சோஷலிசத்தின் மீது போர் தொடுக்கும்படி அதைத் தடுக்க முடியாதபடி உந்தித் தள்ளு கிறது. ஆனால் ஆக்கிரமிப்பு சாத்தியம் என்று கூறுகின்ற பொழுது அது நிச்சயம் என்பது அர்த்தமல்ல. அது சக்திகளின் ஸ்தூலமான சமநிலையைப் பொறுத்திருக்கிறது.

சோவியத் யூனியன் தலைமை தாங்குகின்ற சோஷலிஸ்ட் அமைப்பு தோன்றிய காலத்தி லிருந்து முதலாளித்துவ உலகத்துடன் சமாதான சகவாழ்வுக் கொள்கையைப் பின்பற்றி வரு கிறது. ஆனால் மிகப் பெரிய முதலாளித்துவ வல்லரசுகளின் ஆளும் வட்டாரங்கள் சமாதான சகவாழ்வுக் கருத்தை ஒத்துக்கொள்வதற்கு இன்னும் சில பத்தாண்டுகள் அவசியமாக இருந்தன.

சக்திகளின் சமநிலை சோஷலிசத்துக்குச் சாதகமாக இருப்பது தெளிவான பிறகுதான்

அது நடைபெற்றது. சோஷலிஸ்ட் நாடுகள் வலிமையாகவும் பலமாகவும் இருக்கின்றன என்பதை முதலாளித்துவ நாடுகள் கண்கூடாகப் பார்த்தன. முதலாளித்துவத்தின் நிலைகள் மேலும் பலவீனமடைந்தன.

அரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகள் சமாதானமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று சமாதான சகவாழ்வுக் கோட்பாடு வலியுறுத்து கிறது. அது பகை நடவடிக்கைகளையும் ''பதட்ட நிலைமையையும்'' கைவிடுவதை, பரஸ்பர நம்பிக்கை மற்றும் எல்லா மட்டங்களிலும் உறவுகளை வளர்ப்பதை முன்னனுமானிக்கிறது. ''சர்வதேசத் தகராறுகளைத் தீர்ப்பதற்கு யுத்தம் ஒரு வழி என்பதைக் கைவிட்டு, பேச்சு வார்த்தைகளின் மூலம் அவற்றைத் தீர்த்தல்; அரசுகளுக்கு இடையில் சமத்துவம், பரஸ்பரம், புரிந்து கொள்ளுதல் மற்றும் நம்பிக்கை; ஒவ் வொருவரது அக்கறைகளையும் மதித்தல்; உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத் தல்; தம்முடைய நாட்டின் எல்லாப் பிரச்சினை களையும் தாமே தீர்ப்பதற்கு ஒவ்வொரு மக்களினத்துக்கும் உரிமையை அங்கீகரித்தல்; எல்லா நாடுகளின் அரசுரிமை மற்றும் பிரதேச ஒற்றுமையைக் கண்டிப்பாக மதித்தல்; பரி பூரண சமத்துவம் மற்றும் பரஸ்பர நன்மை யின் அடிப்படையில் பொருளாதார, கலாசார ஒத்துழைப்பை ஊக்குவித்தல்''* ஆகியவற்றை

---

* *The Road to Communism,* Foreign Languages House, Moscow, 1962, p. 506.

சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகள் குறிக்கின்றன.

சமாதான சகவாழ்வை ஏற்றுக்கொள்வதென்றால் சர்வதேச உறவுகள் பரஸ்பரம் புரிந்துகொள்ளுதல் மற்றும் ஒத்துழைப்பின் அடிப்படையில் யுத்தம் இல்லாமல் நடத்தப்பட வேண்டும் என்று ஒத்துக்கொள்வதாகும்.

சமாதான சகவாழ்வு இரு உலகங்களுக்கு இடையில் எதிர்ப்பை அகற்றிவிடாது என்பதை சோஷலிஸ்ட் நாடுகள் புரிந்து கொண்டிருக்கின்றன, ஏனென்றால் வளர்ச்சியின் புறநிலையான வரலாற்று விதிகளை மாற்றவோ அல்லது முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளை ஒழிக்கவோ முடியாது. பதட்ட நிலைத் தணிவும் சமாதான சகவாழ்வும் அரசுகளுக்கு இடையிலான உறவுகள் சம்பந்தப்பட்டவை. நாடுகளுக்கு இடையில் ஏற்படுகின்ற தகராறுகளையும் மோதல்களையும் யுத்தத்தின் மூலமாக, பலாத்காரத்தை உபயோகித்து அல்லது அப்படி உபயோகிக்கப் போவதாக பயமுறுத்தித் தீர்க்கக் கூடாது. பதட்ட நிலைத் தணிவு வர்க்கப் போராட்டத்தின் விதிகளை மிகச் சிறிதளவுகூட ஒழிக்க வில்லை. அதனால் ஒழிக்கவோ அல்லது மாற்றவோ முடியாது. பதட்ட நிலைத் தணிவின் பலனாக கம்யூனிஸ்டுகள் முதலாளித்துவச் சுரண்டலை ஒத்துக்கொள்வார்கள் அல்லது ஏகபோகவாதிகள் புரட்சியின் ஆதரவாளர்களாக மாறுவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கக் கூடாது.

ஒரே சமயத்தில் ஒத்துழைப்பும் போட்டியுமா? ஆம். ஒரே சமயத்தில் இரண்டும் நடைபெறுவது சாத்தியம், தவிர்க்க முடியாததும் கூட; ஏனென்றால் சர்வதேச உறவுகள் எனப் படுபவை மிகவும் சிக்கலான பன்முகமான சமூக வாழ்க்கைத் துறையாகும். போட்டியிடுபவர்கள் போராட்டத்தின் மெய்யான நிலைமைகளை மதிப்பீடு செய்து பேரழிவை ஏற்படுத்துகின்ற யுத்தத்தைக் காட்டிலும் சமாதானத்தைத் தேர்ந் தெடுத்த பல உதாரணங்களை வரலாற்றில் பார்க்க முடியும். புறநிலையான சந்தர்ப்பங் களும் சக்திகளின் தனிவகையான சமநிலை யும் எப்பொழுதுமே நிர்ணயிக்கின்ற கூறாக இருந்திருக்கின்றன என்பது உண்மையே. பகைமைத் தரப்புகள் போராட்டம் எப்படி நடைபெற வேண்டும், ஆயுதங்கள் எந்த அளவில் உபயோகிக்கப்பட வேண்டும், இதர வைகளைப் பற்றி உடன்பாட்டுக்கு வந்த உதாரணங்கள் வரலாற்றில் ஏராளமாக இருக் கின்றன. சமீபத்திய பத்தாண்டுகளில் ஆயுதங் களின் தன்மை மற்றும் அளவைப் பற்றிப் பல சர்வதேச ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருக் கின்றன. அணு ஆயுதப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவதைப் பற்றிய ஒப்பந்தம், பல்வேறு ஊடகத்தில் அணு ஆயுதங்களைச் சோதனை யிடுவதைத் தடை செய்கின்ற ஒப்பந்தம், கிரு மிகளை உபயோகிப்பதைக் தடை செய்கின்ற ஒப்பந்தம் மற்றும் இதரவை இவற்றில் சில வாகும்.

வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளுக்கு இடையில் சமாதான சகவாழ்வு அவற்றின் உள்ளீடான தன்மையை மாற்றுவதில்லை; ஆனால் இரண்டு சமூக அமைப்புகளும் போட்டியிடுவதற்குரிய, பிற்போக்கு சக்திகளுக்கும் முற்போக்கு சக்திகளுக்கும் இடையில் போராட்டம் நடைபெறுவதற்குரிய புதிய வெளிப்புற நிலைமைகளைத் தோற்றுவிக்கிறது.

1970க்களில் பதட்ட நிலைத் தணிவில் ஏற்பட்ட முன்னேற்றம் சோஷலிசம் முன்னேறித் தாக்குகிறது என்ற உண்மையைப் பிரதிபலித்தது. ஆனால் அதன் காரணத்தால் தான் ஏகாதிபத்திய இராணுவ வெறி கொண்ட பிற்போக்கு வட்டாரங்கள் அக்காலத்தில் ஏற்பட்ட ஆக்கமுறையான தீர்மானங்களைக் குலைத்தன.

முதலாளி வர்க்க அரசியல்வாதிகள் தங்கள் நிலைகளை இயன்ற அளவுக்கு வலுப்படுத்துவதற்கும் அதே சமயத்தில் சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் சோஷலிசத்தை பலவீனப்படுத்துவதற்கும் பதட்ட நிலைத் தணிவை உபயோகித்துக் கொள்கிறார்கள் என்பதைக் கம்யூனிஸ்டுகள் நன்றாக அறிவார்கள். சமாதான சகவாழ்வை ஒத்துக்கொள்ளும்படி முதலாளி வர்க்க அரசியல்வாதிகள் நிர்ப்பந்திக்கப்பட்டாலும் இந்தப் புதிய நிலைமையில் சோஷலிஸ்ட் அமைப்பை அரித்தழிக்க உதவுகின்ற செயல்தந்திரத்தை அவர்கள் எப்பொழுதுமே தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக, மேற்கு ஜெர்மனியின் சான்சலராக இருந்த கோன்ரட் அடினாவரின் ஆலோசகரும் தலைமையான கம்யூனிஸ்ட் எதிர்ப்புத் தத்துவவாதிகளில் ஒருவருமான வில்ஹெல்ம் கிரேவே ‘‘பதட்ட நிலைத் தணிவு என்பது முடிவாக நோக்கங்களையும் முறைகளையும் மாற்றிக் கொள்கின்ற இடைக் காலத்தின் வெளியீடு, அதாவது கிழக்கு ஐரோப்பாவைக் கம்யூனிஸ்ட் ஆட்சியிலிருந்து வேகமாக விடுவிக்கின்ற எல்லா முயற்சிகளையும் நிராகரிப்பதாகும். இது கிழக்கு ஐரோப்பாவில் உள் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற நீண்ட கால நிகழ்வுப் போக்குகளை நோக்கிய திசையமைவைக் குறிக்கிறது. அக்கால்கட்டத்தில் இந்த அரசுகளின் சமூக-பொருளாதார அமைப்புகளைப் படிப்படியாக மாற்றியமைக்கின்ற விதத்தில் தாக்கம் செலுத்த முடியும்’’* என்று எழுதினார்.

ஏகாதிபத்தியம் தன்னிடமுள்ள ஒவ்வொரு வழியையும் உபயோகித்து உலக சோஷலிசத்துக்கு எதிராகப் போராடி உலகெங்கிலும் இன்றைய சோஷலிசத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்குக் கடுமையான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறது. சர்வதேச உழைப்புப் பிரிவினை மற்றும் பரஸ்பர சாதகமான ஒத்துழைப்பின் நலன்களுக்குச் சிறந்த முறையில் உதவுகின்ற சோஷலிஸ்ட் நாடுகளுடன் பொருளாதார உறவுகளை அது தடுக்கிறது. ஏகாதி

---

* W. Grewe, *Spil der Kräfte in der Weltpolitik*, Düsseldorf, 1970, S. 614.

பத்தியவாதிகள் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு மற்றும் சோஷலிஸ்ட் வாழ்க்கை முறையைப் பொய்ப்பித்தலை அடிப்படையாகக் கொண்ட சித்தாந்த யுத்தத்தை சோஷலிஸ்ட் நாடுகளுக்கு எதிராக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சமீப வருடங்களாக, சோஷலிஸ்ட் நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்ற போலியான வாதத்தைக் கூறி மிகவும் ஆத்திரமூட்டுகின்ற அவதூறுப் பிரச்சார இயக்கத்தை அவர்கள் நடத்தி வருகிறார்கள். முதலாளித்துவ நாடுகளில் மனித உரிமைகள் படுமோசமான முறையில் மீறப்படுவதையும் முதலாளித்துவக் கொடுமைகளையும் மற்றவர்கள் பார்த்து விடாதபடி கவனத்தைத் திருப்புவது இந்தப் பிரச்சார இயக்கத்தின் நோக்கம்.

ஏகாதிபத்திய சித்தாந்திகள் தம் கம்யூனிஸ்ட் எதிர்ப்புப் பிரச்சாரத்துக்கு உண்மை என்ற வெளிப்பூச்சுப் பூசுவதற்காக சோஷலிசத்தின் சாதனைகளில் சிலவற்றை ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால் இவையும் கூட அதன் குறைகளையும் பாவச்செயல்களையும் பற்றிய பொய்கள், ஊகங்களுடன் சேர்த்துச் சொல்லப்படுவதால் நன்மைகள் அனைத்தும் மறைந்து விடுகின்றன. முதலாளித்துவப் பிரச்சாரம் சோஷலிச சமூகத்தை ''அபிவிருத்தி'' செய்ய, ''சீர்திருத்தம்'' செய்ய உதவுவதாகப் பாசாங்கு செய்வதன் மூலம் சோஷலிச எதிர்ப்பை மூடி மறைக்க முயற்சி செய்கிறது. சோஷலிசத்தை உள்ளேயிருந்து ''நயப்படுத்துவதும்'' ''அழிப்

பதும்'' இந்தத் தந்திரத்தின் நோக்கமாகும். அதே சமயத்தில் சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் வேற்றுமைகளை விதைப்பதற்கு, ஒன்றுக்கொன்று எதிராக நிறுத்துவதற்கு ஏகாதிபத்தியம் தன்னாலியன்ற எல்லாவற்றையுமே செய்கிறது. சோஷலிஸ்ட் பொருளாதாரத்தின் மீது ஆயுதப் போட்டி என்ற பெருஞ்சுமையைத் திணித்து அதன் முதுகை நொறுக்குவதற்கு அது முயற்சி செய்கிறது.

சோஷலிஸ்ட் சமூகத்துக்கு மனச்சோர்வை ஏற்படுத்துவதற்கு முதலாளித்துவம் செய்கின்ற முயற்சிகள் தோல்வியுறுவது தவிர்க்க முடியாதது. ஏனென்றால் சோஷலிசத்தின் கீழ் முதலாளித்துவ உறவுகளும் கருத்தமைப்புகளும் வளர்ச்சியடைவதற்குரிய சமூக-பொருளாதார தளங்கள் இல்லை. சோஷலிஸ்ட் நாடுகள் சர்வதேச உழைப்புப் பிரிவினையை விரிவுபடுத்துவதில், பொருளாயத மற்றும் ஆன்மிகத் துறைகள் அளிக்கக் கூடிய மிகச் சிறந்தனவற்றைப் பரிவர்த்தனை செய்து கொள்வதில் அக்கறை கொண்டிருக்கின்றன என்பது உண்மையே. ஆனால் தம்முடைய உள்நாட்டு விவகாரங்களில் முதலாளித்துவத் தலையீடு இருக்காது என்ற உத்தரவாதத்தைத் தருகின்ற பரிவர்த்தனையை அவை விரும்புகின்றன. சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் போராட்டத்தின் போக்கைத் தனக்குச் சாதகமான முறையில் திருப்புவதற்கு முதலாளி வர்க்கம் எல்லா விதமான சித்தாந்தத் தந்திரங்களையும் கடைப்

பிடிக்கிறது. இது சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் வரலாற்று ரீதியான போட்டியில் சித்தாந்த உறவுகளை மென்மேலும் முக்கியமாகச் செய்கிறது.

வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்வு பாட்டாளி வர்க்கம் மற்றும் இதர முற்போக்கு சக்திகள் மத்தியில் சோஷலிஸ்ட் கருத்துக்களைப் பரப்புவதற்கும் வெவ்வேறு நாடுகளில் தொழிலாளர், இளைஞர், பெண்கள் மற்றும் இதர ஸ்தாபனங்களுக்கு இடையில் நெருக்கமான பிணைப்புகளை வளர்ப்பதற்கும் வாய்ப்புகளைத் தருகிறது. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில் சோஷலிஸ்ட் மற்றும் முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் மத்தியில் உறவுகளை வளர்ப்பதற்கு நிலைமைகள் மிகவும் சாதகமாக இருக்கின்றன.

முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த பிற்போக்கு வட்டாரங்கள் சமாதான சகவாழ்வுக் கொள்கையைத் தீவிரமாக எதிர்ப்பதற்கும் சர்வதேச ரீதியில் பதட்ட நிலையை ஏற்படுத்துவதற்கும் ஆயுத பலத்தைக் காட்டி அச்சுறுத்துவதற்கும் காரணம் இதுவே.

சோஷலிஸ்ட் மற்றும் முதலாளித்துவ நாடுகளுக்கு இடையில் பொருளாதார உறவுகள் விரிவடைவதன் மூலம் வேலை வாய்ப்புகள் அதிகரிப்பது முதலாளித்துவப் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற நெருக்கடிகளினால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு உதவுகிறது.

லெனின் பாரம்பரியத்துக்கு விசுவாசமாக இருக்கின்ற சோஷலிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் இன்னொரு உலக யுத்தத்தைத் தடுப்பதுடன் எக்காலத்துக்கும் யுத்தங்களை ஒழிப்பதே வெளி நாட்டுக் கொள்கையின் தலைமையான நோக்கம் என்று கருதுகின்றன.

சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் லெனினுடைய கோட்பாடுகளினால் வழிகாட்டப் பட்ட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸ் (1971) சமாதானத் திட்டத்தைத் தயாரித்து உலகத்துக்கு அறிவித்தது. அது வெவ்வேறு சமூகங்களைக் கொண்ட அரசுகளுக்கு இடையில் பதட்ட நிலையைத் தணிப்பதற்கும், சோவியத் யூனியன் மற்றும் இதர சோஷலிஸ்ட் நாடுகளின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் உலக அரங்கில் சிறப்பான முறையில் உதவி செய்த சோவியத் யூனியனுடைய விரிவான நடவடிக்கைகளுக்கு அடிப்படையை அமைத்தது.

சமாதானத் திட்டத்தில் பின்வரும் நோக்கங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன:

—சகோதர சோஷலிஸ்ட் நாடுகளின் ஒற்றுமையைத் தொடர்ச்சியாக வலுப்படுத்தி புதிய சமூகத்தை நிர்மாணிப்பதில் அவற்றுக்கிடையில் பல்துறையான ஒத்துழைப்பை வளர்த்து சமாதானத்தை பலப்படுத்துவதில் அவற்றின் கூட்டுப் பங்களிப்பை அதிகப்படுத்துதல்;

—உலகத்தைப் பயமுறுத்துகின்ற அதிகரிக்கும்

ஆயுதப் போட்டியை முடிவுக்குக் கொண்டுவரு வதற்கும் இன்றைக்கிருக்கும் ஆயுதங்களைக் குறைப்பதைத் தொடங்குவதற்கும் படைக்கலைப் புக்கும் போராடுதல்;

—சமாதானத்தை நேசிக்கின்ற அரசுகள் இன் னும் இருக்கின்ற யுத்தத்தின் தோற்றுவாய்களை அகற்றுவதற்குத் தீவிரமாகப் பாடுபடும்படி செய்வதுடன், எல்லாவற்றுக்கும் முதலாவதாக மத்திய கிழக்கில் நியாயமான, நிரந்தரமான சமாதான உடன்பாட்டை ஏற்படுத்துதல்;

—சர்வதேச ரீதியில் பதட்ட நிலைத் தணிவை ஆழப்படுத்துவதற்கும் அரசுகளுக்கிடையில் பரஸ் பர அனுகூலமான ஒத்துழைப்பின் ஸ்தூலமான வடிவங்களில் அதை அமுலாக்குவதற்கும் இயன்ற அனைத்தையும் செய்தல்; ஐரோப்பாவில் பாது காப்பு மற்றும் ஒத்துழைப்பு மாநாட்டின் இறுதி ஆவணத்தை முழுமையாக அமுல்நடத்துவதற் குரிய கொள்கையை சுறுசுறுப்பாகப் பின்பற்று தல்;

—ஆசியாக் கண்டத்திலுள்ள எல்லா நாடு களின் கூட்டு முயற்சிகளின் மூலம் ஆசியா வில் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற கொள் கையைக் கடைப்பிடித்தல்;

—சர்வதேச உறவுகளில் பலாத்காரத்தை உபயோகிக்காதிருப்பதைப் பற்றி உலக ஒப்பந் தம் ஏற்படுவதற்கு முயற்சி செய்தல்;

—காலனியாதிக்க அமைப்பின் எச்சங்களை, தேசங்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் மீறுவதை, காலனியாதிக்கம் மற்றும் இனவெறிப்

பீடங்களை முழுமையாக அகற்றுவதை முக்கிய மான சர்வதேசக் கடமையாகக் கருதுதல்;

—சர்வதேச வர்த்தகத்தில் வேறுபாட்டையும் செயற்கையான தடைகளையும் சர்வதேசப் பொருளாதார உறவுகளில் சமத்துவமின்மை, நிர்ப்பந்தம் மற்றும் சுரண்டலின் எல்லா வெளிப் பாடுகளையும் அகற்றுவதற்குப் போராடுதல்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரசில் பிரகடனம் செய்யப்பட்ட சமாதானத் திட்டம் 1976இலும் 1981இலும் நடைபெற்ற 25வது மற்றும் 26வது காங்கிரஸ் களில் வளர்த்து செழுமைப்படுத்தப்பட்டது.

சோஷலிஸ்ட் நாடுகளின் வெற்றிகரமான வளர்ச்சி மற்றும் தேசிய சுதந்திரத்துக்கும் சமூக விடுதலைக்கும் தமது போராட்டத்தில் ஆப் பிரிக்கா, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்காவின் மக்களினங்களின் புதிய வெற்றிகள் ஆகிய முக்கியமான சர்வதேச நிகழ்ச்சிகளால் விளக்க மாகக் காட்டப்பட்ட காலகட்டத்தில் சோவியத் யூனியன் சோஷலிஸ்ட் நாடுகளின் சகோதரக் கட்சிகளின் ஆதரவுடன் தனது வெளிநாட்டுக் கொள்கையைச் செயல்படுத்தி வந்திருக்கிறது. சமாதானம், ஜனநாயகம் மற்றும் சமூக முன்னேற்றத்துக்குப் போராடுகின்ற சக்திகள் மாபெரும் சாதனைகளைப் பெற்றிருக்கின்றன.

அதே சமயத்தில், 1970க்களின் கடைசியில் ஆகப் பிற்போக்கான ஏகாதிபத்திய வட்டாரங் கள், ஆயுத உற்பத்தியாளர்கள், இராணுவ வெறியர்கள் மற்றும் ''கெடுபிடி யுத்த'' ஆதர

வாளர்கள் பதட்ட நிலைத் தணிவையும் படைக் கலைப்பையும் எதிர்த்து மாபெரும் இயக்கத்தை நடத்தினார்கள். ''சோவியத் அபாயம்'' என்று சொல்லப்படுவதைப் பற்றி எச்சரிக்கை செய்வதாகக் கூறிக்கொண்டு இன்னும் ஆயிரக்கணக்கான மில்லியன்களை இராணுவத்துக்காகச் செலவிட வேண்டும் என்று அவர்கள் கோரினார்கள். அவர்கள் தேசிய விடுதலை இயக்கத்தை நசுக்குவதற்கும் மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கும் முயற்சி செய்து வருகிறார்கள்.

சோஷலிஸ்ட் நிலைகள் பலமடைவதை, தேசிய விடுதலை இயக்கம் வெற்றியடைவதை, எல்லா ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளின் செல்வாக்கு அதிகரிப்பதைத் தடுப்பதற்கு ஏகாதிபத்தியம் முயற்சிப்பதால் அது மேலும் மூர்க்கமாகிக் கொண்டிருக்கிறது. முதலாளித்துவ அமைப்பின் பொது நெருக்கடி தீவிரமடைந்திருப்பதால், நிதி, சக்தி மற்றும் இதர துறைகளில் நெருக்கடிகள் வளர்ந்திருப்பதால், உழைக்கும் மக்கள் தம்முடைய உரிமைகளுக்கும் நலன்களுக்கும் நடத்துகின்ற போராட்டம் ஓங்கியிருப்பதால் ஏகாதிபத்தியம் மேலும் மூர்க்கமாகிக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள ஆளும் வட்டாரங்கள் முதலாளித்துவ உலகத்தின் மீது தம்முடைய தலைமையைப் பற்றி—ஏகாதிபத்திய முரண்பாடுகள் அதிகக் கூர்மையடைந்திருப்பதனாலும் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில் ஆபத்தான மாற்றங்கள்

மற்றும் தப்புக்கணக்குகளாலும் அது அரித்தழிக்கப்பட்டிருக்கிறது — கவலைப்படுவதும் மற்றொரு காரணமாகும்.

ஏகாதிபத்திய சக்திகள் ஆயுதப் போட்டியில் ஈடுபடுகின்ற பொழுதே சோவியத் எதிர்ப்பு, சோஷலிஸ்ட் எதிர்ப்பு இயக்கங்களை நடத்துகின்றன; சோவியத் வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றி, சோவியத் யூனியனுடைய ஆக்கிரமிப்பு என்று சொல்லப்படுவதைப் பற்றி கட்டுக்கதைகளை வெளியிடுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் சோஷலிஸ்ட் நாடுகள் சமாதானம், சுதந்திரம் மற்றும் முன்னேற்றத்தின் சக்திகளுடன் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கு, ஆக்கிரமிப்பு வட்டாரங்களின் திட்டங்களை சீர்குலைப்பதற்கு, பதட்ட நிலைத் தணிவு ஆழமடைவதற்கு, தங்கள் நாட்டு மக்கள் சமாதான உலகத்தில் வாழ்வதையும் பாடுபடுவதையும் உறுதி செய்வதற்குத் தம்மாலியன்ற அனைத்தையும் செய்கின்றன.

சோவியத் யூனியனின் 24—26வது காங்கிரஸ்கள் மற்றும் சகோதரக் கட்சிகளின் காங்கிரஸ்களில் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் ஒற்றுமை மற்றும் சர்வாம்ச ஒத்துழைப்பை பலப்படுத்துவதும் சமாதான முயற்சிகளை அதிகரிப்பதும் அவற்றின் வெளிநாட்டுக் கொள்கையின் தலைமையான நோக்கமாக இருக்கின்றன. சோஷலிஸ்ட் நாடுகளின் கூட்டு முயற்சிகள் அந்த நாடுகளின் நிலையை வலுப்படுத்துவதற்கும்

முக்கியமான வெளிநாட்டுக் கொள்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமான போராட்டத்தில் மாபெரும் வெற்றிகளை ஈட்டித்தந்திருக்கின்றன.

வியத்நாமிய மக்களின் வெற்றி வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். அவர்கள் சோவியத் யூனியன், சோஷலிஸ்ட் நாடுகள் மற்றும் உலகெங்கிலுமுள்ள முற்போக்குச் சக்திகளின் ஆதரவுடன் ஏகாதிபத்தியத்தையும் பிற்போக்குவாதத்தையும் முறியடித்துத் தங்கள் தாய்நாட்டை முழுமையாக விடுதலை செய்து ஒன்றுபடுத்தி இருக்கிறார்கள்.

கூட்டுப் போராட்டத்தின் விளைவாக சோஷலிஸ்ட் குடும்பம் உலகச் சம்பவங்களின் போக்கின் மீது அதிகமான தாக்கத்தைச் செலுத்துகிறது; அதன் ஒற்றுமை, ஒருமைப்பாடு, பரஸ்பர ஆதரவு பலமடைந்திருக்கின்றன; வெளிநாட்டுக் கொள்கையை ஒருங்கிணைப்பதற்கு முன்னிலும் விரிவான வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

உலகத்தில் சில பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கும் ஆபத்தான நிலைமைகளை மக்களுடைய சித்தப்படி தீர்ப்பதற்கும் அவை உலக சமாதானத்துக்கு ஏற்படுத்துகின்ற ஆபத்தை அகற்றுவதற்கும் சோவியத் யூனியனும் இதர சோஷலிஸ்ட் நாடுகளும் முரணில்லாமல் போராடிக் கொண்டிருக்கின்றன.

மத்திய கிழக்கில் யுத்தத்தின் தோற்றுவாயை அகற்றுவதற்கும் நிரந்தரமான சமாதான உடன்

பாட்டை ஏற்படுத்துவதற்கும் சோஷலிஸ்ட் நாடுகள் தொடர்ச்சியாகப் பாடுபட்டு வரு கின்றன. அவை இதன் தொடர்பாகச் சுறுசுறுப் பான அரசியல் முயற்சிகளில் ஈடுபட்டிருக் கின்றன. ஐக்கிய நாடுகள் சபையிலும் அதற்கு வெளியிலும் அராபிய மக்களின் நலன்களைப் பாதுகாத்து, இஸ்ரேலின் ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற அராபிய நாடுகளுக்கு நேரடியான உதவியளித்து, அவற்றின் பொருளா தார மற்றும் தற்காப்பு நிலைகளை வலுப்படுத்த உதவி செய்கின்றன.

மத்திய கிழக்குப் பிரச்சினையில் சமரச உடன்பாடுகளை எதிர்க்கின்ற அராபிய நாடு களின் நிலையை சோஷலிஸ்ட் நாடுகள் ஆதரிக் கின்றன. எவ்விதமான உடன்பாடும் விரிவான தாக இருக்க வேண்டும், அந்தப் பிரதேசத் திலுள்ள நாடுகள் மற்றும் மக்களினங்களின் நலன்களையும் சுதந்திரமாக இருப்பதற்கும் வளர்ச்சிக்கும் அவற்றின் உரிமையையும் கணக்கி லெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற முகப் புரைகளிலிருந்து அவை தொடங்குகின்றன. அதனால்தான் 1978இல் எகிப்தும் இஸ்ரேலும் செய்து கொண்ட தனி ஒப்பந்தத்தை அவை வன்மையாகக் கண்டனம் செய்தன. அந்த ஒப்பந்தம் மத்திய கிழக்கு மக்களின் நியாயமான உரிமைகளையும் நலன்களையும் புறக்கணித்தது. மத்திய கிழக்கில் சமாதானத்துக்கு எந்த விரி வான ஒப்பந்தமும் 1967இல் ஆக்கிரமித்த எல்லாப் பிரதேசங்களிலிருந்தும் இஸ்ரேலியத்

துருப்புகள் வெளியேறுதல், பாலஸ்தீனைச் சேர்ந்த அராபிய மக்கள் சொந்த அரசை அமைத்துக் கொள்ள உரிமையளிக்கப்படுதல், அப்பிரதேசத்தில் விதிவிலக்கு இல்லாமல் எல்லா அரசுகளுக்கும் சர்வதேசப் பாதுகாப்பு உத்தரவாதமளித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்று சோவியத் யூனியன் வற்புறுத்துகிறது. சில அராபிய நாடுகள் சோவியத் யூனியன் மற்றும் இதர சோஷலிஸ்ட் நாடுகள் மத்திய கிழக்கில் நியாயமான சமாதானத்தை முரணில்லாமல் வலியுறுத்துவதால் அவற்றுடன் பரஸ்பர அனுகூலமான ஒத்துழைப்பை விரும்புகின்றன.

1970க்களில் சோஷலிஸ்ட் நாடுகளுக்கும் புதிதாக விடுதலை அடைந்த நாடுகளுக்கும் இடையில் உறவுகள் கணிசமான அளவுக்கு விரிவடைந்து ஆழமடைந்தன.

சோஷலிஸ்ட் நாடுகள் ''ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம் மற்றும் புதிய காலனியாதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராக, ஆதிக்கம் மற்றும் ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களுக்கும் எதிராக மக்களினங்களது போராட்டத்துடன் தமது ஒருமைப்பாட்டைத் திரும்பவும் பிரகடனம் செய்கின்றன'' என்று 1978இல் வெளியிடப்பட்ட வார்சா உடன்படிக்கை நாடுகளின் அறிக்கை கூறியது.

''தேசிய விடுதலைக்காகப் போராடுகின்ற சக்திகளுக்கும் கடுமையான போராட்டத்தில் தாங்கள் விரும்புகின்ற சமூக வளர்ச்சிப் பாதையை

சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கின்ற உரிமை, தங்கள் நாடுகளின் பிரதேச ஒற்றுமை, தமது சுதந்திரம் மற்றும் அரசுரிமை உள்பட தம் விடுதலை மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்கின்ற விடுதலையடைந்த நாடுகளின் மக்களினங்களுக்கும் அவை ஆதரவு கொடுத்திருக்கின்றன, இன்னும் ஆதரவு கொடுக்கும்.

''சோஷலிஸ்ட் திசையமைவைக் கொண்ட இளம் அரசுகளுடன் எல்லாத் துறைகளிலும் நட்புறவுமிக்க ஒத்துழைப்பைத் தொடர்ந்து வளர்ப்பதற்கு உறுதி கொண்டிருப்பதை இந்த நாடுகள் மீண்டும் வலியுறுத்துகின்றன.''*

புதிதாக விடுதலையடைந்த ஆப்பிரிக்க நாடுகளுடன் உறவுகளை விரிவுபடுத்துவது மிகவும் முக்கியமானதென்று சோஷலிஸ்ட் நாடுகள் கருதுகின்றன. இந்த உறவுகள் விடுதலை, சுதந்திரம், தேசிய மற்றும் சமூக முன்னேற்றம், மெய்யான சமத்துவம், அரசுரிமை மற்றும் பிரதேச ஒற்றுமைக்கு மதிப்பளித்தல் ஆகியவற்றுக்காகப் போராடுகின்ற மக்களினங்களுடன் ஒருமைப்பாட்டின் மீதும் பரஸ்பரம் அனுகூலமான ஒத்துழைப்பின் மீதும் நிறுவப்பட்டிருக்கின்றன. ஆப்பிரிக்க அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் இராணுவ மற்றும் அரசியல் ரீதியில் தலையிடுவதை சோஷலிஸ்ட் நாடுகள் வன்மையாகக் கண்டனம் செய்கின்றன. ஆப்பிரிக்கக் கண்டத்தில் பதட்ட நிலையின் தோற்று

---

* Declaration of the Warsaw Treaty Member-Countries, *Moscow News,* Supplement to issue № 48, 1978.

வாய்கள் அகற்றப்பட வேண்டுமென்றும் சில ஆப்பிரிக்க அரசுகளுக்கு இடையிலுள்ள வேறு பாடுகள் இயன்ற அளவில் விரைவாகத் தீர்க்கப் பட வேண்டுமென்றும் அவை விரும்புகின்றன.

சோவியத் யூனியனும் மற்ற சகோதர நாடு களும் இனவெறி மற்றும் இன ஒதுக்கல் கொள் கையை அகற்றுவதற்கும் எஞ்சியுள்ள காலனி யாதிக்க ஆட்சிகளை அகற்றுவதற்கும் கூட்டாகப் பாடுபட்டு வருகின்றன. சோஷலிஸ்ட் திசை யமைவுப் பாதையைத் தேர்ந்தெடுத்த அங் கோலா மக்கள் குடியரசில் தலையீடு ஏற்பட்ட பொழுது அந்த நாட்டுக்கு உதவி செய்த முதல் நாடு சோவியத் யூனியனே. அங்கோலாவின் தேசபக்தர்களின் உறுதியும் சோவியத் யூனியன், கியூபா மற்றும் இதர சோஷலிஸ்ட் நாடுகளின் உதவியும் அங்கோலாவில் புதிய காலனியாதிக்க ஆட்சியை ஏற்படுத்துவதற்கு சர்வதேச ஏகாதி பத்தியத்தின் முயற்சியை முறியடித்தன. எத் தியோப்பியா தாக்கப்பட்ட பொழுது சகோதர சோஷலிஸ்ட் நாடுகள் அதற்கு முனைப்பாக உதவி செய்தன. அவை ஆப்பிரிக்காவின் தென் பகுதியில் மக்களினங்களின் போராட்டத்தைத் தீவிரமாக ஆதரிக்கின்றன, தேசிய விடுதலையை ஆதரித்தும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் போராடுகின்ற நாடுகளுடன் அவை ஒருமைப் பாட்டைக் கொண்டிருக்கின்றன.

ஆசியாவில் நிரந்தர சமாதானத்தையும், சுமுகமான அண்டை நாட்டு உறவுகளையும் ஏற்படுத்துவதற்கும் அங்கேயுள்ள பல நாடு

களுடன் பரஸ்பர அனுகூலமான உறவுகளை விரிவுபடுத்துவதற்கும் சோஷலிஸ்ட் நாடுகள் தம்மாலியன்ற எல்லாவற்றையும் செய்து வருகின்றன. ஆசியாவில் சர்வதேச உறவுகளை வலுப்படுத்துவதில் சோவியத்-இந்திய ஒத்துழைப்பு கேந்திரமான பாத்திரத்தை வகிக்கிறது. சோவியத்-இந்திய நட்புறவு காலத்தின் சோதனையில் வெற்றி பெற்றுவிட்டது, அது அரசியல் மாறுபாடுகளைப் பொறுத்ததல்ல, ஆசியாவிலும் உலக முழுவதிலும் சமாதானத்துக்கும் ஸ்திர நிலைமைக்கும் அது முக்கியமான காரணியாக இருக்கிறது என்று இரு நாடுகளும் பன்முறை சுட்டிக்காட்டியுள்ளன.

சோவியத் யூனியனும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளும் தேசிய ஜனநாயகப் புரட்சியின் சாதனைகளைப் பாதுகாப்பதற்குப் போராடி வருகின்ற ஆப்கான் மக்களுக்கு உறுதியான ஆதரவளிக்கின்றன. 1979இல் ஆப்கான் அரசாங்கம் பன்முறை கேட்டுக்கொண்டதன் பேரில் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானுக்குக் குறைந்த எண்ணிக்கையில் துருப்புகளை அனுப்பியது. எதிர்ப்புரட்சி சக்திகளை எதிர்த்து ஆப்கான் மக்கள் நடத்துகின்ற போராட்டத்தில் இந்தத் துருப்புகள் பங்கெடுக்கின்றன.

புதிதாக விடுதலையடைந்த நாடுகள் தம் தேசியச் செல்வத்தைத் தாம் சரியெனக் கருதுகின்ற முறையில் செலவிட விரும்புவது நியாயமானது, தர்க்க ரீதியானது. சோஷலிஸ்ட் நாடுகள் இந்த விருப்பத்தை ஆதரிக்கின்றன. எல்லா

நாடுகளின் நலன்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டு சர்வதேசப் பொருளாதார உறவு கள் ஜனநாயகமான, நியாயமான அடிப்படை யில் புனரமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக் கையை அவை ஆதரிக்கின்றன. வளர்முக நாடு களுடன் உள்ள உறவுகளில் சோஷலிஸ்ட் நாடு கள் சிஎம்இஏ நாடுகளுக்கிடையில் ஏற்கப்பட்ட புதிய ரகப் பொருளாதார உறவுகளின் அடிப் படையாக இருந்த பிரதான கோட்பாடுகளைப் பின்பற்றுகின்றன.

சோஷலிஸ்ட் நாடுகள் ஐரோப்பாவில் சமா தானம், பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பை உறுதிப்படுத்துவதை தம்முடைய முக்கிய கடமை களில் ஒன்றாகக் கருதுகின்றன. சோவியத் யூனியனும் மற்ற சோஷலிஸ்ட் அரசுகளும் செய்த இடைவிடாத முயற்சிகள் ஐரோப்பா வில் பதட்ட நிலைத் தணிவு மற்றும் சமா தானத்தை நோக்கி திருப்பத்தை ஏற்படுத்து வதில் தீர்மானகரமான பாத்திரத்தை வகித் தன. ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு மாநாடு 1975இல் ஹெல்சிங்கியில் நடைபெற்றது. 33 ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் கானடாவும் பங்கெடுத்த இம்மா நாடு ஒரு வெற்றி என்று கூற வேண்டும். மாநாட்டில் கலந்து கொண்ட எல்லா நாடுகளும் கையொப்பமிட்ட இறுதி ஆவணம் எதிர்கால உறவுகள் சமாதான சகவாழ்வுக் கோட்பாடு களின் அடிப்படையில் நிறுவப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது; பொருளாதாரம்,

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல், கலாசாரம் மற்றும் புறச்சூழல் பாதுகாப்புத் துறைகளில் ஒத்துழைக்கக் கூடிய ஸ்தூலமான வடிவங்களை எடுத்துக் கூறியது. சோவியத் யூனியனும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளும் ஹெல்சிங்கி உடன்பாடுகளின் வழிகாட்டுதலின்படி ஐரோப்பாக் கண்டத்தில் பரஸ்பரம் புரிந்து கொள்ளுதல் மற்றும் நல்ல அண்டை நாட்டு உறவுகள் ஏற்படுவதை வன்மையாக ஆதரிக்கின்றன.

சோவியத் யூனியனுக்கும் பிரான்சுக்கும் இடையில் நல்லுறவு ஐரோப்பாவில் ஒத்துழைப்பின் முக்கியமான பகுதியாக இருக்கிறது. சோவியத்-பிரெஞ்சு உச்சகட்டக் கூட்டங்களின் விளைவாகச் சில உடன்படிக்கைகள் ஏற்பட்டிருக்கின்றன: அரசியல் ஆலோசனைகளைப் பற்றிய ஆவணம் (1970), சோவியத் யூனியனுக்கும் பிரான்சுக்கும் இடையில் ஒத்துழைப்புக் கோட்பாடுகள் (1971), பதட்ட நிலைத் தணிவு மற்றும் சமாதானத்தை ஆதரித்து சோவியத் யூனியனுக்கும் பிரான்சுக்கும் இடையில் ஒத்துழைப்பு மேலும் வளர்ச்சியடைவதற்குரிய செயல் திட்டம் (1979) மற்றும் இதரவை. இவை பரஸ்பர பொருளாதார உறவுகளை வளர்ப்பதற்கும் அரசியல் ஒத்துழைப்பைப் பெருக்குவதற்கும் தக்க நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

சோவியத் யூனியனுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் இடையிலுள்ள உறவுகள் ஐரோப்பாவில்

ஸ்திர நிலைமையை ஏற்படுத்துகின்ற முக்கிய மான கூறுகளில் ஒன்றாக ஆகியுள்ளன. இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு பற்றி சில உடன்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. 1977இல் சோவியத் யூனியனுடன் வர்த்தகம் செய்த முதலாளித்துவ நாடுகளில் மேற்கு ஜெர்மனி முதலிடத்தைப் பெற்றது. இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார உறவுகளின் விரிவான வளர்ச்சி—இந்த நூற்றாண்டின் கடைசி வரை நீடிக்கின்ற நெடு நோக்கு வாய்ப்பு உள்பட—உத்தேசிக்கப்படுகிறது. அதே சமயத்தில் மேற்கு ஜெர்மனிக்கும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளுக்கும் இடையிலும் பொருளாதார உறவுகள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. 1970க்களில் நிறைவேற்றப்பட்ட உடன்பாடுகளைக் கண்டிப்பாகவும் முழுமையாகவும் பின்பற்ற வேண்டுமென்று சோவியத் யூனியன் முரணில்லாமல் பாடுபடுகிறது.

அதோடு மேற்கு ஜெர்மனி சில சமயங்களில் மேற்கு பெர்லினைப் பற்றிய நான்கு-தரப்பு உடன்படிக்கையை மீறுகிறது, சில பிரச்சினைகளில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் அரசுரிமையை அலட்சியப்படுத்துகிறது என்று சோவியத் யூனியன் சுட்டிக் காட்டியிருக்கிறது.

1970க்களில் சோஷலிஸ்ட் நாடுகளுக்கும் கிரேட் பிரிட்டன், இத்தாலி, பின்லாந்து, ஆஸ்திரியா, ஸ்வீடன், பெல்ஜியம், லக்ஸம்பர்க், டென்மார்க் முதலிய ஐரோப்பிய நாடுகளுக்கும்

இடையில் உறவுகள் வெற்றிகரமாக வளர்ச்சி யடைந்தன.

உதாரணமாக, நடுநிலை நாடாகிய ஆஸ் திரியா எல்லா ஐரோப்பிய சோஷலிஸ்ட் நாடு களுடனும் தீவிரமான நல்லுறவுகளையும் ஒத் துழைப்பையும் கொண்டிருக்கிறது. சுதந்திர மற் றும் ஜனநாயக ஆஸ்திரியாவை மறுபடியும் ஏற்படுத்துகின்ற அரசு ஒப்பந்தம் 1955இல் முடிவு செய்யப்பட்ட பிறகு ஆஸ்திரியா சோஷ லிஸ்ட் நாடுகளுடன் பொருளாதார, விஞ்ஞான, கலாசார மற்றும் இதர துறைகளில் 230க்கும் அதிகமான ஒப்பந்தங்களையும் உடன்படிக்கை களையும் செய்திருக்கிறது.

மற்றொரு யுத்த அபாயத்தைக் குறைப் பதற்கு சோவியத்-அமெரிக்க உறவுகள் பிர தான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. 1970க்களின் ஆரம்பத்தில் சோவியத்-அமெரிக்க உறவுகளில் அபிவிருத்தி ஏற்பட்டது; பல துறை களிலும் உறவுகள் கணிசமான அளவுக்கு வளர்ச்சி யடைந்தன; ஐம்பதுக்கும் அதிகமான ஒத்து ழைப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. ஆனால் அமெரிக்காவில் பிற்போக்கு வட்டாரங் கள் சகஜமான ஒத்துழைப்புக்குத் தடையாக இருக்கின்றன. அவை ''சோவியத் அபாயம்'' என்ற கட்டுக்கதையைப் பரப்பி வருகின்றன; சோவியத் யூனியனுடைய உள்நாட்டு விவகாரங் களில் தலையிடுவதற்கும் அதன் சர்வதேச நிலைகளை பலவீனப்படுத்துவதற்கும் முயற்சி களைச் செய்து கொண்டிருக்கின்றன.

இராணுவத் துறையில் பதட்ட நிலைத் தணிவு ஏற்படுவது ஐரோப்பாவில் சமாதானத் தையும் பாதுகாப்பையும் வலுப்படுத்துவதற்கு மிகவும் அவசியம் என்று சோஷலிஸ்ட் நாடுகள் கருதுகின்றன. இராணுவ எதிர்நிலையின் அள வைக் குறைப்பதற்கு அவசியமான நடவடிக்கை களைப் பற்றி மேற்கு நாடுகளுடன் உடன் பாட்டுக்கு வருவதற்கு அவை இடைவிடாது முயற்சி செய்கின்றன.

ஐரோப்பிய மாநாட்டில் பங்கெடுத்த நாடு கள் அடுத்த நாட்டுக்கு எதிராக முதலில் அணு ஆயுதங்களை உபயோகிக்க மாட்டோம் என்று அறிவிக்க வேண்டும் என்று வார்சா உடன்படிக்கை நாடுகள் ஆலோசனை கூறின. அணு ஆயுதங் களை முதலில் உபயோகிக்கப் போவதில்லை என்று சோவியத் யூனியன் அறிவித்தது. மற்ற முக்கியமான பிரேரணைகள் முன்வைக்கப் பட்டன.

ஆனால் அமெரிக்காவும் ''நாட்டோ'' விலுள்ள அதன் கூட்டாளிகளும் இன்றைக் கிருக்கின்ற சக்திகளின் நிலையை மாற்றுகின்ற வழியைப் பின்பற்றுவதால் இப்பிரேரணைகளை நிராகரித்ததுடன் சில மேற்கு ஐரோப்பிய நாடு களில் புதிய நடுத்தர ஏவுகணைகளை வைத்து ஐரோப்பாவில் நிலைமையை மிகவும் ஆபத்தாக் கின.

ஆயுதப் போட்டிக்கு முடிவு கட்டுவதற்காக வும் படைக்கலைப்புக்காகவுமான போராட்டம் என்ற கடமை முன்னெப்போதையும் காட்டிலும்

இன்று அதிகமாகக் கூர்மையடைந்திருக்கிறது. ஏகாதிபத்தியம் மிகவும் வேகமாக யுத்தத் தயாரிப்புகளைச் செய்து கொண்டிருக்கிறது. ஆயுதப் போட்டி முன்னெப்போதுமில்லாத அளவை மெய்யாகவே எட்டிவிட்டது. சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மிகவும் அவசிய மான பல நூறு பில்லியன் டாலர்கள் தொ கையை மனிதகுலம் அதற்குச் செலவிடுகிறது. மிகவும் ஆபத்தான ஆயுதங்கள் ஏராளமாகச் சேமிக்கப்பட்டிருக்கின்றன; அவை தொடர்ச்சி யாக நவீனப்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப் படுகின்றன. குண ரீதியில் புதிய ரக ஆயுதங் கள் தயாரிக்கப்படுகின்றன; எதிர்காலத்தில் அவற்றைக் கட்டுப்படுத்துவது இயலாத காரியம் என்று சொல்ல முடியாதென்றாலும் மிகவும் கடினமான காரியமே.

ஆயுதப் போட்டியைக் குறைக்கின்ற சோஷ லிஸ்ட் அரசுகளின் கொள்கையை ஏகாதி பத்தியம் பிடிவாதமாக எதிர்க்கிறது. சர்வதேச உறவுகளில் ஆயுத பலத்தை உபயோகிக்கா திருப்பதைப் பற்றி உலக ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்றும் ஐரோப்பியப் பாதுகாப்பு மாநாட்டின் இறுதி ஆவணத்தில் கையெழுத் திட்ட எல்லா நாடுகளும் மற்றொரு நாட்டுக்கு எதிராக முதலில் அணு ஆயுதங்களை உப யோகிப்பதில்லை என்று உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்றும் சோவியத் யூனியன் செய்த ஆக்கபூர்வமான பிரேரணைகளை ‘‘நாட் டோ’’ நாடுகள் நிராகரித்திருக்கின்றன.

மேற்கு நாடுகளின் படைக்கலைப்புக் கொள்கை போர்த்திட்ட தாக்குதல் ஆயுதங்களைக் கட்டுப் படுத்துவதற்கான சோவியத்-அமெரிக்கப் பேச்சு வார்த்தைகளின் போதும் மத்திய ஐரோப்பா வில் ஆயுதங்கள் மற்றும் படைகளைக் குறைப் பதைப் பற்றிய வியென்னா பேச்சுவார்த்தை களின் போதும் தெளிவாயிற்று. போர்த்திட்ட ஆயுதங்களைக் கட்டுப்படுத்துகின்ற முதல் உடன்படிக்கை 1972இல் கையெழுத்திடப் பட்டது; இன்னொரு உடன்படிக்கை சீக்கிரத் தில் கையெழுத்திடப்படும் என்று அப்பொழுது கொள்கையளவில் ஒத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் அமெரிக்க நிர்வாகம் பேச்சுவார்த்தை களை ஒத்திப்போடத் தொடங்கியது, ஆயுதக் குறைப்புக்கு முற்றிலும் சம்பந்தமில்லாத கோரிக்கைகளைக் கூட சோவியத் யூனியன் ஒத்துக்கொள்வதுடன் பேச்சுவார்த்தைகளை இணைப்பதற்கு முயற்சி செய்தது.

சோஷலிஸ்ட் நாடுகள் சர்வதேச ஒப்பந்தங் களை அடிப்படையாகக் கொண்டு படைக் கலைப்புக்குப் போராடுகின்றன. சோவியத் யூனியன் மற்றும் இதர சோஷலிஸ்ட் நாடு களின் இடைவிடாத முயற்சிகளும் சமாதான சக்திகளின் நடவடிக்கைகளும் ஆயுதப் போட்டி யைக் கட்டுப்படுத்தும் துறையில் முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இப் பொழுது கிருமிகளை உபயோகிப்பதையும் புறச்சூழலை இராணுவ ரீதியாக உபயோகிப் பதையும் தடை செய்கின்ற உடன்பாடுகள்

அமுலில் இருக்கின்றன. அணு ஆயுதங்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற திசையில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. லத்தீன் அமெரிக்காவின் பெரும்பகுதி முதல் அணு ஆயுதமில்லாத பிரதேசமாக அறிவிக்கப் பட்டிருப்பது இதை ஊக்குவித்திருக்கிறது. அணு ஆயுத பலத்தைப் பெற்றிராத அரசுகளுக்குப் பாதுகாப்பு உத்தரவாதங்கள், அணு ஆயுதங் களை உற்பத்தி செய்யாத நாடுகளில் அவற்றை வைப்பதைத் தடை செய்தல் ஆகியவை பற்றி சோவியத் பிரேரணைகளை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அங்கீகரித்தது; அணு ஆயுதங் களின் உற்பத்தியை முழுமையாகத் தடை செய்வதைப் பற்றியும் அவற்றைக் குறைப் பதைப் பற்றியும் அணு ஆயுத வல்லரசுகள் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும் என்று அறைகூவியது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மற் றும் சோவியத் அரசின் வெளிநாட்டுக் கொள்கை சகோதர சோஷலிஸ்ட் நாடுகள் மற்றும் புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் முயற்சிகளுடன் இணைந்து தற்கால சர்வதேச வாழ்க்கையில் ஆக்கரீதியான போக்குகளை ஊக்குவிக்கிறது; சமாதானம், விடுதலை மற்றும் சுதந்திரத் துக்கு எதிராக ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடை செய்கிறது.

# 4. சோஷலிஸ்ட் நாடுகளும் விடுதலை இயக்கமும்

மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியும் உலகத்தின் முதல் சோஷலிஸ்ட் அரசின் தோற்றமும் உலக முழுவதிலும் சமூக முன்னேற்றத்துக்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்தின. தேசிய விடுதலை இயக்கம் சோஷலிஸ்ட் சக்திகளின் உண்மையான ஆதரவைப் பெற்றது.

சோஷலிஸ்ட் நாடுகளின் குடும்பம் ஏற்பட்டவுடன் சமாதானம், ஜனநாயகம், தேசிய சுதந்திரம் மற்றும் சோஷலிசத்துக்கு ஆதரவாக உலக நிலைமையின் மீது தாக்கம் செலுத்துவதற்கு அதிகமான வாய்ப்புகள் இப்புதிய சமூக அமைப்புக்குக் கிடைத்தன. இந்நாடுகளின் பொருளாதாரம் வலுப்படுவதும் வளர்ச்சியடைவதும் சமூக முன்னேற்றத்துக்கான போராட்டத்துக்கும் எல்லா விடுதலை இயக்கங்களுக்கும் மிகவும் சாதகமான வெளிநாட்டுக் கொள்கை நிலைமைகளை உருவாக்குவதற்கு உதவுகின்றன.

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கில் உலக சோஷலிஸ்ட் அமைப்பு வகிக்கின்ற விசேஷமான பாத்திரத்தை மார்க்சிய-லெனினியவாதிகள் வலியுறுத்துகின்ற பொழுது அது பொது இலட்சியங்களால் ஒன்றுபட்ட தொழிலாளி வர்க்கத்தின்

ஆகப் பெரிய சாதனை என்றும் தலைமையான ஏகாதிபத்திய எதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்பு சக்தி என்றும் குறிப்பிடுகிறார்கள். இது உலகப் புரட்சிகர இயக்கத்தின் பிரதான கண்ணி; சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் பிரதான பொருளாதார, சமூக-அரசியல் மற்றும் சித்தாந்தச் சாதனைகள் அனைத்தும் அதில் குவிக்கப்பட்டிருக்கின்றன; அதனால் ஏற்படுகின்ற சக்திமிக்க அடிப்படையிலிருந்து புரட்சிகர விடுதலை இயக்கம் விரிவடைய முடியும். இந்தக் கண்ணியில்தான் அதன் முக்கியமான பலம் இருக்கிறது.

சோஷலிஸ்ட் நாடுகள் புரட்சிகர, ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுக்கு அனைத்து உதவியும் தருகின்றன. இன்றைய சோஷலிசம் அனைத்து விடுதலைப் புரட்சிகளுக்கும் ஆதர்சம் மற்றும் அரசியல் ஆதரவின் தோற்றுவாயாக இருக்கிறது. அது இருப்பது ஒன்றே வெற்றிக்கு உத்தரவாதம் என்று சொல்ல முடியாது, ஆனால் ஏகாதிபத்திய அமைப்பிலிருந்து விடுதலையடைந்த மிகச் சிறிய நாடுகள்கூட வெற்றியை வலுப்படுத்திக் கொள்வதையும் சோஷலிசத்தை நோக்கி முன்னேறுவதையும் அது சுலபமாக்குகிறது.

வெற்றியடைந்த புரட்சி சோஷலிசத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கும் பொழுது உலகெங்கிலுமுள்ள புரட்சிகர சக்திகளுக்கு சாத்தியமான ஒவ்வொரு வழியிலும் உதவ வேண்டும் என்று லெனின் கூறினார். அதே சமயத்தில் வெளியிலிருந்து செயற்கையான முறையில்

புரட்சியை விரைவுபடுத்த முடியும் என்று கருதியவர்களை லெனின் முற்றிலும் எதிர்த்தார்.

இன்று இருக்கின்ற சோஷலிசம் முற்போக்கான சமூக மாற்றத்துக்குரிய போராட்டத்தைப் பல வழிகளில் ஊக்குவிக்கிறது.

சமாதானத்துக்காகப் போராடுவதன் மூலம் மனிதகுலம் இருப்பதற்கு அவசியமான பிரதான நிபந்தனையை, சமூக முன்னேற்றத்தின் சாத்தியத்தை அது உறுதிப்படுத்துகிறது. அதே சமயத்தில் உலகப் பொருளாதாரததுடன் நூற்றுக் கணக்கான கண்ணிகளால் இணைக்கப்பட்ட சோஷலிஸ்ட் பொருளாதாரத்தின் ஸ்திரமான வளர்ச்சி பதட்ட நிலைத் தணிவின் பொருளாயத அடிப்படைகளை வலுப்படுத்துகிறது, வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகள் தமக்கிடையில் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதை ஊக்குவிக்கிறது.

இருக்கின்ற சோஷலிசம் சர்வதேச உறவுகளின் மீது மென்மேலும் அதிகரிக்கின்ற தாக்கத்தைக் கொண்டிருக்கிறது, அவை ஜனநாயகப் படுத்தப்படுவதை ஊக்குவிக்கிறது. சோஷலிசம் முழுமையான சமத்துவம், பிரதேச முழுமை, அரசு சுதந்திரம் மற்றும் அரசுரிமைக்கு மதிப்பளித்தல், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை ஆகிய கோட்பாடுகளையும் அளவுகோல்களையும் முன்வைத்திருக்கிறது; இவை சர்வதேச வாழ்க்கையில் மேலும் அதிகமாக நுழைந்து கொண்டிருக்கின்றன.

சோஷலிசம் தன்னுடைய சாதகங்களை எடுத்துக் காட்டுகின்ற பொழுது கம்யூனிஸ்ட் கருத்துக்கள் புதிய ஆதரவாளர்களைப் பெறு கின்றன, மூலதனத்துக்கு எதிராக உழைக்கும் மக்களின் போராட்டத்தை ஊக்குவிக்கின்றன. "... 'சோஷலிசம் உதாரணத்தின் சக்தியைக் கொண்டிருக்கிறது' என்று நாம் கூறினோம், இன்றும் கூறுகிறோம். தங்களுடைய ஆட்சியை மறுபடியும் ஏற்படுத்த விரும்புபவர்களுக்கு எதிராக பலாத்காரம் பயனுள்ளதாக இருக்கும். ஆனால் அந்தக் கட்டத்துடன் பலாத்காரத்தின் முக்கியத்துவம் முடிந்து விடுகிறது, அதற்குப் பிறகு செல்வாக்கும் உதாரணமுமே பயனளிக் கும். நாம் நடைமுறையில், உதாரணத்தின் மூலம் கம்யூனிசத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்ட வேண்டும்"* என்று லெனின் கூறினார்.

இன்று சோஷலிசம் கோடிக்கணக்கான மக் களின் சிந்தனைகளிலும் உணர்ச்சிகளிலும் மகத்தான செல்வாக்குப் பெற்றிருக்கிறது. அது உழைக்கும் மக்களுக்கு விடுதலை, மெய்யான ஜனநாயக உரிமைகள், சுபிட்சம், அறிவு வாய்ப்பு மற்றும் எதிர்காலத்தில் நம்பிக்கையைத் தர முடியும் என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறது. அது தன்னுடன் சமாதானம், விடுதலைக்கும் சுதந்திரத்துக்கும் போராடுகின்ற மக்களினங்

* V. I. Lenin, "Speech Delivered at a Meeting of Activists of the Moscow Organisation of the R.C.P.(B.), December 6, 1920", *Collected Works,* Vol. 31, p. 457.

களுக்கு ஆதரவு ஆகியவற்றைக் கொண்டுவரு கிறது. சோஷலிசம் மேலும் வளர்ச்சியடைகின்ற பொழுது அதன் முடிவில்லாத சாத்தியங்களுக் கும் முதலாளித்துவத்தின் மீது வரலாற்று ரீதியான மேன்மைக்கும் அது புதிய சான்றளிக் கும். சோஷலிஸ்ட் நாடுகளின் வேகமான, தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி, மக்களின் வாழ்க்கை நிலைமையில் அபிவிருத்தி, முதலாளித்துவ உலகத்துடன் பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் போட்டி யில் புதிய சாதனைகள் சோஷலிஸ்ட் கருத்துக் களை மேலும் கவர்ச்சிகரமாக்குவதுடன் வர்க்கப் போராட்டத்தில் இடதுசாரி சக்திகளின் நிலை களை வலுப்படுத்துகின்றன.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி தீவிரமடைவதன் தொடர்பாக இருக்கின்ற சோஷலிசம் விசேஷமான முக்கியத்துவத்தை அடைகிறது. சோஷலிசம், எல்லாவற்றுக்கும் முதலாவதாகப் பொருளாதார அரங்கத்தில் தன்னுடைய சாதகங்களை வெளிப்படுத்துகிறது. சோஷலிஸ்ட் நாடுகளின் ஸ்திரமான பொருளா தார வளர்ச்சி, நெருக்கடிகளும் வேலையில்லாத் திண்டாட்டமும் இல்லாதிருத்தல் சோஷலிஸ்ட் அல்லாத உலகத்தில் இருக்கின்ற உழைக்கும் மக்களிடம் மாபெரும் மனப்பதிவை ஏற்படுத்து கின்றன.

எதிரிடையான இரண்டு சமூக அமைப்பு களுக்கு இடையில் பிரதான போர்க்களமாக இருப்பது பொருளாதாரமே. சோவியத் ஆட்சி

அதிகாரத்தின் ஆரம்ப வருடங்களில் லெனின் பின்வருமாறு எழுதினார்: ''நாம் இப்போது நமது பொருளாதாரக் கொள்கையின் மூலம் சர்வதேச நிலைமை மீது நமது பிரதான செல் வாக்கைச் செயல்படுத்தி வருகிறோம். ...இந்தத் துறையிலான போராட்டம் இப்போது உலகளா வியதாகி விட்டது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடிந்ததால் நாம் சர்வதேச அளவில் நிச்சயமாயும் இறுதியாயும் வெற்றிபெற்று விட்டவர்களாவோம்.''*

உலக அரங்கத்தில் பிரதான சக்திகளின் இடைத்தொடர்பு மற்றும் அவற்றின் அரசியல் தாக்கத்தின் அளவு சோஷலிஸ்ட் மற்றும் முத லாளித்துவ நாடுகளின் பொதுவான பொருளா தார சக்திகளின் அளவையும் உலகத் தொழில் துறை உற்பத்தியின் மொத்த அளவில் அவற்றின் பங்கையும் அதிகமான அளவுக்குச் சார்ந்திருக் கிறது. சோஷலிஸ்ட் நாடுகளின் உற்பத்தி சக்தி எவ்வளவு அதிகமோ அந்த அளவுக்கு வரலாற்று வளர்ச்சியின் வேகம் மற்றும் திசை யின் மீது அதன் தாக்கமும் அதிகமாக இருக் கிறது, முதலாளித்துவம் சமூக முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு அந்த அளவுக்குக் குறைவான வாய்ப்புகளைப் பெறுகிறது.

சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலுள்ள பொருளாதாரப் போட்டியில்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 11, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 369.

பிரதான போக்கு பொருளாதார சக்திகளின் சமநிலை சோஷலிசத்துக்குச் சாதகமான முறையில் தொடர்ச்சியாகவும் முடிவில்லாமலும் மாறிக் கொண்டிருப்பதாகும். சோஷலிசம் பொருளாதாரப் போட்டியில் முதலாளித்துவத்தைத் தோற்கடிக்க முடியும் என்பதை சோவியத் பொருளாதார வளர்ச்சி விகிதங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தம்முடைய தொழில்துறை உற்பத்தியை 30 மடங்கு அதிகரிப்பதற்கு 80—150 வருடங்கள் எடுத்துக்கொண்டன என்றால் சோவியத் யூனியன் 40 வருடங்களில் அதைச் சாதித்திருக்கிறது. இவற்றில் 20 வருடங்கள் அந்நியப் படையெடுப்பாளர்களுக்கு எதிரான போர்களிலும் பொருளாதாரப் புனரமைப்பிலும் செலவிடப்பட்டன. இரண்டாவது உலக யுத்தம் சோவியத் யூனியனுக்கு ஏற்படுத்திய சேதத்தின் மொத்த மதிப்பு 679,000 மில்லியன் டாலர்கள் (1941ம் வருட விலைகளின்படி); அமெரிக்காவுக்கு அதன் பிரதேசத்தில் அநேகமாக எத்தகைய சேதமும் ஏற்படவில்லை; 1939—1944ம் வருடங்களுக்கு இடையில் அதன் தேசிய வருமானம் 96,000 மில்லியன் டாலர்கள் அதிகரித்தது. தற்பொழுது சோவியத் யூனியன் தொழில்துறை உற்பத்தியின் சராசரி வருடாந்தர அதிகரிப்பில் மட்டுமின்றி பல வகையான உற்பத்திகளின் தனிமுதலான வருடாந்தர அதிகரிப்பிலும் அமெரிக்காவை விஞ்சியிருக்கிறது.

பொருளாதார வளர்ச்சி விகிதங்களில் சோஷ

லிஸ்ட் நாடுகள் முதலாளித்துவ நாடுகளை மிகவும் அதிகமாக விஞ்சியிருக்கின்றன என்ற உண்மை வரலாற்று ரீதியில் சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் பொருளாதாரப் போட்டியின் போக்கை மென்மேலும் அதிகமாக பாதிக்கும். 1950—1982ம் வருடங்களில் சோஷலிஸ்ட் நாடுகளின் தொழில்துறை உற்பத்தி 16 மடங்கு அதிகரித்த பொழுது, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் 3.8 மடங்குதான் அதிகரித்தது. சோஷலிஸ்ட் நாடுகளில் தேசியப் பொருளாதார வளர்ச்சி வேகம் தீவிரமாக அதிகரிப்பதன் அடிப்படையில் உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது; பொருளாதார வளர்ச்சி மற்றும் அதைப் போலவே விஞ்ஞான மற்றும் கலாசார வளர்ச்சி மேலும் அதிகரிப்பதற்கும் வாய்ப்புகள் பெருகியுள்ளன.

சோஷலிசம் மற்றும் முதலாளித்துவத்தின் பொருளாதார சக்திகளுக்கு இடையிலான சமநிலையில் மாற்றங்கள் எவ்வளவு அதிகரிக்கின்றனவோ அவ்வளவு அவற்றுக்கு இடையிலுள்ள போட்டியும் தீவிரமடைகிறது. ஏகபோக மூலதனம் தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தையும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ''ஒருங்கிணைப்பையும்'' இயன்ற அளவுக்குப் பயன்படுத்துவதன் மூலம், பொருளாதாரத்தின் மீது அரசு-ஏகபோக நிர்வாகத்தை ஏற்படுத்துவதன் மூலம் வளர்ச்சி விகிதங்களிலுள்ள இடைவெளியைக் குறைப்பதற்கும் அடைப்பதற்கும் முயற்சி

செய்கிறது. ஆனால் ஒரு சில முதலாளித்துவ நாடுகளே வெற்றி அடைந்திருக்கின்றன; அதுவும் குறைவான காலத்துக்கு மட்டுமே. மொத்தத்தில் முதலாளித்துவப் பொருளாதாரம் ஸ்திரமற்றதாக, பின்னடைவுகள், பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், விலைகள் அதிகரிப்பு, இதரவற்றினால் எப்பொழுதுமே பாதிக்கப்படுவதாக இருக்கிறது.

**தொழில்துறை வளர்ச்சி விகிதங்களைப் பின்வரும் அட்டவணை எடுத்துக்காட்டுகிறது (1950 = 1):**

| நாடுகள் | *1960* | *1965* | *1970* | *1975* | *1980* |
|---|---|---|---|---|---|
| உலக மொத்தம் | *2.1* | *2.8* | *3.9* | *5.0* | *6.3* |
| சோஷலிஸ்ட் நாடுகள் | *3.5* | *5.0* | *7.2* | *10.8* | *14.0* |
| **சிஎம்இஏ** நாடுகள் | *3.0* | *4.5* | *6.8* | *10.0* | — |
| சோவியத் யூனியன் | *3.0* | *4.6* | *6.9* | *9.9* | *12.0* |
| **சிஎம்இஏ** நாடுகள் (சோவியத் யூனியன் நீங்கலாக) | *3.1* | *4.5* | *6.6* | *10.2* | — |
| பல்கேரியா | *4.0* | *6.9* | *11.6* | *17.9* | *24.0* |
| ஹங்கேரி | *2.7* | *3.9* | *5.2* | *7.1* | *8.4* |
| ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு | *2.9* | *3.9* | *7.4* | *7.3* | *9.3* |
| கியூபா | *1.0* | *0.99* | *1.1* | *1.7* | *2.0* |
| மங்கோலியா | *2.8* | *4.5* | *7.1* | *11.1* | *16.0* |
| போலந்து | *3.2* | *4.7* | *7.1* | *11.6* | *15.0* |
| ருமேனியா | *3.4* | *6.5* | *11.0* | *21.0* | *33.0* |

| நாடுகள் | 1960 | 1965 | 1970 | 1975 | 1980 |
|---|---|---|---|---|---|
| செக்கோஸ்லோவாக்கியா | 2.7 | 3.5 | 4.9 | 6.7 | 8.4 |
| வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் | 1.6 | 2.2 | 2.8 | 3.2 | — |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 1.5 | 2.0 | 2.4 | 2.6 | 3.3 |
| EEC உறுப்பினர் நாடுகள் | 1.8 | 2.3 | 3.0 | 3.2 | — |
| கிரேட் பிரிட்டன் | 1.4 | 1.6 | 1.8 | 1.8 | 2.0 |
| பிரான்ஸ் | 1.8 | 2.3 | 3.0 | 3.4 | 3.9 |
| மேற்கு ஜெர்மனி | 2.4 | 3.2 | 4.3 | 4.4 | 5.2 |
| இத்தாலி | 2.4 | 3.3 | 4.6 | 5.0 | 6.6 |
| பெல்ஜியம் | 1.4 | 1.8 | 2.3 | 2.5 | — |
| நெதர்லாந்து | 1.8 | 2.4 | 3.6 | 4.2 | — |
| லக்ஸம்பர்க் | 1.5 | 1.7 | 1.9 | 1.8 | — |
| டென்மார்க் | 1.6 | 2.2 | 2.7 | 2.8 | — |
| ஜப்பான் | 4.3 | 7.5 | 15 மடங்கு | 17 மடங்கு | 24 மடங்கு |

உற்பத்தி சக்திகளை இன்னும் சிறப்பான முறையில் உபயோகிப்பதற்கும் சோஷலிஸ்ட் அமைப்பின் சாதகங்களை முழுமையாக வெளிப்படுத்துவதற்கும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றும் இதர ஆட்சியிலிருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சிகளும் எடுக்கின்ற

நடவடிக்கைகள் முதலாளித்துவத்துடன் சமா தான ரீதியான பொருளாதாரப் போட்டியில் மென்மேலும் புதிய நிலைகளை வெல்வதற்கு உலக சோஷலிஸ்ட் அமைப்புக்கு வாய்ப்பளிக் கின்றன. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வியல் புரட்சியின் சாதனைகளை முழுமையாக உபயோகித்து உற்பத்தித் திறமையை அதிகரிப் பதும் தரத்தை உயர்த்துவதும் சிறப்பான இயந்திரங்களையும் வேலை முறைகளையும் இயன்ற அளவுக்கு விரைவாக உபயோகிப்பதும் பொருளாதாரத்தின் கேந்திரமான துறைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதும் உலக சோஷலிசத்தின் வெற்றிகரமான தாக்குதலுக்கு உதவுகின்றன.

முதலாளித்துவத்துடன் ஒப்பிடும் பொழுது புதிய சோஷலிஸ்ட் அமைப்பு தன்னுடைய சாதகங்களை எடுத்துக்காட்டுகின்ற மற்றொரு துறை சமூக உறவுகளாகும். சோஷலிசத்தின் வாய்ப்புகளும் சாதகங்களும் அரசியல் துறையில், சோஷலிசத்தின் அரசியல் அமைப்பின் வளர்ச்சி யில், ஜனநாயகத்தின் முன்னேற்றத்திலும் ஆழ மடைவதிலும் வருடந்தோறும் அதிக முழுமை யாக வெளிப்படுகின்றன. சோவியத் யூனியனி லும் மற்ற சோஷலிஸ்ட் நாடுகளிலும் தேசியப் பிரச்சினை ஜனநாயக ரீதியில், நியாயமான முறையில் தீர்க்கப்பட்டது. ஏகபோகங்கள் உழைக் கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் சமூக உரிமைகளையும் தாக்கும் பொழுது (பணவீக்கம் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம்), முத



12–730

லாளித்துவ உலகத்தில் இனவெறிக் கலவரங்களும் அரசியல் அராஜகமும் தாண்டவமாடும் பொழுது சோஷலிஸ்ட் நாடுகளின் வெற்றிகரமான சாதனைகள் மிகவும் குறிப்பிடத்தக்கவையே.

சோஷலிஸ்ட் நாடுகள் தம்முடைய மக்களுக்கு ஜீவாதாரமான சமூக-பொருளாதார உரிமைகளையும் சுதந்திரங்களையும் உத்தரவாதமளிப்பதன் மூலம் முதலாளித்துவ நாடுகளிலுள்ள உழைக்கும் மக்கள் அதே உரிமைகள் மற்றும் சுதந்திரங்களில் பலவற்றுக்குப் போராடுவதற்கு ஊக்கமளிக்கின்றன; அதன் மூலம் மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் அவற்றின் சக்தியைப் பலப்படுத்துகின்றன.

இன்றைய சோஷலிசம் இருப்பதும் மிக முக்கியமான பொருளாதார, சமூக, அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதன் வெற்றியும் தொழிலாளி வர்க்கம் மற்றும் இதர பகுதியினரது கோரிக்கைகளுக்குப் பணியும்படி ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தை மசியவைக்கின்றன. அவர்களுடைய உடனடி பொருளாதாரக் கோரிக்கைகளையாவது அது தீர்க்க வேண்டும்.

உலக சோஷலிஸ்ட் அமைப்பு ஏற்பட்டிருப்பதனால் எதிர்ப்புரட்சியை ஏற்றுமதி செய்வதற்கு ஏகாதிபத்தியத்தின் வாய்ப்புகள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன. உழைக்கும் மக்கள் ஆட்சியதிகாரத்தைப் பெறுவதற்கு சமாதான முறைகளை உபயோகிப்பதை, உள்நாட்டு யுத்தத்தைத் தவிர்ப்பதை, நாடாளுமன்றம் உள்பட முதலாளித்துவ ஜனநாயகத்தின் இன்றைக்

கிருக்கும் வடிவங்களைப் பயன்படுத்துவதை இது சாத்தியமாக்கியிருக்கிறது.

ஒரு நாடு சோஷலிசத்துக்கு மாறுகின்ற வடிவங்கள் முதலாவதாக, உள்நாட்டு வர்க்க சக்திகளின் ஸ்தூலமான இடைத்தொடர்பால் நிர்ணயிக்கப்படுகின்றன என்பது உண்மையே. ஆனால் சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கின்ற வடிவங்கள், முறைகள் மறறும் வழிகளின் மீது சோஷலிஸ்ட் அமைப்பின் தாக்கம் மென்மேலும் அதிகரிப்பது நம் காலத்திய உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் வளர்ச்சியின் முக்கிய கூறாகும்.

உலக சோஷலிஸ்ட் அமைப்பும் சோஷலிசத்தின் உதாரணமும் தேசிய விடுதலை இயக்கத்தின் உள்ளடக்கம், வடிவங்கள் மற்றும் சமூக-பொருளாதாரத் திசையமைவின் மீது மாபெரும் தாக்கத்தைச் செலுத்துகின்றன. ஏகாதிபத்தியத்தின் அரசியல் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்த நாடுகள் சோஷலிசத்தின் அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன; அது அவற்றின் தேசிய சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் பின்தங்கிய நிலையை அகற்றுவதற்கும் பொருளாதாரச் சுதந்திரம் மற்றும் சமூக-பொருளாதார முன்னேற்றத்தைச் சாதிப்பதற்கும் செயலுரமிக்க வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு உதவுகிறது.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கும் புதிதாக விடுதலையடைந்த நாடுகளுக்கும் இடையில் பரிபூரண சமத்துவத்தையும் பரஸ்பர மரியாதையையும்

அடிப்படையாகக் கொண்ட உறவுகள் வளர்ச்சியடைந்திருக்கின்றன. சோஷலிஸ்ட் நாடுகளுடன் கூட்டணி சர்வதேச அரங்கத்தில் சுதந்திரமான சக்தி என்ற முறையில் இந்தப் புதிய அரசுகளின் முக்கியமான பாத்திரத்தை உயர்த்துகிறது. இக்கூட்டணி மென்மேலும் நெருக்கமாகிக் கொண்டிருக்கிறது; ஏனென்றால் அது ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும், சமாதானத்தை ஆதரித்தும் காலனியாதிக்கம் மற்றும் புதிய காலனியாதிக்கத்தை அகற்றுவதற்கும் நடைபெறுகின்ற போராட்டத்தின் பொது நலன்களின் மீது நிறுவப்பட்டிருக்கிறது. புதிதாக விடுதலையடைந்த நாடுகள் ஏகாதிபத்தியத்தின் இராணுவத் தாக்குதல்களுக்கு இலக்காகின்ற பொழுது சோஷலிஸ்ட் நாடுகள் அவற்றுக்கு இராணுவ மற்றும் அரசியல் உதவி அளிக்கின்றன. அவை பொருளாதார சுதந்திரத்துக்கும் பொருளாதார மற்றும் கலாசாரப் பின்தங்கிய நிலையை அகற்றுவதற்கும் நடத்துகின்ற போராட்டத்தில் சோஷலிஸ்ட் நாடுகளுடன் ஒத்துழைப்பு உதவுகிறது.

புதிதாக விடுதலையடைந்த நாடுகளில் ஒரு பெரிய கோஷ்டி (20க்கு அதிகமான நாடுகள்) சோஷலிஸ்ட் திசையமைவைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன. இன்றைய சோஷலிசத்தின் உதாரணம், சோஷலிஸ்ட் நாடுகளில் உற்பத்தி சக்திகள், விஞ்ஞானம் மற்றும் கலாசாரத்தின் வேகமான வளர்ச்சி, முதலாளித்துவத்துடன் போட்டியில் அவற்றின் வெற்றி ஆகியவை

இந்த நாடுகளின் மக்கள் சோஷலிஸ்ட் திசை யமைவுப் பாதையைத் தேர்ந்தெடுப்பதற்கு உதவி செய்தன. புதிதாக விடுதலையடைந்த அரசு களைச் சேர்ந்த மக்கள் தம்முடைய இலட்சியங் கள் சோஷலிஸ்ட் நாடுகளில் நிறைவேறிவரு வதைக் காண்கிறார்கள்.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் வளர்முக நாடுகளுக்குச் செய்கின்ற ‘‘உதவியைப்’’ பற்றி அடிக்கடி பெருமையாகப் பேசி வரு கின்றன. ஆனால் இந்த உதவியின் விளை வாகப் பணக்கார நாடுகள் மேலும் அதிகப் பணக்கார நாடுகளாகின்றன, ஏழை நாடுகள் மேலும் அதிக ஏழ்மையான நாடுகளாகின்றன. சமத்துவமற்ற பரிவர்த்தனையினால்—அதனால் லாபமடைகின்ற ஏகபோகங்கள் அதை ஆதரிக் கின்றன—வளர்முக நாடுகள் ஏற்றுமதி செய் கின்ற மூலப் பொருள்களின் விலைகளுக்கும் அவை இறக்குமதி செய்கின்ற தொழில்துறை உற்பத்திப் பொருள்களின் விலைகளுக்கும் இடை யிலுள்ள வித்தியாசத்தினால், பணவீக்கத்தி னால், பெட்ரோல் மற்றும் பெட்ரோலியப் பொருள்களின் விலை ஏற்றத்தினால் இந்த நிலைமை ஏற்படுகிறது. வளர்முக நாடுகளில் செய்யப்படுகின்ற மூலதன முதலீடுகளும் அந்த நாடுகளை ஏழையாக்குகின்றன; ஏனென்றால் முதலீடுகளைக் காட்டிலும் அதிகமான தொகை லாபம் என்ற வடிவத்தில் வருடந்தோறும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1980க்களின் ஆரம் பத்தில் வளர்முக நாடுகளின் கடன் 500 பில்லி

யன் டாலர்கள் என்ற மாபெரும் அளவை எட்டியிருந்தது.

சோஷலிசம் வளர்முக நாடுகளுக்குப் பல்வேறு விதமான பொருளாதார உதவியைத் தருகிறது; அதன் மூலம் அவை முதலாளித்துவத்தைச் சார்ந்திருப்பதைக் குறைத்து அவை தம்முடைய பொருளாதாரத்தையும் சமூகத் துறையையும் புனரமைப்பு செய்வதை சுலபமாக்குகிறது. சோஷலிஸ்ட் நாடுகள் வளர்முக நாடுகளின் தொழில் வளர்ச்சிக்கு அவசியமான இயந்திரங்களை விற்பனை செய்கின்றன; அவற்றிடமிருந்து வழக்கமான ஏற்றுமதிப் பொருள்களை வாங்குகின்றன. இது அவற்றின் வர்த்தக சமநிலைக்கும் வழங்கீட்டில் சமநிலைக்கும் உதவி புரிகிறது. புதிதாக விடுதலை பெற்ற நாடுகளுக்கு அவை சுலபமான நிபந்தனைகளில் கடன்களையும் கடன்வசதிகளையும் அளிக்கின்றன. சோஇஎ நாடுகள் ஆசியா, ஆப்பிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவிலுள்ள வளர்முக நாடுகளுக்குக் கொடுத்திருக்கும் மொத்தக் கடனின் அளவு 1970க்களின் கடைசியில் சுமார் 15,000 மில்லியன் ரூபிள்களாக இருந்தது.

கடன்வசதிகளை அளிப்பதில் இயந்திர மற்றும் தொழில்நுட்பத்திறன் ஏற்றுமதியில் ஏகாதிபத்திய ஏகபோகத்தை சோஷலிசம் ஒழித்து விட்டபடியால் மேற்கு நாடுகளின் மூலதனம் காலனியாதிக்கச் சுரண்டலின் முரட்டுத்தனமான, பகிரங்கமான வடிவங்களைக் கைவிடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது; சில சமயங்

களில் வட்டி விகிதம் குறைக்கப்படுவதுடன் கடன் தீர்க்கப்பட வேண்டிய காலமும் நீட்டிக்கப் படுகிறது. சோஷலிஸ்ட் அரசுகள் புதிதாகச் சுதந்திரமடைந்திருக்கின்ற அரசுகளுக்குச் செய் திருக்கின்ற மறைமுக உதவி என்று இதைக் குறிப்பிடுவது பொருத்தமே.

மொத்தத்தில் சிஎம்இஏ நாடுகள் 80 இளம் அரசுகளுக்குப் பொருளாதார மற்றும் தொழில் நுட்ப உதவி உளிக்கின்றன. சோவியத் யூனியன் மட்டுமே வளர்முக நாடுகளில் சுமார் ஆயிரம் தொழில் நிறுவனங்களை நிர்மாணிப்பதில் அல்லது புனரமைப்பதில் உதவியளித்திருக்கிறது. இவற்றில் 550க்கும் அதிகமானவை ஏற்கெனவே முடிக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, 1957—1977ம் வருடங்களில் சோவியத் யூனியன் ஆண்டு தோறும் 5.3 மில்லியன் டன்கள் எஃகு மற்றும் 4 மில்லியன் டன்களுக்கும் அதிகமான இரும்புத் தகடுகளை உற்பத்தி செய்கின்ற இரும்பு, எஃகுத் தொழிற் சாலைகளை நிர்மாணிப்பதற்கு உதவி செய்தது. இந்தியாவின் எஃகு உற்பத்தியில் 40 சதவிகி தத்தை உற்பத்தி செய்கின்ற பிலாய் மற்றும் பொக்காரோ உருக்காலைகள், அல்ஜீரியா, துருக்கி மற்றும் இதர நாடுகளில் உள்ள உலோகத் தொழிற்சாலைகள் இவற்றிலடங்கும்.

இளம் அரசுகளுடன் ஒத்துழைப்பு என்ற சுற்றுவட்டத்துக்குள் சோஷலிஸ்ட் நாடுகள் அவற்றின் நிபுணர்களுக்கும் திறமையான தொழி லாளர்களுக்கும் பயிற்சியளிப்பதில் கணிசமான

உதவி செய்கின்றன. மொத்தத்தில் சோஷலிஸ்ட் நாடுகள் ஆயிரக்கணக்கான நிபுணர்களுக்குத் தமது விஞ்ஞான நிலையங்களிலும் தொழிற் சாலைகளிலும் மற்றும் வளர்முக நாடுகளிலுள்ள தொழிற்சாலைகளிலும் பயிற்சியளித்து உதவி செய்திருக்கின்றன. விஞ்ஞானிகள் மற்றும் கலாசார ஊழியர்களுக்கும் பயிற்சி கொடுப் பதிலும் சோஷலிஸ்ட் நாடுகள் அதிகமான உதவி செய்திருக்கின்றன.

புதிதாக விடுதலையடைந்த நாடுகளின்பால் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கையை சோவியத் யூனியனும் மற்ற சோஷலிஸ்ட் நாடு களும் உறுதியாக எதிர்க்கின்றன. சக்திகளின் புதிய சமநிலை ஏற்பட்டிருப்பதால் சில உதார ணங்களில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் விவ காரங்களில் பகிரங்கமாகத் தலையிடுவதற்கு ஏகாதிபத்தியம் துணியவில்லை. உலக சோஷ லிஸ்ட் அமைப்பின் நிலைகள் பலமடைந்தது தேசிய விடுதலை இயக்கம் ஓங்குவதற்குக் காரணமாக இருந்தது மட்டுமல்லாமல் ஒரு காலத்தில் காலனிகளாக இருந்த பல நாடுகளின் மக்கள் சமாதான வழியில் சுதந்திரத்தைப் பெறுவதற்குரிய நிலைமைகளை உருவாக்கியது.

சோஷலிஸ்ட் நாடுகள் புதிதாக சுதந்திர மடைந்த அரசுகளுடன் ஒத்துழைப்பதற்குரிய மிகச் சிறப்பான நிலைமைகளை உருவாக்கு வதற்கும் அவற்றில் சில அரசுகளுடன் உறவு களில் ஏற்படக் கூடிய சிக்கல்களை அகற்று வதற்கும் தொடர்ச்சியாகப் பாடுபடுகின்றன.

சோஷலிஸ்ட் நாடுகள் இந்த அரசுகளுடன் சிற்சில சமயங்களில் ஏற்படுகின்ற கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கும் தனிப்பட்ட வேறுபாடுகள் ஒத்துழைப்பை பாதிக்காமலிருப் பதற்கும் லெனினுடைய கோட்பாடுகளின் அடிப்படையில் முரணில்லாமல் முயன்று வரு கின்றன. அதே சமயத்தில் புதிதாக விடுதலை யடைந்த அரசுகள் சிலவற்றின் அரசாங்க நடவடிக்கைகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தி களின் ஒற்றுமையை அரித்தழிக்கின்றன; சோஷ லிஸ்ட் நாடுகள் இந்த நடவடிக்கைகளை விமர் சிப்பதுடன் அவற்றின் சோவியத் எதிர்ப்பு, கம்யூனிஸ்ட் எதிர்ப்புத் தாக்குதல்களை நிராகரிக் கின்றன.

உலகத்தில் சில வளர்முகப் பிரதேசங்களில் ஏகாதிபத்தியம் ஏற்படுத்தியிருக்கின்ற நெருக் கடிகளை நியாயமாகவும் சமாதான முறையிலும் தீர்ப்பதற்கு சோவியத் யூனியனும் மற்ற சோஷ லிஸ்ட் நாடுகளும் மிகவும் பாடுபடுகின்றன. மத்திய கிழக்குப் பிரதேசத்தில் ஏகாதிபத்தியச் சதிகளை எதிர்த்தும் அரபு மக்களுக்கு விரோத மான காம்ப் டேவிட் ஒப்பந்தத்தின் விளைவு களை எதிர்த்தும் அவை தொடர்ச்சியாகப் போராடுகின்றன. மத்திய கிழக்கில் ஏற்படு கின்ற பிரச்சினைகளை சமாதான முறையில் தீர்ப்பதற்கு சோஷலிஸ்ட் நாடுகள் பாடுபடு கின்றன. இந்தியப் பெருங்கடலை சமாதான மண்டலமாக மாற்ற வேண்டும் என்னும் கூட்டு சேராத நாடுகளின் கோரிக்கைக்கு அவை முழு

ஆதரவளிக்கின்றன; ஆசியாவில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு அவை போராடுகின்றன.

சோஷலிஸ்ட் நாடுகள் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் மீது மாபெரும் தாக்கத்தைச் செலுத்தினாலும் அதே சமயத்தில் முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கம், புதிதாக விடுதலையடைந்த அரசுகளின் மக்கள் ஆகியோரது ஆதரவு அதற்கு அவசியமாக இருக்கிறது. எல்லாப் புரட்சிகர சக்திகளின் ஒருமைப்பாட்டின் மூலமாகவே சமாதானம், ஜனநாயகம், தேசிய சுதந்திரம் மற்றும் சோஷலிசத்தை ஆதரித்து வெற்றிகரமாகப் போராட முடியும், ஏகாதிபத்தியத்தின் நிலைகளை பலவீனப்படுத்தி அதன் இராணுவ துர்ச்சாகசங்களைத் தடுக்க முடியும். ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான கூட்டு நடவடிக்கையில் ஒன்றுசேர்ந்திருக்கின்ற இன்றைய மெய்யான புரட்சிகர சக்திகள் அனைத்தும் சோஷலிசத்தையும் அதன் சாதனைகளையும் பாதுகாப்பது தம் கடமையென்று கருதுகின்றன.

மற்ற புரட்சிகர சக்திகள் சோஷலிஸ்ட் நாடுகளுடன் கொண்டிருக்கின்ற ஒருமைப்பாடு சமாதானத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் நடைபெறுகின்ற போராட்டத்தில் இன்றைய சோஷலிசத்துடன் கூட்டு நடவடிக்கையில் வெளிப்படுகிறது; எல்லா மக்களினங்களின் ஜீவாதாரமான நலன்களுக்கும் உரித்தான சகோதர நாடுகளின் சமாதான வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றியும் சமூகத்தை சோஷலிஸ்ட் பாணியில்

மாற்றியமைப்பதைப் பற்றியும் உண்மையைப் பரப்புவதில் வெளிப்படுகிறது. இருக்கின்ற சோஷலிசத்தைப் பற்றி அவதூறு செய்கின்ற, மற்ற புரட்சிகர சக்திகளை அதிலிருந்து பிரிக்கின்ற, அதன் புரட்சிகர இலட்சியங்களை மாசு படுத்துகின்ற முதலாளி வர்க்கப் பிரச்சாரத்தையும் இந்த ஒருமைப்பாடு நிராகரிக்கிறது.

சோஷலிஸ்ட் நாடுகளுடன் சர்வதேச ஒருமைப்பாட்டைப் பின்பற்றுவதில் கம்யூனிஸ்ட் எதிர்ப்பின் எல்லா வடிவங்களுக்கும் எதிராகப் போராடுவது மிகவும் முக்கியமாக இருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சிகள் தம் கொள்கையிலிருந்து வேறுபடுகின்ற அல்லது தம் நடவடிக்கைகளை விமர்சிக்கின்ற ஒவ்வொருவரையும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர் என்று கருதுவதில்லை. ஏகாதிபத்திய மற்றும் பிற்போக்கு சக்திகள் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக மட்டுமல்லாமல் மற்ற ஜனநாயகவாதிகளுக்கும் ஜனநாயக உரிமைகளுக்கும் எதிரான தமது போராட்டத்தில் கம்யூனிஸ்ட் எதிர்ப்பைக் கருவியாக உபயோகப்படுத்தின, இன்னும் உபயோகப்படுத்துகின்றன. இந்த சக்திகள் சோவியத்-எதிர்ப்புப் பிரச்சார இயக்கங்களைப் பயன்படுத்தி தொழிலாளி வர்க்க ஒற்றுமையையும் பொதுஜன, ஜனநாயக சக்திகளுக்கு இடையில் ஒத்துழைப்பையும் அழிப்பதற்கு முயற்சி செய்கின்றன.

சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் சித்தாந்தப் போட்டியின் இன்றைய கட்டத்தில் ''இடது''சாரி சந்தர்ப்பவாதம்

மற்றும் அதிதீவிரவாதத்தின் பல்வேறு போக்குகளையும் எதிர்த்து நடைபெறுகின்ற போராட்டம் முக்கியத்துவம் உடையதாகும். ''இடது'' சரரி சந்தர்ப்பவாதம் மற்றும் அதிதீவிரவாதம் சித்தாந்த ரீதியில் பல கோஷ்டிகளைக் கொண்டிருக்கிறது: இவற்றில் சில திரோத்ஸ்கியவாதத்தையும் அராஜகவாதத்தையும் ஆதரிக்கின்றன, மற்றும் சில தம்மை பயங்கரவாதிகள் என்று சொல்லிக்கொள்கின்றன, இதரவை. இக்கோஷ்டிகள் மறுபடியும் தோன்றியிருப்பது ஒரு பக்கத்தில், முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி தீவிரமடைவதையும், மறு பக்கத்தில் உலக ரீதியில் சித்தாந்தப் போராட்டம் முனைப்படைந்திருப்பதையும் சுட்டிக்காட்டுகிறது. ''இடது''களுக்கு எதிரான போராட்டத்தில் சந்தர்ப்பவாதம் மற்றும் அதனை ஒட்டிய சோஷலிஸ்ட் எதிர்ப்பு அதிதீவிரவாத இயக்கங்களுக்கும் தீவிரமான கொள்கைகளைக் கொண்ட பாட்டாளி வர்க்கம் அல்லாத பகுதியினர் முதலாளித்துவத்தை எதிர்த்துச் செய்கின்ற உண்மையான மறுப்புக்கும் இடையில் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சிகள் வற்புறுத்துகின்றன.

சோஷலிஸ்ட் நாடுகளுடன் இன்னும் கூடுதலான ஒத்துழைப்பை விரும்புகின்ற சக்திகள் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும் உலகப் புரட்சிகர இயக்கத்தின் பல்வேறு பிரிவுகளுக்கிடையில் ஒத்துழைப்பையும் பரஸ்பரம் புரிந்துகொள்ளுதலையும் தீவிரமாக ஆதரித்துப் பரப்பு

கின்றன. உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் கேந்திரமான உறுப்பு, மத்தியத் தூண் சோஷலிஸ்ட் குடும்பமே என்ற உண்மையிலிருந்து அவை தொடங்குகின்றன.

சோஷலிஸ்ட் நாடுகள் ''தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ள'' முற்றிலும் சக்தி உடையவை, மற்ற நாடுகளைச் சேர்ந்த புரட்சிக் காரர்கள் அவற்றை நேரடியாக ஆதரிக்கக் கூடாது, அப்பொழுதுதான் சோஷலிஸ்ட் நாடுகளுக்கு எதிரான முதலாளித்துவப் பிரச்சாரம் அவர்களை பாதிக்காது, மேலும் அவர்கள் சோஷலிஸ்ட் நாடுகளைப் பற்றி விமர்சன நிலையைக் கடைப்பிடிக்க முடியும் என்று சில சமயங்களில் சொல்லப்படுகிறது. பல்கேரியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான தோடர் ஷீவ்கவ் இவர்களைப் பற்றிக் கூறியதை இங்கே நினைவு படுத்துவோம்: ''தங்களைப் 'புரட்சிக்காரர்கள்' என்று சொல்லிக் கொண்டாலும் சோவியத் யூனியனிலிருந்து நாங்கள் 'சுதந்திரமானவர்கள்' என்று காட்டிக் கொள்வதில் அதிகமான அக்கறை கொண்டவர்கள் இன்னும் உலகத்தில் இருக்கிறார்கள்; இவர்கள் முதலாளி வர்க்கம் தங்களைக் காப்பியடிப்பவர்கள் என்று குறை சொல்லுமே என்று பயந்துபோய் முதலாளித்துவக் கருத்துக்களின் ஆதிக்கத்துக்குள் முற்றிலும் விழுந்து விடுகிறார்கள்; இவர்கள் எல்லாவற்றையும்—புரட்சியையும் சோஷலிசத்தை நிர்மாணிக்கின்ற சரியான வழியையும்கூட—ஆச்சரியப்படக் கூடிய முறையில் சுலபமாகக் கைவிடு

வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.''*

ஆனால் சந்தர்ப்பவாதத்துக்குச் சலுகையளிப்பதன் மூலம் தற்காலிகமான பலன் கிடைத்தால்கூட, நெடுங் காலப் பார்வையில் அது சோஷலிசத்துக்கு ஆபத்தையே ஏற்படுத்தும் என்பதை வாழ்க்கை எடுத்துக்காட்டியிருக்கிறது.

உலக சோஷலிஸ்ட் அமைப்பின் அனுபவத்தைப் பற்றி எத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது என்ற போராட்டம் புரட்சிகர வளர்ச்சி மற்றும் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணித்தலைப் பற்றிய பொது விதிகளை எட்டுவது நிச்சயம். புரட்சிகரக் கட்சிகள் இவ்விதிகளைப் புரிந்து கொள்வதையும் அவற்றைக் கடைப்பிடித்தலையும் அடிப்படையாகக் கொண்டு தம்முடைய கொள்கைகளையும் அரசியல் நடவடிக்கைகளையும் அமைத்துக் கொள்கின்றன. புரட்சிகரச் செயல்திட்டத்தையும் செயல்முறையையும் விரித்துரைத்தலும் முழுமையாக்குதலும் இவற்றின் சித்தாந்தப் பணியின் முக்கியமான பகுதியாக இருக்கின்றன. உலக சோஷலிசத்தின் வளமான அனுபவம் புரட்சிகரக் கருத்துக்களின் வற்றாத ஊற்றாகும்.

* * *

உலக சோஷலிஸ்ட் அமைப்பு கடந்த முப்பதாண்டுகளுக்கும் அதிகமான காலத்தில் சகோ

---

* தோடர் ஷீவ்கவ், **வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணிப்பதற்குரிய பிரச்சினைகள்,** மாஸ்கோ, 1976, பக்கம் 359 (ருஷ்ய மொழியில்).

தர நாடுகளுக்கு இடையில் உறவுகளை அபி விருத்தி செய்து, ஒத்துழைப்பை வலுப்படுத்து கின்ற கேந்திரமான பிரச்சினைகளை வெற்றிகர மாகத் தீர்க்க முடிந்திருக்கிறது. சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் நட்புறவையும் ஒத்து ழைப்பையும் வலுப்படுத்துவதும் ஒற்றுமையும் உலக சோஷலிஸ்ட் குடும்பத்தின் பிரதான போக்காக இருக்கின்றன; அது உலக சோஷலிஸ்ட் அமைப்பின் மாபெரும் வாய்ப்பு வளத்தை முழுமையாக உபயோகிப்பதை சாத்தியமாக்கி யிருக்கிறது. எதிர்காலம் சோஷலிஸ்ட் நாடுகள் மத்தியில் சகோதர ஒற்றுமைக் கொள்கைக்கு, சமாதானம் மற்றும் முன்னேற்றக் கொள்கைக்கு, நம் காலத்தின் எல்லாப் புரட்சிகர சக்தி களுடனும் ஒற்றுமைக் கொள்கைக்குச் சொந்த மாகும்.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்துக்களையும் அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளையும் **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

உங்கள் கடிதங்களைத் தயவு செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

இன்றைய சமூக வளர்ச்சியில் உள்ள ஏராளமான பிரச்சினைகளை ஆராய்கின்ற பிரசுரங்கள் **அரசியல் விளக்க வெளியீடு** என்னும் தலைப்பில் வெளியிடப்படுகின்றன. இவை எளிமையான முறையில் எல்லா வாசகர்களுக்காகவும் எழுதப்பட்டவை.

இப்பிரசுரங்கள் சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் செய்முறை அம்சங்களை, பொருளாதாரத்தின் தனிக்கூறுகளை, விஞ்ஞான-தொழில்நுட்பவியல் புரட்சியை, சோஷலிஸ்ட் சமூகத்தில் தனிநபரின் வளர்ச்சியை, உலக சமாதானத்துக்கும் சமாதான சகவாழ்வுக்குமான போராட்டத்தின் பிரச்சினைகளை விளக்கிக் கூறுகின்றன.

மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைக் கற்பதிலும் சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் செய்முறைப் பிரச்சினைகளை ஆராய்வதிலும் அக்கறையுள்ளவர்களுக்கு இப்பிரசுரங்கள் மிகவும் உதவியளிக்கும்.